වාර්ෂික කාර්යසාධන වාර්තාව

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

ANNUAL PERFORMANCE REPORT

2022



ශ්‍රී ලංකා ගුවන් හමුදාව

இலங்கை விமானப் படை

SRI LANKA AIR FORCE

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2022
இலங்கை விமானப் படை
செலவினத் தலைப்பு இல 224

உள்ளடக்கம்

பக்க இல.

விமானப் படைத் தளபதியின் செய்தி 05 - 06

அத்தியாயம் 01 07

1. **நிருவாகச் சுருக்கம்** 07
   - 1.1 அறிமுகம் 07 - 08
   - 1.2 நோக்கு, பணி மற்றும் முக்கிய ஆற்றல்கள் 08 - 09
   - 1.3 பிரதான தொழிற்பாடுகள் 09
   - 1.4 நிறுவன விளக்கப்படம் 10
   - 1.5 இலங்கை விமானப் படையின் பிரதான பணிப்பகங்களும் கட்டளைப் பிரிவுகளும் மற்றும் 2022 இல் அதன் சுருக்க விவரணங்களும் 12 - 19

அத்தியாயம் 02 20

2. **முன்னேற்றங்களும் எதிர்கால இலட்சியங்களும்** 20
   - 2.1 முன்னேற்றம் 20 - 32
   - 2.1.1 2022 ஆம் ஆண்டு இலங்கை விமானப் படைச் செயலாற்றுகையின் பொழிப்பு 33
     - a. வான் நடவடிக்கைகள் பணிப்பகம் 33 - 35
     - b. தரை நடவடிக்கைகள் பணிப்பகம் 36 - 37
     - c. வானூர்திப் பொறியியல் பணிப்பகம் 37 - 51
     - d. பொதுப் பொறியியல் பணிப்பகம் 51 - 58
     - e. இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்புப் பொறியியல் பணிப்பகம் 58 - 60
     - f. ஏற்பாட்டியல் பணிப்பகம் 60
     - g. நிருவாகப் பணிப்பகம் 60
     - h. சிவில் பொறியியல் பணிப்பகம் 61 - 64
     - j. சுகாதார சேவைகள் பணிப்பகம் 64 - 65
     - k. பயிற்சிப் பணிப்பகம் 65
     - m. சேமநலப் பணிப்பகம் 66 - 67
     - n. வான் புலனாய்வுப் பணிப்பகம் 68
     - p. தகவல் தொழினுட்பவியல் பணிப்பகம் 69
     - q. சட்ட பணிப்பகம் 70
     - r. ஊடகப் பணிப்பகம் 70 - 72
     - s. படைப் பிரதானியின் பணிப்பகம் 72 - 74
     - t. ஆற்றுகைக் கலைகள் பணிப்பகம் 74
     - u. விளையாட்டுகள் பணிப்பகம் 74
     - v. பல்மருத்துவ சேவைகள் அலுவலகம் 75 - 76
     - w. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு 76 - 84
     - x. கட்டளை ஆட்சேர்ப்பு அலுவலகம் 84
     - y. கட்டளை ஆய்வு மற்றும் அபிவிருத்திப் அலகு 84 - 88
     - z. ஐ.நா. அலகு 89
   - 2.1.2 நாடளாவிய ரீதியில் 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை விமானப் படை அக்கடமி/ தளங்கள் மற்றும் நிலையங்களால் முன்னெடுக்கப்பட்ட நிறுவன சமூகப் பொறுப்புடமை (CSR) செயற்றிட்டங்கள் கீழ்வருமாறு 90 - 101
   - 2.2 எதிர்காலக் கண்ணோட்டம் 102 - 105

அத்தியாயம் 03 106

3. 2022 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒட்டுமொத்த நிதிசார் செயலாற்றுகை 106

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று 106
3.2 நிதி நிலைக் கூற்று 107
3.3 காசுப் பாய்வுக் கூற்று 108
3.4 நிதி நிலைப் பகுப்பாய்வுச் சுருக்கம் 109 - 117
3.5 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 118
3.6 வருமானச் சேகரிப்பின் செயலாற்றுகை 119
3.7 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை 119
3.8 நி.ஒ.விதி 208 இற்கிணங்க, மற்றைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் ஒரு முகவராக செலவினங்களுக்கான ஒதுக்கீடுகளின் வழங்கல் 120 - 121
3.9 நிதிசாரா சொத்துக்களின் அறிக்கையிடல் பற்றிய செயற்பாடுகள் 122
3.10 கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை 123 - 129

அத்தியாயம் 04 130

4. செயலாற்றுகைக் குறிகாட்டிகள் 130

4.1 இலங்கை விமானப் படையின் செயலாற்றுகைக் குறிகாட்டிகள் (நடவடிக்கைத் திட்டத்தின் அடிப்படையில்) 130 - 133

அத்தியாயம் 05 134

5. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான செயற்பாடுகள் (SDGS) 134 - 144

அத்தியாயம் 06 145

6. மனித வள விபரங்கள் 145

6.1 பதவியணி முகாமைத்துவம் 145 - 150
6.2 மனித வளங்களின் பற்றாக்குறை அல்லது மிகையானது நிறுவனத்தின் செயலாற்றுகையில் செலுத்தும் தாக்கம் 151
6.3 மனித வள அபிவிருத்தி 151 - 167

அத்தியாயம் 07 168

7. இணக்க அறிக்கை 168 - 175

அத்தியாயம் 08 176

8. குழு அறிக்கைகள் 176 - 179

9. முடிவுரை 180

10. சுருக்கக் குறியீடுகள் 181 - 184

விமானப்படைத் தளபதியின் செய்தி



2022 நிதியாண்டிற்கான இலங்கை விமானப் படையின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பிப்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். இந்த அறிக்கையானது ஐந்தாண்டு நடவடிக்கைத் திட்டம் மற்றும் இலங்கை விமானப் படையின் நிறுவனத் திட்டம் 2021 - 2023 ஆகியவற்றை 'செழுமையானதும் சௌபாக்கியமானதும்' என்ற தேசிய கொள்கை வேலைச் சட்டகம் மற்றும் 2022 ஆம் ஆண்டிற்கான இ.வி.ப. வருடாந்த நடவடிக்கைத் திட்டம் ஆகியவற்றுக்கு ஏற்ப அரசாங்கத்தற்கு விளக்குவதற்கு உதவுகிறது. இது 2022 நிதியாண்டில் ஒப்படைக்கப்பட்ட வரிசெலுத்துநர் வளங்களில் எமது செயன்முகமையை பொது மக்களுக்கு வெளிப்படுத்துகின்ற ஒரு கருவியாக இருக்கின்ற அதே வேளை அத்தகைய வளங்கள் தொடர்பில் எமது முகாமைத்துவத்தை மதிப்பிடுவதற்கும் எமது சாதனைகள், சவால்கள் மற்றும் எதிர்கால நோக்குகளுக்கும் உதவியாக அமையும்.


இ.வி.ப. ஆனது தேசத்தைப் பாதுகாத்தல், எமது மக்களை கவனித்துக் கொள்ளல் மற்றும் குழுப்பணி மூலம் வெற்றியீட்டுவதற்காக இ.வி.ப. இன் நிறுவனத் திட்டம் 2021 - 2023 இல் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள பதினொரு (11) இலக்குகுள் மீது அதன் கவனம் செலுத்துகிறது. 2022 ஆம் ஆண்டில் நாட்டிலே சமூக, பொருளாதார மந்தநிலை போன்ற தடைகள் காணப்பட்ட போதிலும், இ.வி.ப. ஆனது அதன் பணிகளை மேற்கொள்வதில் அது காட்டிய அர்ப்பணிப்பை கைவிட்டிருக்கவில்லை. குறிப்பாக, செலவினங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு இயைந்தொழுகும் வகையில் 2022 ஆம் நிதியாண்டில் எரிபொருள், தொடர்பாடல் கொடுப்பனவு, நீர் மற்றம் மினசாரச் செலவுக் கட்டுப்பாடு போன்ற செலவினங்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் இ.வி.ப. ஆனது வருடாந்த நடவடிக்கைத் திட்டத்தை திருத்தி, செயற்பாடுகளுக்கு முன்னுரிமை அளித்தது. நாடு பொருளாதாரச் சவால்கள் போன்ற சிக்கலான நிலைமைகளை எதிர்கொள்ளும்போது, இ.வி.ப. ஆனது 2022 நிதியாண்டில் முக்கியமான முன்முயற்சிகளை எடுத்திருந்தது. அத்துடன், நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் தேசிய அபிவிருத்தியில் எதிர்கொள்ளப்படும் சவால்களை சமாளிப்பதற்குத் தேவையான மூலோபாயங்கள், வளங்கள் மற்றும் செயற்பாட்டு எண்ணக்கருக்களை நாங்கள் செயற்படுத்துகின்றோம். நாங்கள் மூன்று (03) MI-17 உலங்குவானூர்திகளையும் விமானிகள், பொறியியலாளர்கள் மற்றும் விமானப்படையின் பிற துணை ஊழியர்களைக் கொண்ட 113 படைச் சேவையினரை மத்திய ஆபிரிக்காவில் உள்ள ஐ.நா. படைக்கு தொடர்ந்தும் அனுப்பியுள்ளோம். இது நாட்டிற்கு வெளிநாட்டு நாணய உட்பாய்வினை அதிகரிப்பதில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தக் கடினமான காலங்களில் உறுதியுடன் இருந்ததற்காக விமானப் படையின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் நான் நன்றியுள்ளவனாக இருக்கின்றேன்.

இலங்கையின் பொருளாதாரம் மிகவும் நெருக்கடியான காலகட்டத்தை எட்டியுள்ளது, இந்தச் சவாலான சூழ்நிலையை கட்டுப்படுத்துவதற்கு பொது நிதியை மிகவும் பொறுப்பான மற்றும் சிக்கனமான முறையல் பயன்படுத்தும் அதே வேளை அபாது மக்களுக்கு வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் சேவையை வழங்குவது அவசியமானது. எவ்வாறாயினும், குறிப்பிட்ட கால அவகாசம் தேவைப்படுவதால், மிகவும் அத்தியாவசிய சேவைகளை மாத்திரம் வழங்குவதன் மூலம் பொதுச் செலவினங்களை மிகவும் இறுக்கமாக்குதல் வேண்டும். இந்த இக்கட்டான சூழ்நிலையில் தேசிய பாதுகாப்பிற்கு ஆயுதமேந்திய

படையினர் என்ற வகையில் எமது பொறுப்பை நிறைவேற்றும் வகையில், அதிகாரிகள், ஏனைய தர நிலையினர் மற்றும் இ.வி.ப. இன் சிவில் ஊழியர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் பேரண்டப் பொருளாதாரத்தை ஸ்திரத்தன்மையை வலுப்படுத்தவும் சிறந்த, நிலைபேறான பொது நிதி ஏற்பட்டைத் தாபிப்பதற்கு இ.வி.ப. ஆதரவளிக்கிறது.

ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகையானது இந்த ஆண்டின் கணக்காய்வுப் பேறுகளை விபரமாக உள்ளடக்கிய கணக்காய்வாரள் தலைமை அதிபதியின் அறிக்கையைத் தருகிறது. இ.வி.ப. இன் வளங்கள் மூலோபாயத்துடன் பொருந்துவதையும் மூலோபாயம் கொள்கையுடன் பொருந்துவதையும் கொள்கை நாட்டின் விருப்பத்திற்கு பொருந்துவதையும் உறுதிப்படுத்து வதற்காக எங்கள் இலக்குகளுக்கு கணக்காய்வுப் பரிகார முயற்சி பிரதானமானதாகும். எமது தொழில்சார் நடவடிக்கைகளை நவீனப்படுத்துவதும் சீர்படுத்துவதும் கடினமாக உழைத்து சம்பாதித்த வரிசெலுத்துவோர் வளங்களின் சிறந்த பாதுகாவலர்களாக நம்மை உருவாக்கும், ஏனெனில் நாங்கள் தொடர்ந்து எமது தேசிய பாதுகாப்பை சிறப்பாக ஆதரிப்பதோடு, அதிக முன்னுரிமைகளுக்கு நேரம், பணம் மற்றும் பணியாளர்களை விடுவிக்கின்றோம்.

இலங்கையை எதிர்காலத்திற்கு நகர்த்துகின்ற முன்னேற்றத்தை அடைவதில் அரசுக்கு தீவிரமாக உதவுவதற்காக, எதிர்வரும் ஆண்டில் எங்களது ஆயத்தநிலைப் பணியாளர்கள், எமது வளர்ச்சி மற்றும் பொறுப்பினை மேம்படுத்த தொடர்ந்தும் முயற்சிப்போம்.



எயார் மார்ஷல் எஸ்.கே. பத்திரண
WWV and Bar, RWP and Bar, RSP and three Bars, VSV, USP, MSc (MOA) USA, MSc (Def Stu) in Mgt, M Phil (Ind), MIM (SL), ndc (Ind), psc, qfi
விமானப் படைத் தளபதி

31 மே 2023

1. நிருவாகச் சுருக்கம்

1.1 அறிமுகம்

a. 2022 நிதியாண்டு காலப்பகுதியில், இலங்கை விமானப் படையானது தேசத்தின் பாதுகாப்பிற்காக வான் சக்தியை பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்துகின்ற முதன்மையான வகிபாகத்திற்கு மேலதிகமாக, *2021-2023 ஆம் ஆண்டிற்கான இலங்கை விமானப் படை நிறுவனத் திட்டத்திற்கு* இணங்கவும் *2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த நடவடிக்கைத் திட்டத்திற்கு* இணங்கவும் அத்துடன் *இலங்கை அரசாங்கத்தின் ஐந்தாண்டு நடவடிக்கைத் திட்டமான 'செழிப்பானதும் சௌபாக்கியமானதுமான எதிர்காலம்' என்ற தேசிய கொள்கை வேலைச்சட்டகத்திற்கு* இணங்கவும் தேசிய பாதுகாப்பிற்கு முன்னுரிமை வழங்கியிருந்ததுடன் நாட்டின் தேசிய அபிவிருத்தி நடவடிக்கை களிலும் பங்குபற்றியிருந்தது. குறிப்பாக, 2022 நிதியாண்டில் செலவினங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட சுற்றுநிருபத்திற்கு அமைய, இ.வி.ப. அதன் வருடாந்த நடவடிக்கைத் திட்டத்தைத் திருத்தியதுடன் செயல்பாடுகளுக்கு முன்னுரிமை அளித்தது. நாடு பொருளாதாரச் சவால்கள் போன்ற சிக்கலான நிலைமைகளை எதிர்கொள்ளும்போது, இ.வி.ப. ஆனது 2022 நிதியாண்டில் முக்கியமான முன்முயற்சிகளை எடுத்திருந்தது. இது எதிர்வரும் வருடங்களில் அரச செலவின முகாமைத்துவப் பரப்பில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

b. 2022 ஆம் ஆண்டில், இலங்கை விமானப் படையானது நாட்டின் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கான முன்தேவைப்பாடொன்றாக அடையாளம் காணப்பட்ட உள்நாட்டு விமானப் போக்குவரத்தை அபிவிருத்தி செய்வதில் தொடர்ந்தும் முன்னணி வகிபாகத்தை ஆற்றியிருந்தது. இலங்கை விமானப் படையானது விபத்து வெளியேற்றம் மற்றும் உரிய நேரத்தில் துருப்புகளை ஈடுபடுத்தல் ஆகியவற்றில் துடிப்பான பங்களிப்பை நல்கியதன் மூலம் தேசிய பேரழிவுகள் மற்றும் அனர்த்தங்களின்போது முக்கிய பங்கினையும் ஆற்றியிருந்தது. 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கையானது ***வருடாந்த பாதீட்டு ஒதுக்கீட்டுடன்கூடிய 2021-2023 ஆம் ஆண்டிற்கான இலங்கை விமானப் படை நிறுவனத் திட்டம், 2022 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட வருடாந்த நடவடிக்கைத் திட்டம், இலங்கை அரசாங்கத்தின் ஐந்தாண்டு நடவடிக்கைத் திட்டமான 'செழிப்பானதும் சௌபாக்கியமானதுமான எதிர்காலம்' என்ற தேசிய கொள்கை வேலைச்ச ட்டகம்*** ஆகியவற்றின் பகுப்பாய்வை உள்ளடக்கியுள்ளது. மேலும், 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிறைவேற்றுவதற்காகத் தாபிக்கப்பட்ட நடவடிக்கைகள் உண்மையான செயலாற்றுகையுடன் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட திட்டமிடலுக்கானவையும் எடுத்துக்காட்டப் பட்டுள்ளன.

c. **வருடாந்த நடவடிக்கைத் திட்டத்தின் பாதீட்டுடனான பகுப்பாய்வு**

(1) வருடாந்த செயலாற்றுகை அறிக்கையானது வருடாந்த நடவடிக்கைத் திட்டத்துடனான வருடாந்தப் பாதீட்டின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது. இது 2021 - 2023 காலப்பகுதிக்காக நிறுவனத் திட்டத்தில் அமைக்கப்பட்ட இலக்குகள் எதிர் செயலாற்றுகையை அறிக்கைப்படுத்துகிறது. ஒவ்வொரு பிரிவும் முகப்பில் ஒரு சுருக்கமான செயலாற்றுகைப் பொழிப்பையும் மதிப்பீடையும் கொண்டிருப்பதுடன், அதற்கு மேலதிகமாக ஆண்டின் காலப்பகுதியில் இடம்பெற்ற பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளின் சில தொடர்புடைய அம்சங்கள் மீதான மேலதிக பின்புலம் ஒன்றையும் வழங்குகிறது.

(2) வருடாந்தப் பாதீடானது திணைக்களம் ஒழுங்கமைக்கப்பட்ட தடத்தில் வெளிப்படுகின்ற உயர் மட்ட முன்னுரிமைகள் மற்றும் மாற்றங்களைப் பிரதிபலிப்பதற்காக அதிக காலம் ஆழ்ந்து ஆராய்ந்து வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, ஒட்டுமொத்த கட்டமைப்பும் முரணற்ற வகையில் ஒத்ததாகவே காணப்படினும் உயர் மட்ட ஆதரவளிப்பு நோக்கங்களில் ஒரு வருடாந்த பாதீட்டிலிருந்து மற்றைய வருடாந்தப் பாதீட்டில் ஒரு சில தவிர்க்கமுடியாத மாற்றங்களும் காணப்படுவதுடன் அவையும் இணைப்புச் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(3) இலங்கை விமானப் படையின் உச்ச மட்ட நோக்கங்கள் 2021 –2023 ஆம் ஆண்டிற்குரிய நிறுவனத் திட்டத்தில் அமைக்கப் பட்டுள்ளன. எனவே வருடாந்த செயலாற்றுகை அறிக்கையானது 2021 – 2023 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான நிறுவனத் திட்டம் மற்றும் 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த நடவடிக்கைத் திட்டம் ஆகியவற்றில் அமைக்கப்பட்ட இலக்குகளுக்கு எதிராக 2022 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயலாற்றுகையின் பொழிப்பொன்றுடன் ஆரம்பிக்கிறது. செலவின மீளாய்வானது அறிக்கை நெடுகிலும் தரப்பட்டுள்ளது.

d. **திணைக்கள நிதிக் கூற்றுக்கள் 2022**

(1) திணைக்களமானது ஒவ்வொரு நிதியாண்டிற்கும் ஆண்டின் போது தேவைப்படுகின்ற, வைத்திருக்கப்படுகின்ற அல்லது அகற்றப்படுகின்ற வளங்கள் பற்றிய விபரங்கள் மற்றும் அவை பயன்படுத்தப்படுகின்ற வழிவகைகள் பற்றிய விபரமான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்டுள்ளது. நிதிக் கூற்றுக்கள், நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் திறைசேரி வழிகாட்டல்களுக்கு இணக்கமான வகையில் காசு அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன. மேலும், திறைசேரி சுற்றுநிருபத்தின்படி, நிதிக் கூற்றுக்கள் பொதுத் துறைக் கணக்கீட்டு நயமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன.

(2) திணைக்கள விவகாரங்கள், நிகர வள வெளிப்பாடு, நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட வளங்கள், ஏற்பிசைவு செய்யப்பட்ட ஆதாயங்கள் மற்றும் இழப்புகள், மற்றும் நிதியாண்டிற்கான காசுப் பாய்வுகள் பற்றிய உண்மையானதும் நியாயமானதுமான பார்வையை அவை தருதல் வேண்டும். 2022 ஆம் ஆண்டிற்கான திணைக்கள நிதிக் கூற்று இவ்வறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

e. **செயற்பாட்டு முகாமைக்கான மூலோபாய வேலைச்சட்டகம்**

(1) செயற்பாட்டு முகாமை என்பது மூலோபாய இலக்குகள் மற்றும் முன்னுரிமைகளை அமைத்தல், நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளை உருவாக்குதல், நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளைக் கண்காணித்தல், தரவுகளைச் சேகரித்தல் மற்றும் இலக்குகளை அடைவதற்கான முன்னேற்றத்தை அளவிடுதல், செயற்றிறன் மற்றும் மதிப்பீட்டுத் தகவல்களைப் பயன்படுத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் வள ஒதுக்கீட்டுத் தீர்மானமெடுத்தலில் தாக்கம் செலுத்துகின்ற முடிவுகளை நாட்டதாரர் களுடன் தொடர்பாடுதல் போன்ற பல கட்டச் செயன்முறை ஒன்றாகும்.

(2) இ.வி.ப. இன் செயற்பாட்டு முகாமையானது உயர் மட்ட மூன்று வருட இ.வி.ப. நிறுவனத் திட்டம் 2021 – 2023, வருடாந்த நடவடிக்கைத் திட்டம் (AAP) 2022 மற்றும் **ஐந்தாண்டு நடவடிக்கைத் திட்டமான 'செழிப்பானதும் சௌபாக்கியமானதுமான எதிர்காலம்' என்ற**

தேசிய கொள்கை வேலைச்சட்டகம் ஆகியவற்றினால் வழிப்படுத்தப் படுகிறது.

1.2 நோக்கு, பணி மற்றும் முக்கிய ஆற்றல்கள்

a. நோக்கு

"வான்சக்தியின் விளைதிறன்மிக்க தொழிற்பாட்டின் ஊடாக தேசத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்"

b. பணி

"தேசிய பாதுகாப்புக்கு உதவியாக வான் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு எங்கள் பிரதான ஆற்றல்களைப் பயன்படுத்துகின்ற ஒரு தொழில்வாண்மைசார்ந்த விமானப் படையைப் பயிற்றுவித்து, சித்தப்படுத்தி, நிலைநிறுத்தல்"

c. முக்கிய ஆற்றல்கள் நிறுவனமொன்றின் முக்கிய ஆற்றல்கள் என்பது நிறுவனத்தை அதன் இலக்குகளை நோக்கிக் கொண்டு செல்வதைத் தீர்மானிக்கும் பெரியளவிலான காரணிகளாகும். இ.வி.படையும்கூட பின்வரும் ஒப்பிடப்படமுடியாத முக்கிய ஆற்றல்கள் சிலவற்றைக் கொண்டிருக்கிறது:

(1) இராணுவப் பறப்பும் வான் பாதுகாப்பு இயலுமையும்.
இ.வி.ப. ஆனது இராணுவப் பறப்பு மற்றும் இலங்கையின் வான் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற இயலுமையைக் கொண்டுள்ள தனியுரிமை நிறுவனமாகும்.

(2) வரையறுக்கப்பட்ட வளங்களுக்கான புத்தாக்கங்களைப் பின்பற்றுதல். தனது வரலாறு ஊடாக, இ.வி.ப. ஆனது வரையறுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்துவதில் தனியான பின்பற்றுகையைக் காட்டியிருப்பதுடன் மாற்றமடைகின்ற நிலைமைகளின் கீழ் உயர்ந்தபட்ச விளைவை அடைவதற்காக அதனைப் பிரயோகிக்கிறது.

(3) பன்முக செயற்பாட்டு அனுபவங்களுடன் ஒரு தொழில் முறைசார்ந்த ஊக்கமளிக்கப்பட்ட வேலைப்படை. இ.வி.ப. ஆனது நோயல் விமானப் படையின் வழித்தோன்றலாக வந்த மரபுரிமைப் பண்பாடுகளின் ஒரு செல்வந்த பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. அது நன்கு வரையறுக்கப்பட்ட பயிற்சி மற்றும் தொழில்சார் அபிவிருத்திக் கட்டமைப்பு, அதன் தொடக்கத்திலிருந்து நடத்தப்பட்ட பன்முகச் செயற்பாடுகளில் வான் சக்தியைப் பிரயோகிப்பதில் பெறப்பட்ட செழிப்பான அனுபவம் என்பவற்றைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது. இது அர்ப்பணிப்புமிக்க, ஊக்கமளிக்கப்பட்ட மற்றும் அதிகளவில் தகவமைப்பு கொண்ட தொழில்வாண்மைமிக்க படையினை உருவாக்கியுள்ளது.

(4) தேசிய பாதுகாப்புக்காக மின்காந்த அலைக்கற்றை மற்றும் இணையவெளி ஆகியவற்றின் விளைதிறன்மிக்க, பாதுகாப்பான, பொறுப்புமிக்க பாவனை.

(5) ஒரு பிரத்தியேகமான நாடுதழுவிய பாதுகாப்புத் தொலைத்தொடர்பு, தகவல் தொழினுட்பம் மற்றும் ராடார் வலையமைப்பு ஆகியவற்றின் அறிமுகப்படுத்தல் ஊடாக, இ.வி.ப. ஆனது தொடர்பாடலுக்கான மின்காந்த அலைக்கற்றை மற்றும் தகவல்

முகாமைத்துவத்திற்கான வான் கண்காணிப்பு மற்றும் இணையவெளி ஆகியவற்றை அடைவதற்கான பிரத்தியேக ஆற்றலைக் கொண்டிருக்கிறது.

1.3 பிரதான தொழிற்பாடுகள்

a. நாட்டின் மேற்பரப்புக்கு மேலேயுள்ள சகல ஊடகங்கள் ஊடாகவும் வான் சக்தியை நிலைநிறுத்துவதன் மூலம் இலங்கையின் ஆட்புல ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையை பாதுகாத்தல்.

b. தரை மற்றும் கடற் படைகளுக்கு உத்திசார்ந்த வான் ஆதரவு மற்றும் போக்குவரத்தினை வழங்குதல்.

c. அரசாங்கத்தின் கோரிக்கையின்பேரில் இடர்மீட்பு வசதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகளை வழங்குதல்.


d. விமானங்கள், வீதிப் போக்குவரத்துகள், இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் ஏனைய பொறி மற்றும் இயந்திரங்கள் ஆகியவற்றைப் பராமரிப்பதற்காக பொறியியல் மற்றும் ஏற்பாட்டியல் சேவைகளை வழங்குதல்.

e. உள்ளகரீதியான பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக துருப்பினரை வழங்குதல்.

f. இராணுவ நடவடிக்கையல்லாத வான் செயற்பாடுகளை முன்னெடுத்தலும் தேசிய அபிவிருத்தியுடன் தொடர்புபட்ட செயற்றிட்டங்கள் தொடர்பில் ஆய்வுகளை முன்னெடுத்தலும் விருத்திசெய்தலும்.

g. மனித வளங்கள், விமானங்கள் மற்றும் வாகனங்களை வழங்குவதன் மூலம் ஐ.நா. அமைதிகாப்புப் படைகளில் துடிப்புடன் பங்கேற்றல்.

1.4 நிருவன விளக்கப்படம்



1.5 இலங்கை விமானப் படையின் பிரதான பணிப்பகங்களும் கட்டளைப் பிரிவுகளும் மற்றும் 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதன் சுருக்க விவரணங்களும்

a. **வான் நடவடிக்கைகள் பணிப்பகம்**

அறிமுகம். இலங்கை விமானப் படையின் செயற்பாட்டு வடிவமைப்பானது வான் நடவடிக்கைகள் பணிப்பகத்தின் செயற்பாட்டு எல்லையின் கீழ் வருகிறது. பணிப்பகமானது வான் நடவடிக்கைகள், வான் பாதுகாப்பு மற்றும் வான் போக்குவரத்துக் கட்டுப்பாடு மற்றும் தீயணைப்பு ஆகிய பிரிவுகளுக்குப் பொறுப்புடையதாகும்.

b. **தரை நடவடிக்கைகள் பணிப்பகம்**

அறிமுகம். தரை நடவடிக்கைகள் பணிப்பகம் 2014 பெப்ரவரி 28 ஆந் திகதி மீளமர்த்தப்பட்டது. இ.வி.ப. ரெஜிமென்ட் ஆனது எதிரிகளால் ஏற்படுத்தப்படும் ஏதாவது வெளிவாரியான/ உள்வாரியான ஆக்கிரமிப்புகளைத் தடுத்தல் மற்றும் இ.வி.ப. விமானச் சொத்துக்கள் மற்றும் நடவடிக்கைகளுக்கான முக்கிய நிறுவல்கள் ஆகியவற்றைப் பாதுகாத்தல் ஆகியவற்றை நோக்காகக் கொண்டு, தரை நடவடிக்கைகள் பணிப்பகத்தின் கீழ் இடப்படுத்தப்பட்ட 29 பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது.

c. **வானூர்திப் பொறியியல் பணிப்பகம்**

அறிமுகம். நியமப் பொறியியல் நடவடிக்கைகளின் பிரயோகத்தின் ஊடாக இ.வி.ப. விமானத் தொகுதியினை பறப்புக்கு உகந்த (FMC) நிலையில் பேணுவதன் மூலம் பாதுகாப்பான விமானப் போக்குவரத்தை உறுதிசெய்வது வானூர்திப் பொறியியல் பணிப்பகத்தின் (Dte of AE) பொறுப்பாகும். இ.வி.ப. இன் பொருட் பதிவேடானது 28 வகையான 108 விமானங்களைக் கொண்டுள்ளது. இந்த 108 விமானங்களும் 62 நிலையான இறக்கை விமானங்கள் எனவும் 46 உலங்குவானூர்திகள் எனவும் மேலும் பிரிக்கப்படுகிறது.

d. **பொதுப் பொறியியல் பணிப்பகம்**

(1) அறிமுகம்.

(a) பொதுப் பொறியியல் பணிப்பகமானது இ.வி.ப. இன் பொதுப் பொறியியல் பதவிநிலைகளை நிருவகிப்பதற்காகத் தாபிக்கப்பட்டது. இது பிரதானமாக, இ.வி.ப. இன் பிரதான வகிபாகமான பறத்தல் நடவடிக்கைகளுக்கு ஆதரவு வசதிகளை வழங்குகிறது. இப்பணிப்பகமானது அதன் செயல் எல்லையினுள் வருகின்ற பத்து (10) பதவிநிலைகளையும் இரண்டு (02) பாரிய அமைப்புகளையும் நிருவகிக்கிறது.

(b) பொதுப் பொறியியல் பிரிவு (GEW) மற்றும் எந்திரவியல் போக்குவரத்தும் முழுமைப் பழுதுபார்ப்பும் பிரிவு (MTR&OW) ஆகியன அந்த இரண்டு அமைப்புகளுமாகும். பணிப்பகமானது பத்து (10) விசேட பதவிநிலையினரைக் கொண்டிருக்கிறது எனினும் அவர்கள் பொதுப் பொறியியல் கடமைகள் மற்றும் வானூர்திப் பொறியியல் களக் கடமைகள் ஆகியவற்றுக்கிடையில் பரிமாற்றப்படும் தொழினுட்பப்

பொறியியற் கிளையின் உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றுகின்றனர்.

e. **இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்புப் பொறியியல் பணிப்பகம்**

அறிமுகம். இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்புகள் பொறியியல் பணிப்பகம் (E&TE பணிப்பகம்) ஆனது இலத்திரனியல், தொலைத் தொடர்புகள் மற்றும் தகவல் தொழினுட்பவியல் தொழிற்பாடுகளின் நிருவாகம் மற்றும் வினைத்திறனான இலத்திரனியல், தொலைத் தொடர்புகள் மற்றும் தகவல் தொழினுட்பவியல் வசதிகளை வழங்குதலும் பராமரித்தலும் ஆகியவற்றுக்காக இ.வி.ப. இல் தாபிக்கப்பட்டது.

f. **ஏற்பாட்டியல் பணிப்பகம்**

அறிமுகம். ஏற்பாட்டியல் பணிப்பகமானது சகல விமானப் படைச் செயற்பாடுகள், பயிற்சிகள், நிருவாகம் மற்றும் சேமநல நடவடிக்கைகளை வினைத்திறனான வகையில் மேற்கொள்வதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்வதற்காக இ.வி.ப. இல் தாபிக்கப்பட்டுள்ளது.

g. **நிருவாகப் பணிப்பகம்**

அறிமுகம். இந்தப் பணிப்பகமானது இலங்கை விமானப் படையின் நிருவாகத்துடன் தொடர்புடைய சகல விடயங்களையும் கவனிக்கிறது. அத்துடன் பொது ஒழுக்காறு, அதிகாரிகளது விடயங்கள், விமானப் படை வீரர் / வீராங்கனைகளின் விடயங்கள், கொடுப்பனவும் படிகளும், நிறுவன விடயங்கள் மற்றும் ஏனைய நிருவாக விடயங்கள் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட கடமைகளையும்கூட ஆற்றுகிறது.

h. **சிவில் பொறியியல் பணிப்பகம்**

அறிமுகம். சிவில் பொறியியல் பணிப்பகமானது கொள்கைகளை வகுப்பதற்காகவும் குடியியல், எந்திரவியல் மற்றும் மின்னியல் போன்ற பல்வேறு பொறியியல் துறைகளிலும் காணப்படும் சகல தொழிற்பாடுகளையும் ஆற்றுவதற்காகவுமென இலங்கை விமானப் படையில் தாபிக்கப்பட்டது. பணிப்பகமானது அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற சகல பொறியியல் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப மனிதவலு, ஏனைய பொருள் வளங்கள் மற்றும் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஆகியவற்றை வினைத்திறனான முறையில் பயன்படுத்தியுள்ளது.

j. **சுகாதார சேவைகள் பணிப்பகம்**

அறிமுகம். தொழினுட்ப முனைப்பியல்பான இராணுவப் படைக்கான பிரதான பங்களிப்பாளர்களில் ஒருவராக, சுகாதார சேவைகள் பணிப்பகமானது (D of HS) இலங்கை விமானப் படையினரின் சுகாதாரத்தைப் பேணுவதில் தொடர்ச்சியாக பிரதான பங்கினை வகிக்கிறது. இ.வி.ப. இனுள் சுகாதாரத்தைப் பேணுதல் என்ற அதன் பிரதான பணியை முன்னெடுத்துச் செல்வதற்கு மேலதிகமாக, D of HS ஆனது எமது வைத்தியசாலைகளில் தீவிர நோயாளர் கவனிப்பு நடவடிக்கைகளை அதிகளவில் கையாள்வதற்கான அதன் இயலுமையையும் விருத்தி செய்கிறது.

k. **பயிற்சிப் பணிப்பகம்**

(1) அறிமுகம்.

(a) பயிற்சிப் பணிப்பகமானது பயிற்சிக் கொள்கைகளை அமைத்தல், திட்டமிடுதல் மற்றும் ஆரம்ப, அடிப்படை, உயர்தரப் தொழிற் பயிற்சிகள், விசேடத்துவமிக்க மற்றும் பயிற்றுநர் பயிற்சி போன்றவற்றை நடத்துதல், அதிகாரிகளுக்கும் விமானப் படை வீரர்களுக்கும் பதவியுயர்வுப் பரீட்சைகளை நடத்துதல் ஆகியவற்றுக்காக இலங்கை விமானப் படையில் தாபிக்கப்பட்டிருக்கிறது. இப்பணிப்பகமானது இ.வி.ப. இன் சகல பயிற்சித் தாபனங்களிலும் உயர் நியமங்கள் அடையப்படு வதையும் பேணப்படுவதையும் நிச்சயப்படுத்தும்.

(b) 2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இ.வி.ப. ஆனது பணித்தொகுதியினர் திறன் மட்டத்தை அதிகரிப்பதற்காகவும் இயலுமையைக் கட்டியெழுப்புவதற்காகவும் விமான ஓட்டிகள், விமானப் பொறியியலாளர்கள், குடிசார் வைத்தியர்கள், கணக்காளர்கள், கணக்காய்வாளர்கள் மற்றும் ரெஜிமென்டல் அதிகாரிகள் போன்ற பல்வேறு தொழில்நிலையினருக்காகவும் மற்றும் சகல தரத்தைச் சேர்ந்தோருக்காகவும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிப் பாடநெறிகளை நடத்தியிருந்தது. பயிற்சிப் பணிப்பகத்தின் பிரதான வகிபாகமானது அரசாங்கத்திற்கு சேவை புரிவதற்கு மிகச் சிறந்த செயலாற்றுகையுடன்கூடிய திறன்மிக்க இராணுவ ஆளணியினரை உருவாக்குவதாகும். பணிப்பகமானது 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிறைவேற்ற எதிர்பார்த்த அதிகளவான பணிகளை நிறைவேற்றியிருந்தது.

m. **சேமநலப் பணிப்பகம்**

அறிமுகம். இப்பணிப்பகமானது சகல அதிகாரிகள்/ விமானப் படை வீரர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர் ஆகியோரின் சேமநலனுக்காக விமானப் படைத் தளபதிக்குப் பொறுப்புக் கூறக்கூடியதாக இருக்கிறது. இதனடிப்படையில், படைச்சேவையினர் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினரின் நிலையை மேலுயர்த்துவதற்காக நிதிசார்ந்த மற்றும் ஏனைய அத்தியாவசிய சேமநல வசதிகளை வழங்குவதற்காக சேமநல அமைப்பினைத் தாபித்து நிருவகிக்கின்ற பொறுப்புடன் இப்பணிப்பகம் பணியாற்றுகிறது. பணிப்பகமானது DIA (படை நடவடிக்கையின்போது அங்கவீனமுற்றோர்) ஆளணியினர் மற்றும் KIA (படை நடவடிக்கையின் போது கொல்லப்பட்டோர்) ஆளணியினரின் NOKs ஆகியோரின் புனர்வாழ்வு மற்றும் சேமநலனை நிச்சயப்படுத்துவதற்கும் பொறுப்புடையதாக இருக்கிறது.

n. **வான் புலனாய்வுப் பணிப்பகம்**

அறிமுகம். வான் புலனாய்வுப் பணிப்பகமானது இலங்கை விமானப் படையின் சகல புலனாய்வு விடயங்களையும் திட்டமிட்டு செயற்படுத்துவதற்காக 2017 மே 23 ஆந் திகதி தாபிக்கப்பட்டது. இப்பணிப்பகம் இலங்கை விமானப் படையின் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற வான் கடல்சார் மூலோபாயக் கட்டளை நிலையம் (AMSCC), வான் கண்காணிப்பு உள்ளிட்ட வான் புலனாய்வு, தரைப் புலனாய்வு, உலகளாவிய புலனாய்வு மற்றும் இணையப் புலனாய்வு ஆகியவற்றின் பயனுறுதிமிக்கதும் வினைத்திறனானதுமான திட்டமிடல் மற்றும் செயற்படுத்தலுக்குப் பொறுப்புடையதாகும்.

p. **பாதீட்டுப் பணிப்பகம்.**

அறிமுகம். பாதீட்டுப் பணிப்பகமானது (Dte of Bgt) ஒரு சுயாதீன பணிப்பகமாக (Non AFBM) இ.வி.ப. இல் தாபிக்கப்பட்டது. பாதீட்டுப் பணிப்பகத்தின் பிரதான வகிபாகமானது இ.வி.படைச் செயற்பாடுகளை முகாமை செய்வதற்கான நிதிசார் வளங்களை (ஏற்பாடுகள்) பெற்றுக் கொள்வதும் அரசாங்க நிதி ஒழுங்குவிதிகளுக்கான கூட்டத்தில் உரிய பணிப்பாளர்கள்/ கட்டளை அதிகாரிகளுக்கென நிதியாண்டின் காலப்பகுதியில் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை உத்தமமான முறையில் பயன்படுத்துவதில் கணிசமானளவு செல்வாக்குச் செலுத்துவதுமாகும்.

q. **தகவல் தொழினுட்பவியல் பணிப்பகம்**

அறிமுகம். தகவல் தொழினுட்பவியல் பணிப்பகமானது ஒரு சுயாதீன பணிப்பகமாக இ.வி.ப. இல் தாபிக்கப்பட்டது. பணிப்பகத்தின் பிரதான வகிபாகமானது நிறுவன நோக்கங்களை அடைவதற்காக மென்பொருள் முறைமைகள், வலையமைப்புகள், வன்பொருள், தரவுத்தளங்கள், பல்லூடக வடிவமைப்பு மற்றும் இணையவெளிப் பாதுகாப்பு ஆகியவை உள்ளிட்ட சகல தகவல் தொழினுட்பவியல் (IT) முறைமைகள் மற்றும் உபகரணங்களையும் வடிவமைப்பதும் விருத்திசெய்வதும் பராமரிப்பதும் ஆகும்.

r. **சட்ட பணிப்பகம்**

அறிமுகம். இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின்படி, சட்ட விதிக் கோட்பாட்டை ஆதரிக்கின்ற, எந்தவொரு செல்வாக்கிற்கும் உட்படாது சுயாதீனமாகவும் வெளிப்படையாகவும் இ.வி.ப. இற்கு சிறந்த, வினைத்திறனான, பயனுறுதிமிக்க மற்றும் துல்லியமான சட்ட ஆலோசனை சேவைகள் அல்லது வேறு ஏதாவது சட்டச் சேவைகளை வழங்கும் நோக்கில் 2007 சனவரி 01 இல் இ.வி.ப. கட்டளைக் கட்டமைப்பின் ஒரு சுயாதீனமான அங்கமாக இ.வி.ப. இன் சட்ட பணிப்பகம் நிறுவப்பட்டது.

s. **ஊடகப் பணிப்பகம்**

அறிமுகம். பாதுகாப்பு அமைச்சின் கீழ்வரும் ஒரு திணைக்களம் என்ற வகையில் இலங்கை விமானப் படையானது பாதுகாப்பு அமைச்சின் ஊடாக இலங்கை மக்களுக்கு பொறுப்புடையதாகவும் பதில்கூறத்தக்கதாகவும் இருக்கிறது. எவ்வாறாயினும், அதன் அன்றாட நடவடிக்கைகளின் போது, நிறுவனத்தின் பொதுசன பிம்பத்தை மேம்படுத்தி பாதுகாக்கும் நாட்டத்துடனோ அல்லது நிறுவனத்திற்கு வெளியே உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் தொடர்பாடல்களுக்கு பதிலளிக்கின்ற வகையிலோ பொதுசனத்துடன் நேரடியாகத்

தொடர்பேற்படுத்துவதற்கு இ.வி.ப. க்கு அவசியமேற்படலாம். இ.வி.ப. இற்கும் பொதுசனத்திற்கும் இடையிலான ஏதாவது மற்றும் எல்லா தொடர்பாடல்களும் தேசிய பாதுகாப்புக்கான ஆழ்ந்த புரிந்துணர்வு மற்றும் இலங்கை விமானப் படையின் கண்ணியம் மற்றும் சீரொழுங்கு ஆகியவற்றை சரியான முறையில் அறிந்து கொள்வதன் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதைக் கருத்திற் கொண்டு, அத்தகைய சகல தொடர்பாடல்களினதும் உள்ளடக்கம் மற்றும் தொனி என்பன விமானப் படைத் தளபதியின் நேரடி நோக்கெல்லையின் கீழான அதிகாரியொருவரால் வடிகட்டப்படுவது அவசியமானதாகும்.

t. **படைப் பிரதானி பணிப்பகம்**

அறிமுகம். "இ.வி.ப. இன் காவல்துறையானது நிறுவனத்தினுள் சட்டம், ஒழுங்கைப் பேணுவதற்கும் உயர் தரமான ஒழுக்காற்றைப் பேணுவதற்கும் பிரதான பொறுப்பினைக் கொண்டுள்ளது." VIP மோட்டார்சைக்கிள் அணிவகுப்பு, கௌரவப் பாதுகாப்பு, நெரிசலைக் கட்டுப்படுத்தல் மற்றும் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தல் போன்ற வைபவரீதியான கடமைகளை ஆற்றுவது காவல் துறையினர் களத்தில் ஆற்றும் சில பிரதான வகிபாகங்களாகும்.

u. **ஆற்றுகைக் கலைகள் பணிப்பகம்**

அறிமுகம். தேசிய நலன், நிறுவன நலனின் வைபவரீதியான மற்றும் பொழுதுபோக்குத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் அதேபோன்று சேவையிலுள்ள மற்றும் ஓய்வுபெற்ற இ.வி.ப. ஆளணியினர் மற்றும் சிவில் அலுவலர்களின் சேமநலனுக்கான பொழுதுபோக்கு உதவிகளை வழங்குவதற்காகவுமான ஒரேயொரு அமைப்பாக ஆற்றுகைக் கலைகள் பணிப்பகம் நிறுவப்பட்டுள்ளது. நாட்டின் புகழ்பெற்ற மற்றும் நன்கு அறியப்பட்ட ஆற்றுகை நிறுவனமொன்றாக, ஆற்றுகைக் கலைகள் பணிப்பகமானது நிறுவனத்தின் பிரதான இலாபமீட்டும் நிறுவனமொன்றாக இ.வி.ப. வருமானத்தை வலுப்படுத்தியுள்ளது.

v. **சிவில் நிருவாகப் பணிப்பகம்**

அறிமுகம். சிவில் நிருவாகப் பணிப்பகமானது வெவ்வேறு பணிப்பகங்களின் கீழ் வருகின்ற பல்வேறு சேவைகளை ஆற்றுவதற்காக சிவிலியன் ஊழியர்களை வழங்குவதற்குப் பிணைக்கப்பட்டுள்ளது. இது வினைத்திறனான நிருவாகம் ஒன்றிற்காகவும் சிவிலியன் ஊழியர்கள் மீதான ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்காகவும் விமானப் படைத் தளபதிக்குப் பொறுப்புக்கூறக்கூடியதாகும்.

w. **நிதிப் பணிப்பகம்**

அறிமுகம். நிதிப் பணிப்பகமானது இ.வி.ப. இன் நிதிசார் நடவடிக்கைகளை திறைசேரியுடன் இணக்கமான முறையில் முகாமை செய்கிறது. இப்பணிப்பகமானது சகல பாதிடப்பட்ட செலவினங்களுக்குமான திரவத்தன்மையின் கிடைப்பனவை உறுதி செய்வதுடன் செலவழிப்பதற்கான வழிப்படுத்தல் ஆலோசனைகளையும் வழங்குகிறது.

x. **கட்டளை வேளாண் அலகு**

அறிமுகம். இலங்கை விமானப் படையின் கட்டளை வேளாண் அலகு ஆனது நிறுவனத்தினுள் விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் வர்த்தக முயற்சிகளின் மேம்பாடு மற்றும் ஒருங்கிணைப்பு, அத்துடன் விமானப் படையில் உள்ள சகல படைச் சேவையினர் மற்றும் சிவில் ஆளணியினர் ஆகியோருக்கு பண்ணைப் பொருட்களை உற்பத்தி செய்து வழங்குதல் ஆகியவற்றுக்காகத் தாபிக்கப்பட்டது.

y. **பல்மருத்துவ சேவைகள் அலுவலகம்**

அறிமுகம். ஒரு அத்தியாவசிய தடுப்பு மற்றும் நோய்தீர்க்கும் சுகாதார சேவை என்ற முறையில், பல்மருத்துவ சேவையானது இ.வி.ப. இன் ஒவ்வொரு நபருக்கும் வசதியாகவும் தொழில்சார் முறையில் கிடைக்கச் செய்யப்பட வேண்டும். பல்மருத்துவ சேவைகள் அலுவலகமானது சகல இ.வி.ப. தாபனங்களுக்கும் சேவையை விரிவுபடுத்துகின்ற அதே நேரம் பல்மருத்துவ சேவைகளின் தரத்தையும் தொடர்ச்சியாக மேம்படுத்துகிறது.

z. **கட்டளை அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் அலகு**

அறிமுகம். கட்டளை அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் அலகு (CDPU) அரசாங்கம் மற்றும் இலங்கை விமானப் படையால் ஆரம்பிக்கப்படும் அபிவிருத்தி வேலைகளுக்காக மொத்தமாக சிறந்த வழங்கல்களைச் செய்யும் பொருட்டு கட்டளை அபிவிருத்திச் செயற்றிட்ட அதிகாரியின் (CDPO) கீழ் தாபிக்கப்பட்டுள்ளது. கட்டளை அபிவிருத்திச் செயற்றிட்ட அதிகாரி (CDPO) விமானப் படைத் தளபதிக்கு நேரடியாக அறிக்கையிடுவார். இ.வி.ப., நிருமாணங்களுக்குத் தேவையான துண்டுக் கற்களின் (இடிபாடுகளின்) தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக தெரிவுசெய்யப்பட்ட பகுதிகளில் குவாரி செயற்றிட்டங்களை செயற்படுத்துவதற்கான பொறுப்பைக் கொண்டுள்ளது. அபிவிருத்தி நோக்கங்களுக்கு மேலதிகமாக, இந்தச் செயற்றிட்டம் இராணுவ அமைப்புகளுக்காக இராணுவ நிறுவனங்களுக்கு அதன் பொருள்களை வழங்குவதற்கும் கடப்பாட்டைக் கொண்டுள்ளது.

aa. **கட்டளை வான் போக்குவரத்துப் பாதுகாப்புப் பரிசீலனையகம்**

(1) அறிமுகம்.

(a) இலங்கை விமானப் படையின் வான் போக்குவரத்துப் பாதுகாப்பு நிறுவனம் ஆனது கட்டளை வான் போக்குவரத்துப் பாதுகாப்புப் பரிசீலனையகத்தின் தலைவரான (CFSO) கட்டளை வான் போக்குவரத்துப் பாதுகாப்பு உத்தியோகத்தரால் தலைமை தாங்கப்படுகின்றது. இது CFSO இன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற சகல தொழிற்பாடுகளுக்கும் விமானப் படைத் தளபதிக்குப் பொறுப்புக்கூற வேண்டியதாகும். வான் போக்குவரத்துப் பாதுகாப்பின் பறத்தல் மற்றும் பொறியியல் அம்சங்களை கையாள்வதற்கு இரண்டு பதவிநிலை அதிகாரிகள் இருக்கின்றனர்.

(b) பறத்தல், பொறியியல் மற்றும் மருத்துவக் கிளைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று பிரதம வான் போக்குவரத்துப் பாதுகாப்புப் பரிசீலனையாளர்கள் (CFSI) இருத்தல் வேண்டும். அவர்கள் கொள்கை, நடைமுறைகள் மற்றும் மேற்கொள்ளப்படும் மீளாய்வுகள் ஆகியவற்றையும் CFSI இன் பிற தொடர்புடைய தொழிற்பாடுகளையும் வகுத்தமைப்பதில் CFSO உடன் தொடர்பு கொள்வர். மேலும், பிரதம வான் போக்குவரத்துப் பாதுகாப்புப் பரிசீலனையாளர் - பறத்தல் (CFSI – Flying) இன் கீழ் தொழிற்படும் நிலையான இறக்கை, சுழல் இறக்கை, ஜெற் விமானம் மற்றும் வான் போக்குவரத்துக் கட்டுப்பாடு ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நான்கு வான் போக்குவரத்துப் பாதுகாப்புப் பரீசீலனையாளர்கள் (FSI) இருப்பர்.

ab. **உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு**

அறிமுகம். உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது (IAD) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளில் கூறப்பட்ட சட்டநியதித் தேவைப்பாடுகளின் நிறைவேற்றத்திற்காக 2011 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டதாகும். அதற்கிணங்க, IAD ஆனது விமானப் படைத் தளபதிக்கு நேரடியாக அறிக்கையிடும் ஒரு பிரிவாக இருப்பதுடன் அது 'கட்டளை உள்ளகக் கணக்காய்வாளர்' ஆல் தலைமைதாங்கப்பட்டது. 2017 இல் பின்னர், பிரதான உள்ளகக் கணக்காயவாளர் (சிவில்) ஆக சிவில் அரச கணக்காளர் ஒருவர் நியமிக்கப்பட்டதன் காரணமாக மேலே கூறப்பட்ட பதவிநிலை 'கட்டளை உள்ளகக் கணக்காய்வாளர் (படைச்சேவை)' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. பிரதான உள்ளகக் கணக்காய்வாளரும்கூட (சிவில்) உள்ளகக் கணக்காய்வுக் கடமைகளை சுயாதீனமாக ஆற்றுவதுடன் விமானப் படைத் தளபதிக்கு அறிக்கையிடுகிறார்.

ac. **கட்டளை தர உத்தரவாதப் பரிசீலனையகம்**

அறிமுகம். கட்டளைத் தர உத்தரவாதப் பரிசீலனையகம் (CQAI) ஆனது இ.வி.ப. இனுள் தர உத்தரவாதத் தொழிற்பாடுகளை ஆற்றுவதற்காகத் தாபிக்கப்பட்டுள்ளது. CQAI ஆனது கட்டளை தர உத்தரவாத உத்தியோகத்தரால் (CQAO) தலைமைதாங்கப்படுகிறது. அவர் பணிப்பகத்தின் QAS இனது வினைத்திறனான தொழிற்பாடு தொடர்பில் விமானப் படைத் தளபதிக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர் ஆவார். அவர், அவரை நேரடியாக அணுகுவதற்கான உரிமையைக் கொண்டிருக்கிறார்.

ad. **கட்டளை ஆட்சேர்ப்பு அலுவலகம்**

அறிமுகம். ஆட்சேர்ப்பானது கட்டளை ஆட்சேர்ப்பு உத்தியோகத்தரின் பொறுப்பாக இருக்கிறது. விமானப் படைத் தளபதியால் அதிகாரமளிக்கப்படும் போதெல்லாம் இலங்கை நிரந்தர மற்றும் தொண்டர் விமானப் படையில் காணப்படும் அதிகாரிகள், பெண் அதிகாரிகள், விமானப் படை வீரர்கள் மற்றும் விமானப் படை வீராங்கனைகள் ஆகியோருக்கான வெற்றிடங்களை நிரப்புவதை நோக்கி வழிப்படுத்துவதே ஆட்சேர்ப்புப் பிரிவின் வகிபாகமும் பொறுப்பும் ஆகும். இந்த நோக்கமானது வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரித்தல், செய்தித்தாள்கள்/ தொலைக்காட்சியில் விளம்பரப்படுத்தல் மற்றும் ஏனைய விசேட ஆட்சேர்ப்பு வழிமுறைகள் ஊடாக அடையப்படுகிறது.

ae. **கட்டளை ஆய்வு மற்றும் அபிவிருத்தி அலகு**

(1) அறிமுகம்.

(a) கட்டளை ஆய்வு மற்றும் அபிவிருத்தி அலகானது (CRD Cell) 2011 மார்ச் மாதம் முதல் தற்போது வரை இயங்குகிறது. தாபிக்கப்பட்ட CRD அலகானது விமானப் படையின் ஒட்டுமொத்த வினைத்திறனையும் மேம்படுத்துவதற்கு அவசியமான பரப்புகளில் ஆய்வு மற்றும் அபிவிருத்திகளை நடத்தி, ஒருங்கிணைக்கிறது.

(b) ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பகுதியானது (RDW) 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கட்டுநாயக்கா இ.வி.ப. தளத்தில் தாபிக்கப்பட்டதுடன் அது கட்டளை ஆய்வு மற்றும் அபிவிருத்தி அதிகாரியின் (CRDO) கீழ் தொழிற்படுகிறது. RDW ஆனது ஆய்வு மற்றும் அபிவிருத்தி சம்பந்தப்பட்ட துறைகளில் தொழிற்படுகின்ற தொழில்வாண்மையாளர்கள், நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுடன் தொடர்புபட்ட வகையில் இ.வி.ப. ஆய்வுக் கற்கைகளை நடத்துவதற்கான/ வசதியளிப்பதற்கான பொறுப்பைக் கொண்டுள்ளது.

af. **கட்டளை சேமநலச் செயற்றிட்ட அலகு**

(1) அறிமுகம்.

(a) கட்டளை சேமநலச் செயற்றிட்ட அலகானது சேமநல நடவடிக்கை ஒன்றாக விமானப் படை உறுப்பினர்களின் நுகர்வுக்காக சலுகை விலையில் சகல அத்தியாவசியப் பண்டங்களையும் பிற நுகர்வுப் பொருட்களையும் வழங்குவதற்காகத் தாபிக்கப்பட்டது.

(b) வெளி நிறுவனங்களிடமிருந்து பண்டங்களையும் நுகர்வுப் பொருட்களையும் பெரியளவுகளில் வாங்கி, கணிசமானளவு கண்காணிப்பு நடவடிக்கைகள் நடைபெறுகின்ற நாடுபூராகவும் உள்ள இ.வி.ப. நிறுவனங்களினுள் அவற்றை களஞ்சியப்படுத்தி விநியோகிக்கின்ற நடவடிக்கைச் செயற்பாடுகளில் கட்டளை சேமநலச் செயற்றிட்ட அலகு ஈடுபடுகிறது.

ag. **ஐ.நா. அமைதிகாக்கும் பணி**

அறிமுகம். இலங்கை விமானப் படை மத்திய ஆபிரிக்கக் குடியரசில் (MINUSCA) ஐ.நா. அமைதி காக்கும் பணியில் 2015 ஆம் ஆண்டிலிருந்து ஈடுபடுகிறது. இங்கு எம்.ஐ. 17 ரக உலங்குவானூர்திகள் (03) மற்றும் 110 இ.வி.ப. துருப்பினர் தற்போது MINUSCA இல் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

2. முன்னேற்றமும் எதிர்கால இலட்சியங்களும்

2.1 முன்னேற்றம்

2022 ஆம் ஆண்டில் சமூக மற்றும் பொருளாதார மந்த நிலை போன்ற தடைகள் காணப்பட்ட போதிலும், கீழ்வரும் முன்னேற்றங்கள் அடையப்பட்டுள்ளன.

இலக்கு	பிரதான அடைவுகள்
இலக்கு-01 இலங்கை விமானப் படையின் பறத்தல் மற்றும் செயற்பாட்டு இயலுமைகளை மேம்படுத்தலும் வலுப்படுத்தலும்	(1) வரையறுக்கப்பட்ட CATIC, China இற்கு அனுப்பப்பட்ட PT-6 விமானத்தின் எட்டு (08) என்ஜின்களில் நான்கு (04) என்ஜின்களின் முழுமை திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் ஒப்படைப்புக்காக காத்திருக்கப்படுகிறது. இது இல. 1 பறத்தல் பயிற்சி அலகின் பறத்தல் பயிற்சிகளை மேம்படுத்தி, வலுப்படுத்தும். (2) 35 வருட சேவைக் காலத்தை ஏற்கனவே பூர்த்தி செய்திருந்த இரண்டு (2) Y-12II விமானங்களுக்கு (SCL-853, SCL-854) சேவைக் காலத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. மேலும், 1 x Y-12II விமானத்தின் (SCL-854) சேவைக் காலத்தை நீடிப்பதும் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டதுடன் தொழினுட்ப ஆவணப்படுத்தல் இறுதி அங்கீகாரத்திற் காகச் சமர்ப்பிக்கப்பட்டன. (3) 5 x Kfir C2/ C7 பல்வகிபாக ஜெற் விமானங்களை C12 பதிப்புக்கு மேம்படுத்தும் வேலைகள் நடைபெறுகின்றன. இச் செயற்றிட்டம் 2021 நவெம்பர் 4 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் தற்போது 30% முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது. (4) SFI-783, F-7GS பல்வகிபாக ஜெற் விமானத்தின் முழுமையான திருத்த வேலைகள் AOW இ.வி.ப. கட்டுநாயக்காவினால் முன்னெடுக்கப்படுவதுடன் இச்செயற்றிட்டத்தின் 80% ஆன வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. (5) கீழ்வரும் Bell 212/412/412EP உலங்குவானூர்தி களில் 1000 மணித்தியால/5 ஆண்டுகள் சுத்திகரிப்புப் பணிகள் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டதுடன் பறப்பு நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்பட்டன. (a) SUH-563 - Bell 212 (b) SUH-522 - Bell 412 (c) SUH-523 – Bell 412 (d) SUH-529 – Bell 412 (6) SMH-4428 Mi-171 E உலங்குவானூர்தியின் மூலதன முழுமைத் திருத்தப் பணிகள் பூர்த்தி

இலக்கு	பிரதான அடைவுகள்
	செய்யப்பட்டது. உலங்குவானூர்தி 2022 அக்டோபர் 23 இல் இலங்கைக்கு வழங்கப்பட்டதுடன் இறுதி ஏற்பனவுக்காக காத்திருக்கப்படுகிறது. (7) புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட Bell 206 உலங்குவானூர்தியின் (SHT-556) மீளமைப்புப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டதுடன் பறப்புப் பயிற்சி நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்பட்டுள்ளது. (8) SJT-749 K-8 விமானம் மற்றும் SFI-708 F-7BS விமானம் ஆகியவற்றின் ஆயுத உதிரிப்பாகங் களுக்கான முழுமைத் திருத்தம். (9) 10 ஆம் இலக்க படையணிக்கான வாயு அழுத்த முறைமை, Bell 206 தரையைக் கையாளும் சக்கர டயர்கள் 12, Bell 212/ 412 தரையைக் கையாளும் சக்கர டயர்கள் 12 மற்றும் தையல் மெஷின் ஆகியவற்றின் கொள்வனவு. (10) கீழ்வரும் பயிற்சிகள் நடத்தப்பட்டன. (a) 6 இ.வி.ப. அலுவலர்கள் (தொழினுட்ப வியலாளர்) 5 தடவைகள் பாகிஸ்தானில் நடைபெற்ற விமானப் பயிலுநர்களுக்கான (தரை மற்றும் வான்) விமானப் பயிற்சிப் பாடநெறியில் கலந்து கொண்டுள்ளனர். (b) 60 இ.வி.ப. அலுவலர்கள் (தொழினுட் பவியலாளர்) 24 தடவைகள் இந்தியாவில் நடைபெற்ற இந்திரா Mk II ராடார் பாடநெறிகள், MI-17, இலத்திரனியல் பொருத்துநர் (IPT), Dornier கடல்சார் உளவு விமான பறத்தல் மற்றும் தொழினுட்பப் பயிற்சி, Dornier கடல்சார் உளவு விமான – அவதானிப்பாளர் பறத்தல் மற்றும் தொழினுட்பப் பயிற்சி, AE (L), தர உறுதிப்பாட்டு சேவைகள் (விமானம்) (QAS-A) ஆகியவற்றில் கலந்து கொண்டனர். (c) 2 இ.வி.ப. அலுவலர்கள் (தொழினுட்ப வியலாளர்) 2 தடவைகள் அமெரிக்காவில் நடைபெற்ற விமானக் கள நடவடிக்கைகள், ஏற்பாட்டியல், உபகரணங்களை பழக்கப்படுத்தல் பயிற்சிப் பாடநெறிகளில் கலந்து கொண்டனர். (d) 1 இ.வி.ப. அலுவலர்கள் (தொழினுட்ப வியலாளர்) 1 தடவை அமெரிக்காவில் நடைபெற்ற பாதுகாப்புச் சேவை தொழினுட்ப பதவிநிலை அதிகாரி பயிற்சிப் பாடநெறியில் கலந்து கொண்டார்.

இலக்கு	பிரதான அடைவுகள்
<u>இலக்கு 02</u> EEZ உள்ளடக்கப்படும் இலங்கையின் ஆட்புல எல்லைக்கு மேலாக தந்திரோபாயமானதும் உத்தி சார்ந்ததுமான வான்வெளிக் கண்காணிப்பை மேம்படுத்தலும் உளவுத்திறன் இயலுமைகளை மேம்படுத்தலும்.	(1) உளவு பார்க்கும் வல்லமைகளுடன்கூடிய Dornier விமானம் (SMR-846) இ.வி.ப. இற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த விமானம் கடல்சார் களப் பாதுகாப்புக்காக இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டது. (2) AASL இனால் இணங்கிக் கொள்ளப்பட்ட வாறு அவர்களுடைய ATM முறைமையை மேம்படுத்துகின்ற அதே நேரம் இ.வி.ப. இன் AD வலையமைப்புக்கு புதிய ATM முறைமையை கொள்வனவு செய்தல். (3) INDRA MK-11 ராடாருக்கான சுதேச அலைவாங்கியின் அபிவிருத்தி (4) தரை கட்டுப்பாட்டு நிலையம் ஒன்றின் (1) தயாரிப்பு. (5) மேம்பட்ட நீடித்திருக்கக்கூடிய திறன் மற்றும் வலுவான வடிவமைப்பு அம்சங்களுடன்கூடிய சுதேச UAV விமானம் மற்றும் Lihiniya Mk IE இன் வடிவமைப்பும் அபிவிருத்தியும். இச்செயற்றிட்டத்தில் 60% ஆனவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. (6) ILOC (இந்திய கடன் வரிசை) ஊடாக இரண்டு புதிய ரோஹினி ராடார் முறைமைகளின் கொள்வனவு இடம்பெறுகிறது. (7) 100 Km Data down Link முறைமையின் கொள்வனவு நடைபெறுகிறது. (8) 09 விரிவாக்க பிரதியீட்டு சிறிய data link முறைமைகள் 02 இன் கொள்வனவு. (9) உலகளாவிய தடங்காட்டி சற்றலைட் முறைமை GNSS/ INS ஒன்றின் (1) கொள்வனவு. (10) CDRD பிட்டிப்பன இனால் நிதியுதவி அளிக்கப்பட்ட ஒரு ஆய்வுச் செயற்றிட்டமாக மீரிகம இ.வி.ப. நிலையத்தில் உள்ள ADC & CC இற்கு ஜீ அடிப்படையிலான தரையிலிருந்து வானுக்கான தொடர்பாடல் கண்காணிப்பு முறைமையின் அபிவிருத்தி. (11) CDRD பிட்டிப்பன இனால் நிதியுதவி அளிக்கப்பட்ட ஒரு ஆய்வுச் செயற்றிட்டமாக வான் பாதுகாப்பு நடவடிக்கை நிலையம் (ADOC)/ வான் பாதுகாப்பு ராடார் படையணிகள் (ADRS) இல் வான் பாதுகாப்பு உருவப்போலி முறைமையின் மேம்படுத்தல் பூரணப்படுத்தப்பட்டது.

இலக்கு	பிரதான அடைவுகள்
இலக்கு -03 EW கிளையின் தாபிப்பும் வலையமைப்பு மைய போர் அறிமுகமும்	(1) இ.வி.ப. வான் பாதுகாப்பு வலையமைப்பு வல்லமையை மேம்படுத்தும் பொருட்டு ட்ரோன் ஜம்மர்கள் கொள்வனவு. (2) Doppler அடிப்படையிலமைந்த கண்டறிகருவி மற்றும் ஜம்மர்களின் ஆரம்பநிலை வடிவமைப்புத் திட்டமானது இரத்மலானை இ.வி.ப. தளத்திலுள்ள E&TE அலகின் R&D ஆய்வுகூடத்தில் அபிவிருத்தி செய்யப்பட்டது. அடுத்த கட்டமாக முன்மாதிரியான ட்ரோன் கண்டறி கருவி மற்றும் ஜம்மர் இனை தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. (3) விமானம் சார்ந்த கண்காணிப்பு ஒளிபரப்பு (ASD-B) விமானக் கண்காணிப்பு முறைமை வெற்றிகரமாக விருத்தி செய்யப்பட்டு பயன்படுத்து வதற்குத் தயாராக உள்ளது. (4) கடல்சார் கண்காணிப்பு வல்லமையை மேம்படுத்துவதற்காக சீனக்குடா, இ.வி.ப. அக்கடமியின் இல. 03 கடல்சார் படையணியில் உள்ள Dornier விமானத்திற்கு விமானத்தை அடையாளம் காணும் முறைமை (AIS) இணைக்கப்பட்டுள்ளது. (5) வான் பாதுகாப்பு ராடார் கண்காணிப்பு வல்லமையை உத்தம மட்டத்தில் பேணுவதற்காக ராடார் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. (6) EW முகாமைத்துவ அலகானது பணிப்பக மட்டத்தில் அமைக்கப்பட்டதுடன் எதிர்கால அபிவிருத்திகளைத் திட்டமிடுவதற்காக பதவிநிலை அதிகாரிகள் அந்த அலகுகளுக்கு குறித்தொதுக்கப் பட்டுள்ளனர்.
இலக்கு – 04 முக்கிய வான் சொத்துக்கள், நிறுவல்களுக்கான முற்றடக்கமான படைப் பாதுகாப்பை வழங்குவதும் VAs, VPs இற்கான பாதுகாப்பை வழங்குவதும்	(1) பாதுகாப்புச் சுற்றளவினை அதிகரிப்பதற்காக இ.வி.ப. தாபனங்களுக்கு சீ.சீ.ரீ.வீ. கமெராக்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்களின் கொள்வனவும் ஏற்பாடும். (2) R&D செயற்றிட்டம் ஊடாக இயலுமையை கட்டியெழுப்பும் பயிற்சி நிகழ்வுகள் மற்றும் தொழினுட்ப மேம்படுத்தல் நிகழ்வுகளை நடத்துதல்.

இலக்கு	பிரதான அடைவுகள்
இலக்கு -05 சகல காலநிலை நிலைமைகளிலும் இரவு / பகல் வேளைகளில் இடம்பெறும் நடவடிக்கைகளை நிறைவாக்குவதற்கு இ.வி.ப. வான் களங்களின் மேம்படுத்தல்கள்	(1) வீரவில இ.வி.ப. நிலையத்தில் விமான ஓடுதளம் மற்றும் வான்கல ஓடுதளம் ஆகியவற்றுக் கான ஒளியூட்டல் முறைமையின் நிறுவல். (2) வவுனியா இ.வி.ப. தளத்திலுள்ள விமான ஓடுதளத்தில் காணப்படும் சேதங்கள் திருத்தப் பட்டன. (சிறு கற்களால் அடைத்தல்). (3) வவுனியா இ.வி.ப. தளத்திலுள்ள மத்திய காப்புத் தளத்தில் பொருத்துகளின் விரிவுகள் சரிசெய்யப்பட்டன. (4) இல. 05 உலங்குவானூர்தித் தளத்தின் Re-casting.
இலக்கு -06 இணைய வெளியில் நட்புப் படைகளின் சுதந்திரமான செயற்பாட்டையும் எதிரிப் படைகள் அவற்றைப் பயன்படுத்துவதை / துஸ்பிரயோகம் செய்வதைத் தடுப்பதையும் உறுதி செய்யும் அதேவேளை இணையவெளியை அதிகபட்சமாகப் பயன்படுத்துதல்	(1) இ.வி.ப. இணைய நடவடிக்கைகள் நிலையத்திற்கு தொழிற்றுறை ரீதியான ஆற்றல்மிகு பணியாளர்களை இணைத்தல். (2) தற்போதுள்ள உறுப்பினர்களின் இணையப் பாதுகாப்பு தொடர்பான ஆற்றல்கள் மற்றும் திறன்களை மேம்படுத்தல். (3) யுத்த இணைய அச்சுறுத்தல்களுக்கு விசேட இணையப் பாதுகாப்பு அணிகளை உருவாக்குதல். (4) சேவையக கடினப்படுத்தல் நடைமுறை ஒன்றை அமுல்படுத்தல். (5) இ.வி.ப. தாபனங்களில் தரவு நிலைய பரிசோதனைகள் மற்றும் IT பரிசோதனைகளை நடத்துதல். (6) உள்ளக முறைமைகள் மற்றும் தொகுதி களில் பாதிப்பு மதிப்பீடுகளை நடத்துதல். (7) இ.வி.ப. வலைத்தளங்களை மெய்நிகர் முகில் தளமாக மாற்றுதல். (8) இ.வி.ப. இன் உத்தியோகபூர்வ வலைத் தளத்திற்கு முகில் அடிப்படையிலான பாதுகாப்புத் தளத்தை (முகில் தோற்றம்) நிறுவுதல். (9) IT பொறியியல் கிளையின் கிளை நியமனத் தாபனத்தில் உள்ள இ.வி.ப. இணைய நடவடிக்கைகள் நிலையத்திற்கு ஒரு புதிய கட்டளைக் கட்டமைப்பை அறிமுகஞ் செய்தல். (10) திறந்த மூல புலனாய்வைச் சேகரிப்பதற்கு தகவல் செயற்பாடுகள் நிலையத்தை (IOC) அமைத்தல்.

இலக்கு	பிரதான அடைவுகள்
	(11) இ.வி.ப. இணையச் செயற்பாடுகள் நிலையத்தின் இயலுமையை விரிவாக்குவதற்கு இணையப் பாதுகாப்புக் கருவிகளின் கொள்வனவும் அபிவிருத்தியும்.
<u>இலக்கு -07</u> மேலதிகமான சேமநல நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்து வதன் ஊடாக இ.வி.ப. இல் அதிக மனவுறுதியைப் பேணுவதும் வரவின்மையை இழிவளவாக்குவதும்	(1) தற்போதைய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக HRMIS இனை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (2) குடும்பத்துடன் இருப்பதற்கு அதிக வாய்ப்பினை வழங்கும் நோக்குடன், வருடாந்த இடுகையினை அட்டவணைப்படுத்தும்போது படையினரால் கோரப்பட்ட இடுகை விருப்பத் தேர்வுகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளன. (3) தற்போது, பெரும்பாலான படையினர் பல்வேறு காரணங்களால் அமைதியான முறையில் சேவையை விட்டு வெளியேறுவதில் ஆர்வம் காட்டுகின்றனர். இதனால், அவர்களுக்கு ஏற்படும் முரண்பாடுகளை களைந்து, அவர்களை மேலும் சேவையில் வைத்திருப்பதற்கு ஊக்கப்படுத்தும் முகமாக அவர்களுடைய மேல்நிலை அதிகாரிகளால் அவர்கள் அடிக்கடி நேர்முகம் காணப்படுகின்றனர். (4) சவப்பெட்டி மற்றும் எம்பாம் கட்டணங்களை ரூபா 60,000.00 வரை அதிகரிப்பதன் மூலம் மரணச் சடங்கு செலவுகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (5) இ.வி.ப. இல் பணியாற்றுபவர்கள் மரணம் அடைந்தால் அவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளின் சுமையினைக் கருத்திற் கொண்டு, அவற்றைக் குறைக்கும் நோக்கில் POR தன்னியக்க முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. (விடுப்பு, கடமைப் கொடுப்பனவு, L/Out). (6) நிதிசார்ந்த பிரச்சினைகளைக் குறைப்பதற்காக உயிர்வாழும் அதிகாரிகளுக்கு சம்பளத்துடன் சேர்த்து உலருணவுக்கான கொடுப் பனவையும் அதிகாரிகளுக்கான வேலையாளின் கொடுப்பனவையும் செலுத்துவதற்கான முறைமை யின் நடைமுறைப்படுத்தல். (7) படையினரின் வேலைப் பழுவைக் குறைப்பதற்காகவும் காகிதாதிகளின் பாவனையைக் குறைப்பதற்காகவும் தன்னியக்கமான செயற்பாட்டுப் பதிவேட்டு (F.540) முறைமையை நடைமுறைப் படுத்தல். (8) படையினரின் தொழில்சார் திறன்களை அபிவிருத்தி செய்வதற்காக ஆண்டு நெடுகிலும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இலக்கு	பிரதான அடைவுகள்
	(9) தத்தமது விடயதானங்களில் நிபுணத்துவத்தைக் கொண்டுள்ளவர்கள் மென்பொருள் நிகழ்ச்சித் திட்டங்களை விருத்தி செய்வதற்கு ஊக்கப்படுத்தப்பட்டதுடன் வாய்ப்பும் வழங்கப்பட்டது. (10) தமது தரங்களுக்கான ஏற்பிசைவை பெற்றுக் கொள்வதற்குரிய NVQ மட்ட நியமத்தைப் பூர்த்தி செய்வதற்கு சகல தரங்களைச் சேர்ந்தோருக்கும் மேம்படுத்தல் பயிற்சி நியமம். (11) இ.வி.ப. இன் உயர்தர மற்றும் அடிப்படைப் பாடநெறிகளுக்கான இ-புத்தகப் பயிற்சிக் குறிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன. (12) இ.வி.ப. வைத்தியசாலைகள் மற்றும் மருத்துவ நிலையங்கள் ஊடாக இ.வி.ப. பணியாளர்கள், அவர்களது குடும்பத்தினர் மற்றும் ஓய்வு பெற்ற படையினர் ஆகியோருக்கான மருத்துவ வசதிகளைப் பேணுதல். (13) கட்டுநாயக்கா இ.வி.ப. தள வைத்தியசாலையில் இ.வி.ப. பணியாளர்கள், அவர்களது குடும்பத்தினர் மற்றும் ஓய்வு பெற்ற படையினர் ஆகியோருக்கான இரத்த மாற்று வசதியினை பேணுதல். (14) கட்டுநாயக்கா இ.வி.ப. வைத்தியசாலையில் உள்ள ஓய்வுபெற்றோருக்கான விடுதிக் கட்டடத் தொகுதியில் ஓய்வுபெற்ற இ.வி.ப. பணியாளர்களுக்காக உள்ளகச் சிகிச்சை வசதியைப் பேணுதல். (15) சகல படையினர்களுக்கும் சிவில் ஊழியர்களுக்கும் KIA இன் NOKs ஊழியர்களுக்கும் DIA ஊழியர்களுக்கும் இலவசமாக இ.வி.ப. நாட்குறிப் பேடுகள் மற்றும் நாட்காட்டிகளை வழங்குதல். (16) வருடாந்த அவுருது பொல நிகழ்வு 2022 ஏப்ரல் மாதத்தில் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டது. (17) கட்டுநாயக்கா இ.வி.ப. தளத்தில் 1 ஆம் மற்றும் 2 ஆம் கட்ட பாடசாலைக் கட்டட நிருமாணமானது நீர்கொழும்பு, வலயக் கல்வி அலுவலகத்துடன் இணைந்து ஒருங்கிணைக்கப் பட்டது. (18) ஓய்வுபெற்ற இ.வி.ப. பணியாளர்களுக்காக வேலை வங்கியொன்று பேணப்படுகிறது. (19) DIA பணியாளர்களுக்குத் தெவையான கீழ்வரும் மருத்துவ உதவிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இலக்கு	பிரதான அடைவுகள்
	(a) செயற்கைக் கண்கள் 01 (b) செயற்கை கை கால்கள் 30 (c) சக்கர நாற்காலிகள் 04 (d) கைபிடிகள் 02 (20) சேவைப் பணியாளர்களின் NOKs இற்கு வேலை இடமாற்றங்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு பரிந்துரைக் கடிதங்கள் வழங்கப்பட்டன. (21) கொழும்பு மற்றும் குருநாகலில் உள்ள பாதுகாப்புக் கல்லூரிகளுக்கு 92 மாணவர்களை அனுமதிப்பதுடன் தொடர்புடைய வேலைகள் பாதுகாப்புடன் இணைந்தவாறு ஒருங்கிணைக்கப் பட்டன. (22) இ.வி.ப. தாபனங்களுக்கு சேமநல வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு உதவிகள் வழங்கப்பட்டன. (23) வெளியிலுள்ள வேலை வாய்ப்புகளுக்கு விண்ணப்பிக்கும் பொருட்டு சேவைச் சான்றிதழுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு சேவைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (24) 35 இ.வி.ப. பணியாளர்கள் தங்களது சொந்த வீடுகளைப் புனரமைப்பதற்கும் நிர்மாணிப்பதற்குமென பணியாளர் உதவி வழங்கப்பட்டது. (25) ரணவிரு சேவா அதிகாரசபையுடன் இணைந்தவாறு சிரேஷ்ட இ.வி.ப. அதிகாரிகள் மற்றும் ஆணையிடும் அதிகாரிகளிடையே 53 விருசர சலுகை அட்டைகள் விநியோகிக்கப்பட்டன. (26) 59 இ.வி.ப. முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சேவைகள் இலவசமாக வழங்கப்பட்டன. (27) தெரிவு செய்யப்பட்ட படையினருக்கு ஒரு நிதி நிவாரணமாக இ.வி.ப. இற்கு சொந்தமான ஆதனங்களிலிருந்து 26 காணித் துண்டங்கள் வழங்கப்பட்டன. (28) மேம்படுத்தப்பட்ட அணுகல் மற்றும் உயர் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தல் ஆகியவற்றின் மூலம் உயர்தரம் வாய்ந்த பல்மருத்துவ வசதிகளை தொடர்ச்சியாக மேம்படுத்துவதன் ஊடாக இ.வி.ப. பணியாளர்கள் மற்றும் அவர்களது நேரடி குடும்ப உறுப்பினர்கள் ஆகியோருக்கு மேம்பட்ட பல்மருத்துவ சேவைகளை வழங்குதல். (29) இ.வி.ப. இன் சேவை உறுப்பினர்கள் அவர்களது குடும்பத்தினர் மற்றும் இலங்கை விமானப் படையில் பணியாற்றும் சிவில் அலுவலர்கள் ஆகியோருக்கு சாத்தியமானளவு உயர்ந்தபட்ச வாய்ச்

இலக்கு	பிரதான அடைவுகள்
	சுகாதார சேவையை வழங்குதல். (30) இ.வி.ப. இனால் ஒதுக்கப்பட்ட கடமையின்போது துப்பாக்கியைப் பயன்படுத்தியதன் காரணமாக சட்ட நடவடிக்கைகளை எதிர்நோக்குகின்ற படையினருக்கு உதவுவதற்காக சட்ட உதவி நிதியம் தாபிக்கப்பட்டுள்ளது. (31) படையினரின் சட்ட அறிவினை அதிகரிப்பதற்காகவும் சட்ட உதவி தேவைப்படுகின்ற படையினருக்கு இலவச சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காகவும் தொடர்ச்சியான முறையில் சட்டக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களும் சட்ட உதவி நிகழ்ச்சித் திட்டங்களும் இ.வி.ப. இன் சட்டப் பணிப்பகத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டன.
<u>இலக்கு -08</u> இ.வி.ப. வளங்களை தேசிய அக்கறைக்கு உதவும் பொருட்டு உத்ததமாக்கல்	(1) வாடகை விமானப் போக்குவரத்துகள் ஊடாக மொத்தமாக ரூபா 14,074,086.00 இனை இ.வி.ப. ஈட்டியுள்ளதுடன் அத்தொகையானது அரசாங்க திரட்டு நிதியத்தில் பற்று வைக்கப்பட்டது. (2) SMH-4417, SMH-4418 Mi-171SH உலங்குவானூர்திகள் முழுமையான பழுதுபார்ப்பின் பின்னர் 2022 மார்ச் இல் ஐ.நா. பணிக்காக மத்திய ஆபிரிக்காவில் நிலைநிறுத்தப்பட்டன. (3) பாதிப்புக்குள்ளாகும் கிராமங்களுக்காக மின் வேலி அமைக்கப்பட்டது. வவுனியா மாவட்டத்தில் 'ஹல்மில்லாவ கிராமம்', கனுகஹவெவ கிராமம்' மற்றும் தல்கஹவெவ கிராமம்' ஆகியவற்றை உள்ளடக்கியதாக மொத்தம் 13 km 740 m தூரத்திற்கு இது அமைக்கப்பட்டது. (4) 3,296 ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் விமானங்கள் 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தொற்று நீக்கப்பட்டன. (5) SCM-3501 மற்றும் SCM-3502, MA-60 விமானங்களின் தரையிறக்க அமைப்புகளை முழுமையாகப் பழுதுபார்ப்பதற்கான மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து நடவடிக்கைகளை ஹெலிடுவர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் இன் கீழ் மீளவும் கொண்டு வருவதற்கான பெறுகைச் செயன் முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இச்செயற்றிட்டத்தின் 50% ஆனவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. (6) இ.வி.ப. வழங்கிய அனைத்து பங்களிப்பு களுக்கும் போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டன. தொழில்சார் ஆலோசனைகள், விசேடத்துவமான உருவாக்கங்கள் / தயாரிப்புகள் மற்றும் திறன்மிக்க பணியாளர்கள் தொடர்பில் தேவையான பொதுப் பொறியியல் உதவிகள் வழங்கப்பட்டன.

இலக்கு	பிரதான அடைவுகள்
	(7) ஐ.நா. பணிக்குத் தேவையான திறன்மிக்க தொழிலாளர்களும் பொதுப் பொறியியல் வளங்களும் வழங்கப்பட்டன. (8) எதிர்பாராத இயற்கை பேரிடர்கள் மற்றும் ஏனைய தேசிய தேவைகள் உள்ளிட்ட இ.வி.ப. இன் தேவைகளுக்கு வழங்குவதற்காக தற்போதுள்ள போக்குவரத்து / விசேடத்துவ வாகனங்களை மிகவுயர்ந்த மட்ட இயக்க நிலையில் வைத்திருத்தல். (9) மத்திய ஆபிரிக்காவில் ஐ.நா. அமைதி காப்புப் பணிக்காக அவசியமான ஆளணி மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (10) தேசிய அக்கறைக்கு உதவுவதில் இ.வி.ப. இன் இலக்குகளை அடைவதற்காக மனித வளங்களை வழங்குதல். (11) ஐ.நா. பணிக்குத் தேவையான காகிதாதி மற்றும் அலுவலக உபகரணங்களை வழங்குதல். (12) பொது மக்களை இலக்காகக் கொண்டு, இ.வி.ப. மருத்துவக் குழாமின் பங்குபற்றலுடன் வெளிப்பகுதி மருத்துவ கிளினிக்/முகாம்கள் (13) ஒவ்வொரு வெளியேற்ற அமர்வுக்காகவும் தேவையான மருத்துவப் பணியாளர்களை வழங்குவதன் மூலம் இ.வி.ப. இல் MEDEVAC வசதியைப் பேணுவதற்கு உதவி வழங்கப்பட்டது. (14) மருத்துவ உபகரணம், நுகர்வுப் பொருள்கள் மற்றும் பணியாளர்களை வழங்குவதன் மூலம் MINUSCA இல் ஐ.நா. அமைதிகாப்புப் பணியில் நீடிக்கப்பட்டது. (15) அரச துறை வைத்தியசாலைகளின் ஒருங்கிணைப்புடன் இயற்கை இடர் ஏற்படும் காலப் பகுதிகளில் தேவையான மருத்துவ உதவிகளை வழங்குதல். (16) அத்தகைய அச்சுறுத்தல்களை நீக்குவதற்குத் தேவையான மருத்துவ ஆலோசனைகள் வழங்கப் பட்டன. அத்தகைய இடர்கள் ஏற்படும்போது மருத்துவப் பணியாளர் உதவிகளும் வழங்கப்பட்டன. (17) 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குக்குளேகங்கை, IPSTOL இலுள்ள ஐ.நா. முன் பணிக்கமர்த்தல் பாடநெறியொன்று வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டது. (18) 2022 ஆம் ஆண்டில் 05 CBRNE அடிப்படைப் பாடநெறிகளும் 03 உயர்தரப் பாடநெறிகளும்

இலக்கு	பிரதான அடைவுகள்
	வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டன. (19) 02 இடர் முகாமைத்துவ அடிப்படைப் பாடநெறிகளும் 05 DART பாடநெறிகளும் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டன. (20) MOD மற்றும் முப்படையினருடன் இணைந்து குருகல ரஜமகா விகாரை மற்றும் பௌத்தாலோக வெசாக் கலயம் ஆகியவற்றில் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய வெசாக் விழாவுக்குத் தேவையான உதவிகள் வழங்கப்பட்டன. (21) MOD மற்றும் ஏனைய சகோதர சேவைகளுடன் இணைந்து BMICH இல் நடத்தப்பட்ட ஜய பிரித் ஓதும் நிகழ்வை ஒழுங்கமைப்பதற்கு உதவிகள் வழங்கப்பட்டன. (22) கங்காராம பௌத்த ஆலயத்தில் நவம் மகா பெரஹராவையும் பெல்லன்வில ரஜ மகா விகாரையில் மகா பெரஹராவையும் நடத்துவதற்கு உதவி வழங்கப்பட்டது. (23) அம்பாறையில் உள்ள தீகவாப்பிய பாகொடவில் புனித சின்னங்களை பதிப்பதற்குத் தேவையான உதவிகள் வழங்கப்பட்டன. (24) மார்ச் மாதத்தில் சிவனொளிபாத துப்புரவு நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டது. (25) நாட்டில் போதைப்பொருள் அச்சுறுத்தலை இல்லாதொழிப்பதற்காக இலங்கை காவல் துறை மற்றும் ஏனைய புனலாய்வு முகவராண்மைகளுடன் இணைந்து பின்வரும் கைது நடவடிக்கைகள் நடத்தப்பட்டன (கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் – 232).

போதைப்பொருள்	அளவு
ஹெரோயின்	126.291 g
கேரளா கஞ்சா	5.2 kg
ஐஸ் போதைப்பொருள்	580.9 g
சட்டவிரோத மாத்திரைகள்	6,855
கஞ்சா	10.537 kg
கஞ்சா செடிகள்	5,017
மாவா	2.24kg
சட்டவிரோத மதுபானம்	5,614.1 Ltrs
மரியுயான- கலக்கப்பட்ட போதைப்பொருள்	1,741
வெளிநாட்டு சட்டவிரோத சிகரெட்டுகள்	9,060
முறையற்ற புகையிலை	2.24 kg
வெளிநாட்டு மதுபானம்	39 Ltrs

அட்டவணை - 1

(26) பல்மருத்துவ நிலையங்கள் இல்லாத இ.வி.ப. நிலையங்களில் நடமாடும் பல்மருத்துவ கிளினிக்கு

இலக்கு	பிரதான அடைவுகள்
	களை நடத்துதல். (a) சிகிச்சைகளின் எண்ணிக்கை - 110 (b) நோயாளர்களின் எண்ணிக்கை - 64 (27) நடத்தப்பட்ட பலதரப்பட்ட நடமாடும் பல்மருத்துவ கிளினிக். (a) சிகிச்சைகளின் எண்ணிக்கை - 1,178 (b) நோயாளர்களின் எண்ணிக்கை - 960
இலக்கு -09 வினைத்திறனை அதிகரிப்பதற்காகவும் தொழில்சார் தன்மையை மேம்படுத்துவதற்காகவும் இ.வி.ப. இன் தற்போதைய பயிற்சி முறைமை மற்றும் நடைமுறைகளை மீளாய்வு செய்தல்	(1) கொத்தலாவெல பாதுகாப்புப் பல்கலைக் கழகத்தால் இளநிலை மாணவ அதிகாரிகள் பயிற்சியானது ஏற்கனவே திருத்தப்பட்டதுடன் 2022 யூலை 05 இல் அங்கீகரிக்கப்பட்டது. (2) அதிகமான பயிற்சிப் பாடத்திட்டங்கள் விசேடத்துவமான அதிகாரிகளை உள்ளடக்கிய சுயாதீன சபையினால் திருத்தப்பட்டுள்ளன.
இலக்கு -10 இ.வி.ப. இன் படைக் கட்டமைப்பை சரியான அளவில் பேணுதல், ஆட்சேர்ப்புத் திட்டத்தைத் திருத்துதல் மற்றும் புதிய தொழினுட்பங்களை அறிமுகப்படுத்துதல்	(1) மனித வளங்களை சரியான அளவில் பேணுவதுடன் தொடர்புடைய பூரணமான விபரங்களும் இ.வி.ப. சபை நடவடிக்கைகள் மற்றும் இ.வி.ப. ஐ சரியான அளவில் பேணுவதுடன் தொடர்புடைய முன்மொழிவுகள் என்பன இ.வி.ப. இன் உயர் அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. (2) C of S இனால் நியமிக்கப்பட்ட சபை அதிகாரிகளால் ஆய்வொன்று முன்னெடுக்கப்பட்டதுடன் சபையின் பரிந்துரைகள் எதிர்கால நடவடிக்கைகளுக் காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
இலக்கு -11 அதிநவீன ICT தொழில்நுட்பவியல் ஊடாக இ.வி.ப. இன் நிலைமை பற்றிய விழிப்புணர்வு மற்றும் செயற்பாட்டு வினைத்திறனை அதிகரித்தல்	(1) AI முறையியலைப் பயன்படுத்தி இலக்கு மற்றும் எதிர்கால அச்சுறுத்தல்களை இனங்காண்ப தற்கு தன்னியக்கமான தீர்வொன்று விருத்தி செய்யப் பட்டது. (2) ADRS மற்றும் ADC&CC இற்கு இணைந்த ராடார் படங்களை வழங்குவதற்கு ஒரு தன்னியக்க மத்திய ராடார் ஒருங்கிணைந்த முறைமை விருத்தி செய்யப்பட்டது. (3) AERS முறைமையிலுள்ள எதிர்கால விமான சுத்திகரிப்பு தேவைகளை இனங்காணவும் முன்கணிப்பு செய்யவும் மென்பொருள் தொகுதியொன்று விருத்தி செய்யப்பட்டது. (4) இ.வி.ப. இன் உயர் விமானப் பறப்புத் தகுதியை பேணுவதற்கு தேவையான எதிர்கால ஏற்பாட்டியல் தேவைகளை முன்கணிப்புச் செய்வதற்கு ஒரு மென்பொருள் தொகுதி விருத்தி செய்யப்பட்டது. (5) இ.வி.ப. இல் கடதாசிப் பாவனையைக்

இலக்கு	பிரதான அடைவுகள்
	குறைப்பதற்கு தன்னியக்க பாய்வு முகாமைத்துவத் தீர்வொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. (6) தீர்மானமெடுத்தல் செயன்முறைக்கு உதவு வதற்கு தன்னியக்க முறைமைக்கான பகுப்பாய்வு கட்டுப்பாட்டுப் பலகத்தை அறிமுகப்படுத்தல். (7) மோதல் ஏற்படும் பகுதிகள் / போர்க் களங்கள் மற்றும் பேரழிவுச் சூழ்நிலைகளில் இராணுவப் படை நிலைகளை கண்காணிப்பதன் மூலம் வினைத்திறனான வகையில் வளங்களைப் பயன்படுத்துவதற்கு சேவை களுடன் இணைந்தவாறான வலையமைப்பு மையப் படுத்தப்பட்ட பணி திட்டமிடல் முறைமை அபிவிருத்தி செய்யப்பட்டது. (8) DHQC அக்குரேகொடை இல் AFHQ இற்கான சுதேசிய கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு நிலையம் விருத்தி செய்யப்பட்டது. ஆரம்ப முன்மொழிவு அங்கீகரிக்கப்பட்டதுடன் அபிவிருத்திச் செயன்முறை ஆனது இல. 01 ITW இரத்மலானையில் ஆரம்பிக்கப் பட்டது. (9) இ.வி.ப. தளம் கட்டுநாயக்காவிற்கும் இ.வி.ப. நிலையம் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்கும் இடையிலான தொடர்பாடல் விரைவானதாகவும் நம்பகமானதாகவும் நீண்ட தூரத்திற்கு மேல் பாதுகாப்பானதாகவும் இருப்பதை உறுதி செய்வதற்காக இவ்விரு அமைவிடங்களுக்குமிடையே புதிய கண்ணாடி இழை கம்பிவடம் பதித்தல். (10) ஆதனங்களுக்கு ஏற்படும் சேதங்களைக் குறைத்தல் மற்றும் முறைமைகளின் நம்பகத்தன்மையை பாதுகாத்தல் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்காக மீரிகம இ.வி.ப. நிலையத்திலுள்ள ADC&CC இற்கு மின்னல் பாதுகாப்பு முறைமையொன்று நிறுவப்பட்டது.

அட்டவணை - 1

2.1.1 2022 ஆம் ஆண்டு இலங்கை விமானப் படைச் செயலாற்றுகையின் பொழிப்பு

a. வான் நடவடிக்கைப் பணிப்பகம்.

(1) 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பின்வரும் பிரதான வகைகளின் கீழ் மொத்தமாக 6,298.17 பறப்பு மணித்தியாலங்கள் பறக்கப்பட்டுள்ளன.

தொ. இல.	செயற்பாடுகளின் வகை	பறப்பு மணித்தியால எண்ணிக்கை
01	நடவடிக்கைகள்	2,527.30
02	பயிற்சி	3,122.45
03	VVIP	131.55
04	VIP	81.58
05	வர்த்தக ரீதியானது	17.10
06	வான் சோதனைகள்	398.49
07	வெளிநாட்டு விமானப் போக்குவரத்து	4.00
08	அனர்த்த நிவாரணச் செயற்பாடுகள்	14.10
மொத்தம்		**6,298.17**

அட்டவணை - 2



உரு - 1

(2) வான்வழி பயணித்த பயணிகள் எண்ணிக்கை - 566
(3) வான்வழி கொண்டு சென்ற சரக்குகளின் எண்ணிக்கை - 795 Kg

(4) கடந்த ஆறு (6) ஆண்டுகளுக்கான பறப்பு மணித்தியாலங்களின் ஒப்பீடு கீழே காட்டப்பட்டுள்ளது.

செயற்பாட்டு வகை	ஆண்டு					
	2017	2018	2019	2020	2021	2022
நடவடிக்கைகள்	-	4,448.40	3,793.25	3,337.85	3,969.50	2,527.30
கூட்டு நடவடிக்கைகள்	-	112.20	264.45	-	-	-
நடவடிக்கைகள் - வெளிநாடு	-	2,077.55	2,165.13	2,341.64	-	-
பயிற்சி	5,875.38	6,412.19	7,890.14	6,868.40	5,757.01	3,122.45
VVIP	601.30	618.15	641.50	329.85	221.05	131.55
VIP	281.35	220.15	153.05	84.30	131.50	81.58
வர்த்தக ரீதியானவை	278.35	117.50	235.00	35.80	37.50	17.10
வெளிநாடு	-	20.00	-	64.25	67.15	4.00
ஏனையவை	5,685.50	617.40	86.05	-	751.57	412.59
மொத்தம்	**12,721.88**	**14,645.14**	**15,229.37**	**13,062.09**	**10,926.48**	**6,298.17**

அட்டவணை - 3



உரு - 2

(5) <u>வான் நடவடிக்கைகள் பணிப்பகம் தொடர்பில் வருடாந்த நடவடிக்கைத் திட்டத்திற்கு எதிராக உண்மையான செயலாற்றுகை</u>


தொ. இல.	2022 இல் பொருட்களை வாங்கவும்	தொகை (ரூபா மில்.)
01	மூடுபனி துருத்தி (Ea-05)	0.16
02	தீ அணைப்பான்கள் (Ea-268) தீயணைப்பு கம்பளம் (Ea-30) விநியோக நீர்க்குழாய் 25m (Ea-24)	3.60
03	BA தொகுதிகள் (Ea-05)	3.36
04	தலைக்கவசம் - தீயணைப்பு (Ea-15)	2.48

அட்டவணை - 4

(6) 2022 ஆம் ஆண்டில கீழ்வரும் வருமானங்கள் ஒன்றிணைந்த நிதியத்திற்கு மாற்றப்பட்டன:

தொ. இல.	ஈட்டப்பட்ட வருமான வகை	தொகை (ரூபா மில்.)
1	வாடகை விமானப் பயண வருமானம்	14.07
2	உள்நாட்டு விற்பனை வருமானம்	0.53

அட்டவணை - 5



உரு - 3

(7) 2022 ஆகஸ்ட் 26 இல் கெரவலப்பிட்டிய பிரதேசத்தில் நடத்தப்பட்ட தீயணைப்பு (Bambi) நடவடிக்கை.



b. தரை நடவடிக்கைகள் பணிப்பகம்.

(1) 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த நடவடிக்கைத் திட்டம் எதிர் உண்மையான செயலாற்றுகை.

பிரேரிக்கப்பட்ட நடவடிக்கைகள்	பாதீட்டு ஒதுக்கீடு (ரூபா மில்.)	நிதிச் செயலாற்றுகை (ரூபா மில்.)	பொதிகரீதியான பூர்த்தி மட்டம்
பாதுகாப்பு நுகர்வுப் பொருள்கள் மற்றும் வான்படை நாய்களுக்கான உபகரணங்களின் கொள்வனவு	68.02	50.07	73.61%
RPC/SVP (பாதுகாப்பு நுகர்வுப் பொருள்கள், நீர்க்குழாய்கள் மற்றும் வான்படை நாய்களுக்கான பொருள்கள்)	6.89	4.05	58.78%
பிற சேவைகள் (காப்புறுதி)	11.44	8.86	77.44%
பாதுகாப்பு, EOD மற்றும் பரா உபகரணங்களின் பராமரிப்பு	5.0	0.68	13.6%
யுத்த உபகரணப் பழுதுபார்ப்பு	2.18	0.021	0.96%
பாதுகாப்பு, EOD, பரா, DART மற்றும் RSF உபகரணக் கொள்வனவு	36.59	27.13	74.14%
அனர்த்த முகாமை உபகரணக் கொள்வனவு	18.71	14.96	79.95%

அட்டவணை - 6

(2) இடர் முகாமைத்துவத்திற்கான உதவி.

(a) முல்லைத்தீவு இடர் முகாமைத்துவப் பயிற்சி நிலையத்தினால் 2022 இல் நடத்தப்பட்ட இடர் முகாமைத்துவப் பாடநெறியை 200 இலங்கை விமானப் படையினரும் 06 இலங்கை இராணுவத்தினரும் 08 இலங்கை கடற்படையினரும் 04 இலங்கைப் பொலிசாரும் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளனர்.

(b) கீழ்வரும் விசேட செயற்பாடுகள் இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

i. 2022 சனவரி 30 ஆந் திகதி அம்பாறை – உகன பிரதேசத்தில் தீயணைப்பு மற்றும் இடர் மீட்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

ii. 2022 மார்ச் 05 இல் மீரிகம, ஹொரகொல்ல காட்டுப் பகுதியில் இடம்பெற்ற காட்டுத் தீ கட்டுப்படுத்தப்பட்டது.

iii. 2022 மார்ச் 06 இல் தம்புள்ள பொருளாதார நிலையத்தில் தீயணைப்பு மற்றும் இடர்மீட்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

iv. 2022 செப்ரெம்பர் 27 இல் அத்துருகிரிய குப்பைக் கிடங்கில் தீயணைப்பு மற்றும் இடர்மீட்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

v. 2022 செப்ரெம்பர் 27 இல் மோதர பிரதேசத்தில் உள்ள வீட்டுத் திட்டத்தில் தீயணைப்பு மற்றும் இடர் மீட்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

vi. மேலும், எந்தவொரு அவசர நிலைமைகளிலும் உதவுவதற்காக 24/7 ஆயத்தநிலை கடமைகளுக்கு கொழும்பு, ஹம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் பகுதிகளில் மூன்று பிரதான இடர் முகாமைத்துவ நிலையங்களை இ.வி.ப. பேணுகிறது.

(3) தேசிய அபிவிருத்திக்காக ஆயுதப் படையினரின் பங்களிப்பு.

(a) அநுராதபுரம் முகாமில் 05 ஏக்கர் பரப்பளவில் நெல், வாழை மற்றும் மரக்கறிகள் பயிரிடப்பட்டது.

(b) பலாலி முகாமில் 10 ஏக்கர் பரப்பளவில் மாமரங்கள், திராட்சை, வாழை, மரக்கறிகள் மற்றும் அலோய்வேரா ஆகியன பயிரிடப்பட்டன.

(c) தியத்தலாவ முகாமில் 04 ஏக்கர் பரப்பளவில் மரக்கறிகள் பயிரிடப்பட்டன.

(d) மொரவெவ முகாமில் 148 ஏக்கரில் நெல் பியிரிடப்பட்டது.

(e) பாலாவி முகாமில் 07 ஏக்கர் பரப்பளவில் அன்னாசி, மரக்கறிகள் மற்றும் அலோய்வேரா என்பன பயிரிடப்பட்டன.

(f) அம்பாறை முகாமில் 06 ஏக்கர் பரப்பளவில் நெல் மற்றம் மரக்கறிகள் பயிரிடப்பட்டன.

(g) சிகிரியா முகாமில் 08 ஏக்கர் பரப்பளவில் நெல், வாழை மற்றும் மரக்கறிகள் பயிரிடப்பட்டன.

(4) கீழ்வரும் செயற்றிட்டங்கள் 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு பராமரிக்கப்பட்டன.

(a) அக்குறேகொட செயற்றிட்டம்.
(b) மஹியங்கணை செங்கல் செயற்றிட்டம்.
(c) பசுமை விவசாய நடவடிக்கை நிலையம்.
(d) நீலகிரி மகா சேயா புனரமைப்புச் செயற்றிட்டம்.
(e) சந்தகிருசேயா செயற்றிட்டம்.

c. வானூர்திப் பொறியியல் பணிப்பகம்.

(1) <u>விமானப் பாகங்களின் கொள்வனவு</u>. 2022 ஆம் ஆண்டில் மொத்தமாக 587.90 மில்லியன் ரூபா விமானப் பராமரிப்புக்காகச் செலவழிக்கப்பட்டுள்ளது. இது விமானப் பாகங்கள் மற்றும் எரிபொருள், மசகு எண்ணையின் கொள்வனவுத் தொகையான 494.38 மில்லியன் ரூபாவையும் எஞ்சின், கியர் பெட்டி, சுழலிகள் மற்றும் விமானக் கருவிகளின் கொள்வனவு மற்றும் ட்ரோன்களின் கொள்வனவுத் தொகையான 93.52 மில்லியன் ரூபாவையும் உள்ளடக்கியுள்ளது.

(2) <u>பழுதுபார்ப்பும் முழுமைத் திருத்தமும்.</u> 2022 ஆம் ஆண்டில் விமானப் பழுதுபார்ப்பு மற்றும் சுத்திகரிப்புக்கென மொத்தமாக 2,954.40 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டது. இது விமானத்தின் பாரிய முழுமைப் பழுதுபார்ப்புத் தொகையான ரூபா 907.22 மில்லியன் ரூபாவையும் விமானக் கருவிகளின் அளவுதிருத்தல் மற்றும் பழுதுபார்ப்பு, கிபீர் சண்டை விமான மேம்படுத்தல் மற்றும் சேவைக்கு மீளெடுத்தல் போன்றவற்றுக்கான தொகையான 2,047.18 மில்லியன் ரூபாவையும் உள்ளடக்கியுள்ளது.

(3) <u>விமானத் தொகுதி மற்றும் விமானப் போக்குவரத்து தொடர்பில் இல. 01 FTW இன் அபிவிருத்தி.</u> இந்தப் படையணி PT-6 விமானம் 13, Cessna-150 விமானங்கள் 06 மற்றும் K-8 விமானங்கள் 07 ஆகியவற்றைக் கொண்டுள்ளதுடன் இது 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல வகையான சுத்திகரிப்புகளை மேற்கொண்டிருந்தது. படையணியானது 25 மணித்தியால சுத்திகரிப்பு 09 இனையும், 100 மணித்தியால சுத்திகரிப்பு 01 இனையும் 400 மணித்தியால சுத்திகரிப்பு 01 இனையும் PT-6 விமானத்தில் துருப்பிடித்தல் பரிசோதனைச் சேவைகள் 264 இனையும் மேற்கொண்டிருந்தது. மேலும், 50 மணித்தியால சுத்திகரிப்பு 10 இனையும், 100 மணித்தியால சுத்திகரிப்பு 7 இனையும் 200 மணித்தியால சுத்திகரிப்பு 6 இனையும், துருப்பிடித்தல் பரிசோதனை சுத்திகரிப்பு 144 இனையும் செஸ்னா 150 விமானம் தொடர்பில் கூடுதல் வான்பறப்புத் தகுதிச் சோதனைகள் 23 இனையும் இப்படையணி மேற்கொண்டிருந்தது. மேலுள்ளவற்றுக்கு மேலதிகமாக, 50 மணித்தியால சுத்திகரிப்பு 04 இனையும், 125 மணித்தியால சுத்திகரிப்பு 04 இனையும், 150 மணித்தியால சுத்திகரிப்பு 01 இனையும் 250 மணித்தியால சுத்திகரிப்பு 03 இனையும் துருப்பிடித்தல் பரிசோதனை சுத்திகரிப்பு 72 இனையும் 36 உண்ணிக்கையிலான 15 of NFD, 17 உண்ணிக்கையிலான 30 of NFD மற்றும் 05 எண்ணிக்கையிலான 90 of NFD உம் கே-8 விமானம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாதம்	செயற்பாடுகள்	நாணய மதிப்பு
மார்ச்	HUOSAI-6A என்ஜின்கள் 08 11 மார்ச் 22 இல் அனுப்பப்பட்டன. (பழுதுபார்ப்பு மற்றும் முழுமைத் திருத்தத்திற்காக)	USD 87,000.00 x 08

அட்டவணை - 7

(4) <u>இல. 02 படையணியின் விமானத் தொகுதி மற்றும் விமானப் போக்குவரத்துடன் தொடர்புடைய அபிவிருத்தி</u>. இல. 02 படையணியானது AN-32 B விமானங்கள் 04 மற்றும் C-130 விமானங்கள் 02 ஆகியன உள்ளடங்கலாக மொத்தம் 06 விமானங்களைக் கொண்டுள்ளது. இந்தப் படையிண 2022 ஆம் ஆண்டில் பல்வேறு வகை சுத்திகரிப்புகளை மேற்கொண்டிருந்தது. இந்தப் படையணியானது, 600 மணித்தியால சுத்திகரிப்பு 03 இனையும் 900 மணித்தியால சுத்திகரிப்பு 03 இனையும் AN-32B விமானங்களில் முன்னெடுத்திருந்தது.

(a) AN-32B விமானத் தொகுதியின் (SCM 860, SCM 863, SCM 869 விமானங்கள்) 600 மணித்தியால சுத்திகரிப்பு.



(b) AN-32B விமானத் தொகுதியின் (SCM 860, SCM-863, SCM-869) 900 மணித்தியால சுத்திகரிப்பு.



(c) An-32B விமானத்தின் மாற்றியமைப்பு – TCAS நிறுவல்.



(5) இல. 03 கடல்சார் படையணியின் விமானம் மற்றும் விமானப் போக்குவரத்துடன் தொடர்புடைய அபிவிருத்திகள். இல. 03 படையணி B-200 விமானம் 01 இனையும் Y-12 II விமானம் 01 இனையும் Dornier-228 ஒன்றையும் என மொத்தம் 03 விமானங்களைக் கொண்டுள்ளது. இந்தப் படையணி 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு வகை சுத்திகரிப்புகளை மேற்கொண்டது. இது 07 நாட்கள் சுத்திகரிப்பு 45 இனையும் B-200 விமானத்தில் துருப்பிடித்தல் கட்டுப்பாட்டு சோதனைகள் 09 இனையும் மேற்கொண்டிருந்தது. மேலும் இது 07 நாட்கள் சுத்திகரிப்புகள் 15 இனையும் 14 நாட்கள் சுத்திகரிப்பு 08 இனையும் 01 மாத AHCP மூன்றினையும் 30 நாட்கள் சுத்திகரிப்பு 03 இனையும் 01 மாத AR சுத்திகரிப்பு 03 இனையும் 02 மாத சுத்திகரிப்பு 02 இனையும் 03 மாத சுத்திகரிப்பு 01 இனையும் Dornier-228 விமானம் தொடர்பில் மேற்கொண்டிருந்தது. மேலுள்ளவற்றுக்கு மேலதிகமாக, ஒட்டடுக்குப் பிரிப்பு அவதானிக்கப்பட்டதன் பின்னர் இரு பக்க கண்ணாடிகளும் மாற்றப்பட்டதன் மூலம் பாரிய பழுதுபார்ப்பு B-200 விமானத்தில் மேற்கொள்ளப்பட்டது.

(a) ஒட்டடுக்குப் பிரிப்பு அவதானிக்கப்பட்டதன் பின்னர் இரு பக்க கண்ணாடிகளும் மாற்றப்பட்டன.



(6) இல 4 VIP/ VVIP உலங்குவானூர்திப் படையணி - இ.வி.ப. இரத்மலானை. இல. 4 படையணியானது Bell 412 உலங்குவானூர்திகள் 04 இனையும் Bell 412 EP உலங்குவானூர்திகள் 04 இனையும் Bell 212 உலங்குவானூர்தி 01 ஐயும் என மொத்தம் 09 உலங்குவானூர்திகளைக் கொண்டுள்ளது. இந்தப் படையணியானது 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு வகையான சுத்திகரிப்புகளையும் முன்னெடுத்திருந்தது. இது 25 மணித்தியால சுத்திகரிப்புகள் 52 ஐயும் 50 மணித்தியால சுத்திகரிப்புகள் 19 ஐயும் 100 மணித்தியால சுத்திகரிப்புகள் 05 ஐயும் 300 மணித்தியால சுத்திகரிப்புகள் 01 ஐயும் 600 மணித்தியால சுத்திகரிப்புகள் 04 ஐயும் 03 மாத துருப்பிடித்தல் பரிசீலனை சுத்திகரிப்பு 03 இனையும் Bell 412 மற்றும் Bell 412 EP உலங்குவானூர்திகளில் மேற்கொண்டிருந்தது. மேலும், Bell 412, Bell 412 EP உலங்குவானூர்திகளில் 05 பிரதான நிலைக்கூறு பிளேடுகள், 04 AFCU, 02 TCU, 02 எரிபொருள் பம்புகள், 04 PTG, 03 வால்ப்பகுதி நிலைக்கூறு இயக்கி, 03 எண்ணெய்யிலிருந்து எரிபொருள் வெப்பமாக்கி, 02 MFCU, 02

என்ஜின், 04 தீயணைப்பான்கள், ஒரு TX Assy, 42˚ கியர் பெட்டி 01, 90˚ கியர் பெட்டி 01 ஆகியவற்றை மாற்றியதன் மூலம் பாரிய உதிரிப்பாக மாற்றல்கள் மேற்கொள்ளப்பட்டன.

(a) நன்னிலை முழுமைத் திருத்தங்கள் பூர்த்தி செய்யப்பட்டு SMH 4428 MI 171E உலங்குவானூர்தி இன் இயங்குநிலைக்கு கொண்டு வரப்பட்டது.



(b) நன்னிலை முழுமைத் திருத்தத்திற்கு அனுப்புவதற்காக தரை ஓட்ட நிலைமைக்காக SMH 4429 உலங்குவானூர்தியின் மீளமைப்பு பூர்த்தி செய்யப்பட்டது.



(c) SUH 529 மற்றும் SUH 530 உலங்கு வானூர்திகளின் இரு பக்கத்திற்குமான பணித்தொகுதியினரின் இருக்கைகளின் புதுப்பிப்பு பூர்த்தி செய்யப்பட்டது.



(d) Bell 412EP உலங்குவானூர்திகளின் (SUH527, SUH528, SUH529, SUH 530) VVIP ஏறும் படிகளுக்கு வழுக்காத மேற்பரப்பு இடப்பட்டது.



(e) தளர்வான உறைகள், என்ஜின் உள்ளெடுப்பு உறைகள், என்ஜின் வெளியேற்றல் உறைகள் மற்றம் ஏறு படிகளுக்கான உறைகள் என்பவற்றின் உருவாக்கம் (ASW ஊடாக).



(7) இல. 05 சண்டைப் படையணியின் விமானம்/ விமானப் போக்குவரத்துடன் தொடர்புடைய அபிவிருத்தி. இல. 05 சண்டைப் படையணியானது FT-7BS விமானம் 01 இனையும் F7-BS விமானம் 03 இனையும் F-7GS விமானம் 04 இனையும் என மொத்தமாக 08 விமானங்களைக் கொண்டுள்ளது. இப் படையணியானது 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு வகையான சுத்திகரிப்புகளை மேற்கொண்டிருந்தது. இந்தப் படையணி என்ஜின் 25 மணித்தியால சுத்திகரிப்புகள் 05 இனையும் என்ஜின் 50 மணித்தியால சுத்திகரிப்புகள் 02 இனையும் Airframe/E&I ரேடியோ 50 மணித்தியால சுத்திகரிப்பு 01 இனையும், Airframe/E&I நேடியோ மற்றும் ARM 100 மணித்தியால சுத்திகரிப்பு 01 இனையும் Airframe/E&I

றேடியோ மற்றும் ARM 200 மணித்தியால சுத்திகரிப்பு 01 இனையும் Airframe/E&I றேடியோ மற்றும் ARM 300 மணித்தியால சுத்திகரிப்பு 01 இனையும் Airframe/E&I றேடியோ மற்றும் ARM 400 மணித்தியால சுத்திகரிப்பு 01 இனையும் 07 நாள் பறப்பற்ற தரை ஓட்டங்கள் 29 இனையும் 10 நாள் பறப்பற்ற தரை ஓட்டங்கள் 22 இனையும் 30 நாள் பறப்பற்ற தரை ஓட்டங்கள் 11 இனையும் 06 மாத சுத்திகரிப்பு 03 இனையும் துருப்பிடித்தல் கட்டுப்பாட்டுச் சேவைகள் 49 இனையும் ARM 03 மாத சுத்திகரிப்பு 08 இனையும் ரேடியோ 03 மாத சுத்திகரிப்பு 07 இனையும் யுசுஆ 30 நாள் சுத்திகரிப்பு 24 இனையும் FT-7BS, F7-BS, F-7Gs விமானங்களில் தள்ளல் இருக்கை 02 வருட சுத்திகரிப்பனையும் மேற்கொண்டிருந்தது.

(a) 03 பொறியியல் அதிகாரிகள் தரை ஓட்டத் தகுதியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளனர்.



(b) படைக்கலன்களுக்கான 02 வருட சுத்திகரிப்பும் airframe 300 மணித்தியால சுத்திகரிப்பும்.



(8) இல. 06 படையணியின் விமானம் மற்றும் விமானப் போக்குவரத்துடன் தொடர்புடைய அபிவிருத்தி. இல. 06 படையணியானது MI-171 விமானங்கள் 02 இனையும் MI-171SH விமானங்கள் 02 இனையும் MI-171E விமானங்கள் 01 இனையும் என மொத்தமாக 05 விமானங்களைக் கொண்டுள்ளது. இப்படையணி 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு வகையான சுத்திகரிப்புகளையும் மேற்கொண்டிருந்தது. இது 25 மணித்தியாலப் பரிசோதனை 13 இனையும், 25 மணித்தயால மசகிடல் வேலைகள் 06 இனையும், 50 மணித்தியாலப் பரிசோதனை 03 இனையும், 50 மணித்தியாலச் சுத்திகரிப்பு 05 இனையும், 100 மணித்தியாலச் சுத்திகரிப்பு 04 இனையும், 200 மணித்தியாலச் சுத்திகரிப்பு 01 இனையும் 300 மணித்தியாலச் சுத்திகரிப்பு 01 இனையும், 30 நாட்கள் களஞ்சியச் சுத்திகரிப்பு 08 இனையும், 03 மாதக் களஞ்சியச் சுத்திகரிப்பு 08 இனையும் 06 மாதக் களஞ்சியச் சுத்திகரிப்பு 07 இனையும் ஆஐ-17 உலங்குவானூர்திகளில் மேற்கொண்டிருந்தது.

(a) SMH-599 உலங்குவானூர்தி 2022 சனவரி மாதம் பறப்புக்கு உகந்த தகுதியை மீளப்பெற்றுள்ளது.



(b) 2022 பெப்ரவரியில் உதிரிப்பாகங்களை மாற்றியதன் மூலம் SMH-4426 உலங்குவானூர்தி VIP தேவைப்பாடுகளை பூர்த்தி செய்துள்ளது.



(c) SMH-4418 MI-171SH உலங்குவானூர்தியானது MINUSCA இற்கு அனுப்பப்படுவதற்கு முன் 2022 ஏப்ரல் மாதம் கழற்றப்பட்டது.



(d) UN பணியிலிருந்து இ.வி.ப. இற்கு மீள வந்தடைந்ததன் பின்னர் 2022 ஏப்ரல் மாதம் SMH-581 மற்றும் SMH-4415 உலங்கு வானூர்திகள் மீள கட்டமைக்கப்பட்டன.



(e) SLG-300 winch இனை களஞ்சியப்படுத்துவதற்காக ஆதரவுப் பொருத்து தயாரிக்கப்பட்டு 2022 யூலை மாதம் விமானக் கொட்டகைச் சுவரில் பொருத்தப்பட்டது.



(f) SMH-589 உலங்குவானூர்தியின் மூக்குப்பகுதி தரையிறக்க கியர் இற்கான புதிய ஆதரவுப் பொருத்து 2022 மே மாதத்தில் தயாரிக்கப்பட்டது. (இது ஒரு பயிற்சி உதவியாக செயன்முறைப்படுத்தப்படுகிறது).



(g) TETTRA பாடசாலையின் பயிற்சிக்குப் பயன்படுத்துவதற்காகவும் MI-17 உலங்குவானூர்தி தொழினுட்ப வியலாளர்களின் கைத்திறனை மேம்படுத்தும் தேவைப்பாட்டிற்கு வசதிசெய்வதற்காகவும் 2022 செப்ரெம்பர் மாதம் SMH-589 உலங்குவானூர்தியின் மீளாக்கச் செயன்முறை பூர்த்தி செய்யப்பட்டது.



(h) விலைமனு கோரலுக்கு முன்னரான பரிசீலனை ஆவணத்தின்படி SMH-599 மற்றும் SMH-4426 உலங்கு வானூர்திகள் 2022 அக்டோபரில் மீளாக்கம் செய்யப்பட்டன.



(9) இல. 7 படையணி – விமானம் மற்றும் விமானப் போக்குவரத்துடன் தொடர்புடைய அபிவிருத்திகள். இல. 7 படையணியானது Bell 206 விமானங்கள் 03 ஐயும் Bell 212 விமானங்கள் 7 ஐயும் என மொத்தமாக 10 விமானங்களைக் கொண்டிருக்கிறது. இந்தப் படையணியானது 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு சுத்திகரிப்பு வேலைகளை முன்னெடுத்திருந்தது. இது 03 மாத மற்றும் 100 மணித்தியால துருப்பிடித்தல் சுத்திகரிப்புகள் 19 இனையும் 25 மணித்தியால சுத்திகரிப்பு 39 இனையும் 50 மணித்தியால சுத்திகரிப்பு 19 இனையும் 100 மணித்தியால சுத்திகரிப்பு 08 இனையும் 600 மணித்தியால சுத்திகரிப்பு 02 இனையும் 1000 மணித்தியால சுத்திகரிப்பு 01 இனையும் 1200 மணித்தியால சுத்திகரிப்பு 01 இனையும் Bell 206 மற்றும் Bell 212 உலங்குவானூர்திகளில் மேற்கொண்டிருந்தது. மேலுள்ளவற்றிற்கு மேலதிகமாக, fuselage assy ஐ உருவாக்குதல், ASB 206-12-129 ஐ நிறைவேற்றுதல், துறைமுகப் பக்க கதவின் பழைய சேதத்தை பழுதுபார்த்தல், windshield assy ஐ மாற்றுதல், vertical pin மீதான கட்டமைப்புப் பழுதுபார்ப்பு மற்றும் 06 எண்ணிக்கையிலான ASB 212-21-166 rev A என்பவற்றின் மூலம் Bell 206 மற்றும் Bell 212 உலங்கு வானூர்திகளில் பாரிய விமானப் பழுதுபார்ப்புகள் மேற்கொள்ளப்பட்டன.




(10) இல. 08 படையணியின் விமானம் மற்றும் விமானப் போக்குவரத்துடன் தொடர்புடைய செயற்றிட்டங்கள் / நடவடிக்கைகளின் அபிவிருத்தி. இல. 08 படையணியானது Y-12II விமானங்கள் 04 இனையும் Y-12IV விமானங்கள் 02 இனையும் B-200 விமானம் 01 இனையும் என மொத்தம் 07 விமானங்களைக் கொண்டுள்ளது. இப்படையணி 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு வகையான சுத்திகரிப்புகளை மேற்கொண்டிருந்தது. இந்தப் படையணி 07 நாட்கள் சுத்திகரிப்பு 144 இனையும், 100 மணித்தியால சுத்திகரிப்பு 02 இனையும், 200 மணித்தியால சுத்திகரிப்பு 01 இனையும், 800 மணித்தியால சுத்திகரிப்பு 01 இனையும், துருப்பிடித்தல் கட்டுப்பாட்டுச் சுத்திகரிப்புகள் 37 இனையும் Y-12II, Y-12IV ஆகிய விமானங்களில் மேற்கொண்டிருந்ததுடன் 07 நாள் சுத்திகரிப்புகள் 48 இனையும் கட்டம் I மற்றும் கட்டம் II பரிசீலனைகள் 01 இனையும் துருப்பிடித்தல் கட்டுப்பாடு சுத்திகரிப்புகள் 04 இனையும் B - 200 Beech King விமானத்தில் மேற்கொண்டிருந்தது. இதற்கு மேலதிகமாக, of Y12-IV VVIP/VIP விமானத்தின் செங்குத்து நிலைப்படுத்தியிலிருந்து துண்டிக்கப்பட்ட HF அன்ரெனா மீது பாரிய பழுதுபார்ப்புகள் முன்னெடுக்கப் பட்டன. மேலும் பயிற்சி விமானப் போக்குவரத்தின்போது பறவையின் தாக்குதல் காரணமாக B-200 Beechcraft விமானத்தின் STBD இறக்கை முன்னிலை விளிம்பில் ஏற்பட்ட சேதம் பழுதுபார்க்கப்பட்டதுடன் Y-12 விமானமொன்றின் கிடைமட்ட நிலைப்படுத்தி பொருத்து தாங்குசட்டத்தில் ஏற்பட்ட வெடிப்பும் பழுதுபார்க்கப்பட்டது.


(a) King Air B-200 (BB-1900) விமானத்தின் STBD இறக்கை முன்னிலை விளிம்புப் பகுதியில் காணப்படும் சேதத்தின் புகைப்படம்.



(b) SCL-3124 விமானத்தில் காணப்படும் கிடைமட்ட நிலைப்படுத்தி பொருத்து தாங்குசட்டத்தின் வெடிப்பு



(c) SCL-3125 விமானத்தின் துருப்பிடித்தல் பழுதுபார்ப்பு.



(11) இல. 09 தாக்குதல் உலங்குவானூர்திப் படையணி - இ.வி.ப. தளம் ஹிங்குராக்கொடை. இல. 9 படையணியானது MI-24 உலங்குவானூர்திகள் 03 இனையும், MI- 35 உலங்குவானூர்திகள் 03 இனையும், MI-171E உலங்குவானூர்தி 01 இனையும், MI-171V உலங்குவானூர்தி 01 இனையும், MI-171 உலங்குவானூர்தி 01 இனையும் என மொத்தம் 09 உலங்குவானூர்திகளைக் கொண்டுள்ளது. இப்படையணி 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு வகையான சுத்திகரிப்புகளை மேற்கொண்டிருந்தது. இது 25 மணித்தியால சுத்திகரிப்பு 03 இனையும், 50 மணித்தியால சுத்திகரிப்பு 01 இனையும், களஞ்சியச் சுத்திகரிப்பு 29 இனையும் MI-171/171E/171V ஆகிய உலங்குவானூர்திகளில் மேற்கொண்டிருந்தது. அத்துடன், 10 நாள் சுத்திகரிப்புகள் 192 இனையும் 01 மாத சுத்திகரிப்பு 64 இனையும், 03 மாத சுத்திகரிப்பு 16 இனையும், 06 மாத சுத்திகரிப்பு 08 இனையும் வருடாந்த சுத்திகரிப்பு 08 இனையும் MI-24, MI-35 ஆகிய உலங்குவானூர்திகளில் மேற்கொண்டிருந்தது.

(12) இல. 10 சண்டைப் படையணி - இ.வி.ப. தளம், கட்டுநாயக்கா. - இல. 10 படையணி Kfir TC2 விமானங்கள் 02 இனையும், Kfir C2 விமானங்கள் 03 இனையும், Kfir C7 விமானம் 01 இனையும் கொண்டிருக்கிறது. இந்தப் படையணி 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு வகையான சுத்திகரிப்புகளை மேற்கொண்டிருந்தது. இப்படையணி OEM M/s IAI லிமிட்டெட் உடனான ஒத்துழைப்புடன் கிபீர் விமானத்தை மேம்படுத்துவதில் ஈடுபட்டிருந்தது.

(a) விமான fuselage மற்றும் இறக்கைகள் மீதான அழிவுகரமல்லா சோதனையின் (சுழலோட்டம், மீயொலி மற்றும் திரவ ஊடுருவிச் சோதனை) பூர்த்தி.



(b) கட்டமைப்புசார்ந்த மேம்படுத்தல்களின் ஆரம்பம்.



(13) இல. 111 UAV படையணி - இ.வி.ப. தளம் வவுனியா. இல. 111 UAV படையணியானது Searcher MK II ஒன்றையும் Lihiniya MK I ஒன்றையும் என 02 UAV களைக் கொண்டுள்ளது. இப்படையணி 2022 ஆம் ஆண்டில் பல்வேறு வகையான சுத்திகரிப்புகளை மேற்கொண்டிருந்தது. இது 06 வாரங்கள் UAV முற்காப்புச் சுத்திகரிப்பு 02 இனையும், 06 மாத என்ஜின் முற்காப்பு சுத்திகரிப்பு 01 இனையும் MK II இல் முன்னெடுத்திருந்தது.

(14) இல. 61 விமானப் போக்குவரத்து - இரத்மலானை இ.வி.ப. இல் விமானம் மற்றும் விமானப் போக்குவரத்து தொடர்பான நடவடிக்கைகளில் அபிவிருத்தி.

இல. 61 விமானப் போக்குவரத்துப் படையணியானது MI-171E உலங்குவானூர்திகள் 06 இனையும் MI-171 ஒன்றையும், MI-17V5 ஒன்றையும் என மொத்தம் 08 உலங்குவானூர்திகளை கொண்டுள்ளது. இப்படையணி 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு வகையான சுத்திகரிப்புகளையும் மேற்கொண்டிருந்தது. இது 25 மணித்தியால பரிசீலனைகள் 12 இனையும் 50 மணித்தியால பரிசீலனைகள் 05 இனையும், 100 மணித்தியால சுத்திகரிப்பு 03 இனையும் 300 மணித்தியால சுத்திகரிப்பு 01 இனையும் களஞ்சிய சுத்திகரிப்பு 36 இனையும் ஆஐ-17 உலங்குவானூர்திகளில் மேற்கொண்டுள்ளது.

கட்டுநாயக்கா இ.வி.ப. தளத்தில் SMH-596, SMH-4419, SHM-4420, SMH-4422 உலங்குவானூர்திகள் தரை ஓட்ட நிலைமைக்கு கட்டியெழுப்பப் பட்டன.



(15) இல. 62 விமானப் போக்குவரத்து – ஐ.நா. பணி, மத்திய ஆபிரிக்கா.

இல. 62 விமானப் போக்குவரத்து படையணியானது MI-17 V5 உலங்குவானூர்தி 01 இனையும், MI-171 SH உலங்குவானூர்தி இரண்டினையும் என மொத்தமாக 03 உலங்குவானூர்திகளைக் கொண்டுள்ளது. இப் படையணியானது 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு வகையான சுத்திகரிப்பு வேலைகளை முன்னெடுத்திருந்தது. இது 25 மணித்தியாலப் பரிசீலனை 14 இனையும், 50 மணித்தியால பரிசீலனை 09 இனையும், 25 மணித்தியால மசகிடல் 19 இனையும், 50 மணித்தியால சுத்திகரிப்பு 08 இனையும், 100 மணித்தியால சுத்திகரிப்பு 06 இனையும், 200 மணித்தியால சுத்திகரிப்பு 01 இனையும் 300 மணித்தியால சுத்திகரிப்பு 06 இனையும், 500 மணித்தியால சுத்திகரிப்பு 02 இனையும் MI – 17 உலங்குவானூர்திகளில் மேற்கொண்டிருந்தது.

(a) Qty 02 Mi-171SH உலங்குவானூர்திகள் 02 MINUSCA இல் பணியமர்த்தப்பட்டன.



(b) MINUSCA இற்கான சுழற்சியில் 08 ஆவது படைப்பிரிவுத் துருப்பினர்.



(16) <u>ஹெலிடுவர்ஸ் - இ.வி.ப. தளம், இரத்மலானை</u>. ஹெலிடுவர்ஸ் ஆனது MA-60 விமானங்கள் 02 இனை தனது படையணியில் கொண்டுள்ளது. இப் படையணியானது 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு வகையான சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொண்டது. இது வாராந்த சுத்திகரிப்புகள் 12 இனையும், 03 மாத சுத்திகரிப்பு 02 இனையும், 06 மாத சுத்திகரிப்பு 01 இனையும், 1000 மணித்தியால சுத்திகரிப்பு 01 இனையும், வாராந்த சுத்திகரிப்பு (விமானம் புறப்பட முன்) 06 இனையும், 02 வார சுத்திகரிப்பு (விமானம் புறப்பட முன்) 01 இனையும், 03 மாத சுத்திகரிப்பு (விமானம் புறப்பட முன்) 01 இனையும், வாராந்த காலாந்திர களஞ்சிய சுத்திகரிப்பு 83 இனையும், துருப்பிடித்தல் பரிசீலனை 17 இனையும், 02 வாராந்த காலாந்திர களஞ்சிய சுத்திகரிப்பு 42 இனையும், 01 மாத காலாந்திர சுத்திகரிப்பு 18 இனையும், 02 வருட காலாந்திர சுத்திகரிப்பு 02 இனையும், 03 மாத காலாந்திர சுத்திகரிப்பு 02 இனையும், 06 மாத தொடர்ச்சியான காலாந்திர சுத்திகரிப்பு 01 இனையும் மேற்கொண்டிருந்தது.

(17) <u>AEW - விமானம் மற்றும் விமானப் போக்குவரத்து தொடர்பான அபிவிருத்தி</u>

கீழ்வரும் பராமரிப்பு வேலைகள் 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் AEW இனால் மேற்கொள்ளப்பட்டன.

(a) <u>விசேட செயற்றிட்டம்</u>. இந்த அலகானது Bell 412 மற்றும் Bell 212 உலங்குவானூர்திகளில் 1000 மணித்தியால சுத்திகரிப்பு/ 5 ஆண்டு சுத்திகரிப்புகள் 02 இனை பூர்த்தி செய்திருந்ததுடன் Bell 212 உலங்குவானூர்திகள் 04 இல் 1,000 மணித்தியால/ 5 வருட சுத்திகரிப்புகள் நடைபெறுகின்றன.

(b) <u>நியம அறை</u>. இந்த அலகானது 344 படை அளவுதிருத்தங்கள், 212 பரிமாண அளவுதிருத்தங்கள், 221 முறுக்கு குறடு அளவு திருத்தங்கள் மற்றும் 615 புதிய அளவுகோல் அளவுதிருத்தங்கள் என்பவற்றை சகல விமானங்கள் தொடர்பிலும் மேற்கொண்டிருந்தது.

(c) <u>NTD ஆய்வுகூடம்</u>. இந்த அலகானது சகல விமானங்கள் தொடர்பிலும் 56 சுழல் மின்னோட்ட சோதனைகளையும், 581 காந்தத் துகள் பரிசோதனைகளையும் 12 மீயொலிச் சோதனைகளையும் 252 திரவ ஊடுருவி சோதனைகளையும் 02 விசுவல் சோதனைகளையும் 81 எக்ஸ் கதிர் சோதனைகளையும் நடத்தியுள்ளது.

(d) <u>மின்சாரப் பகுதி.</u> இந்த அலகானது சகல A/C மின் உபகரணங்கள் தொடர்பிலும் தீயணைப்பு ஒழுங்குபடுத்தல் அலகில் 01 பழுதுபார்ப்பையும் 01 கலவையற்ற விளக்கு பழுதுபார்ப்பையும், 02 எரிபொருள் மிகைப்பு எக்கியின் பழுதுபார்ப்பையும் 02 சிறுதுளை துருத்தியின் பழுதுபார்ப்பையும் 01 AN 32 B A/C தரையிறக்க

விளக்கின் பழுதுபார்ப்பையும் 01 மின்பிறப்பாக்கி கட்டுப்பாட்டுப் பெனலின் பழுதுபார்ப்பையும் 02 தரையிறக்க மற்றும் ஓடுதள விளக்கின் பழுதுபார்ப்பையும், 01 மின்பிறப்பாக்கி கட்டுப்பாட்டுப் பெனலின் பழுதுபார்ப்பையும் 02 தரையிறக்க விளக்கின் பழுதுபார்ப்பையும் 01 முன் - நிறுவல் சோதனை கருவியின் பழுதுபார்ப்பையும் 02 சிறுதுளை துருத்தி மோட்டாரின் பழுதுபார்ப்பையும் 01 RYS – 7 எரிபொருள் துணைப் பொருள்களின் பழுதுபார்ப்பையும் மற்றும் 01 மின்கல பகுப்பாய்வு கருவியின் பழுதுபார்ப்பையும் மேற்கொண்டுள்ளது.

(e) <u>பாதுகாப்பு உபகரணப் பகுதி.</u> இந்த அலகானது சகல விமானங்கள் தொடர்பிலும் 456 விமான உயிர் காப்பு அங்கிகளின் சுத்திகரிப்பையும் 1453 பயணிகள் உயிர் காப்பு அங்கிகளின் சுத்திகரிப்பையும் 32 பல இருக்கைகள் கொண்ட உயிர் காப்பு தெப்பங்களின் சுத்திகரிப்பையும் 27 பரசூட்டுகளின் சுத்திகரிப்பையும் 02 WD-3 மிதவைக் கட்டை வான்குடைகளின் சுத்திகரிப்பையும் 08 பணியாளர் உயிர்காப்பு பொதியின் சுத்திகரிப்புகளையும் 05 A/C தீயணைப்புப் போத்தல்களின் மீள்நிரப்புகைகளையும் 61 anti G suit களின் சுத்திகரிப்பையும் 07 பாதுகாப்பு கவசங்களின் சுத்திகரிப்பையும் மேற்கொண்டுள்ளது.

(f) <u>விமானப் பழுதுபார்ப்பு மற்றும் அழிவு மீட்புப் பகுதி</u>.
இந்த அலகானது Bell-212, Bell-412, AN-32B, Y-12, MI-17, C-130, Cessna-150, B 200, Bell 206 மற்றும் MA-60 விமானங்கள் தொடர்பில் 98 கட்டமைப்புசார் பழுதுபார்ப்புகளை மேற்கொண்டிருந்தது.

(g) <u>என்ஜின் பகுதி</u>. Bell 212/412 விமானங்களின் PT6-3B என்ஜின்களில் 21 பழுதுபார்ப்புகளையும் Y-12 விமானங்களின் PT 6A-27 என்ஜின்களின் 3 பழுதுபார்ப்புகளையும் எண்ணெய் பகுப்பாய்வுகள் 09 ஐயும் இதர வேலைகள் 08 இனையும் இந்தப் பகுதி செய்திருந்தது.

(h) <u>உதிரிப்பாகம், சக்கரம் மற்றும் தடுப்பு அலகுப் பகுதி</u>.
இந்த அலகானது Bell 412/212 விமானங்களில் 7 பழுதுபார்ப்பு வேலைகளையும் AN32 மற்றும் F-7 விமானங்களில் மூக்குப் பகுதி/ பிரதான சக்கரத்தின் வெளிப்புற உறைகளை மாற்றும் செயற்பாடுகள் 12 ஐயும் மேற்கொண்டிருந்தது.

(j) <u>கருவிகள் பகுதி</u>. இந்த அலகானது Bell 412/ 212/ 206, Y-12, AN-32, PT-6 விமானங்களில் 103 பழுதுபார்ப்பு வேலைகளையும் சகல விமானங்களினதும் விமான எடை மற்றும் சமநிலை தொடர்பான 36 வேலைகளையும் மேற்கொண்டுள்ளது.

(k) <u>சுழலிப் பகுதி</u>. இந்த அலகானது Bell 412/ 212/ 206 விமானங்களில் பிரதான/ வால் பகுதி சுழலி தகடுகளில் 10 எண்ணிக்கையிலான பழுதுபார்ப்புகளை மேற்கொண்டிருந்தது.

(l) <u>இணைந்த பகுதி.</u> இந்த அலகானது சகல விமானங்கள் தொடர்பிலும் இணைந்த பெனல் தொகுப்பில் 26 பழுதுபார்ப்புகளை மேற்கொண்டிருந்தது.

i. video scope மேம்படுத்தல் தொகுதியின் படங்கள்.



ii. உருவாக்கப்பட்ட யுனிவேசல் என்ஜின் பொருத்தியின் படம்.



(18) <u>ASW – விமானம் மற்றும் விமானப் போக்குவரத்து தொடர்பான நடவடிக்கைகளின் அபிவிருத்தி</u>

2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ASW இனால் கீழ்வரும் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

(a) <u>உதிரிப்பாக அலகு.</u> இந்த அலகானது Y-12II/IV, AN-32B, K-08, B-200, PT-06 மற்றும் C-150 விமானங்கள் தொடர்பில் 24 பழுதுபார்ப்பு/ சுத்திகரிப்பு/ பரிசீலனை/ முழுமைத் திருத்த வேலைகளை மேற்கொண்டிருந்தது.

(b) <u>மின் மற்றும் கருவிகள் பகுதி.</u> இந்த அலகனது PT 06, C-150, Bell 206, K-08, Y-12, B-200, Bell 212/412 மற்றும் Mi17 ஆகியன தொடர்பில் 52 பழுதுபார்ப்பு மற்றும் முழுமைத் திருத்த வேலைகளை மேற்கொண்டிருந்தது.

தொ. இல.	விபரம்	சுத்திகரிப்பு வகை	A/C வகை	வேலைகளின் எண்ணிக்கை	அண்ணளவான செலவுச் சேமிப்பு (ரூபா)
01	வான் தரவுக் கணினி	சாத்திய வள ஆய்வு	K-08	01	600,000.00
02	நிலைக்கூறு இன்வேட்டர்			04	14,000,000.00
03	ITT குறிகாட்டி			02	2,800,000.00
04	புகை கண்டறி கருவி		Bell-412/ 212	01	350,000.00
05	மாஸ்ட் TQ சிக்னல் கண்டிஷனர்			01	7,000,000.00
06	துருத்தி மோட்டார்			01	210,000.00
07	நீர் அழுத்த அளவுகோல்		MI-17	02	280,000.00
08	என்ஜின் எண்ணெய் P&T			02	1,155,000.00
09	எரிபொருள் அழுத்த ஆளி			06	2,520,000.00
10	கியர் பெட்டி எண்ணெய் வெப்பநிலை அளவுகோல்			01	630,000.00
11	முப்புள்ளி குறிகாட்டி			02	700,000.00
12	தூண்டல் அழுத்தக்			02	1,050,000.00

	கடத்திகள்				
13	DPD என்ஜின் வெப்பக் காற்று வால்வு			01	280,000.00
14	அவசர நிலை எச்சரிக்கைச் சமிக்ஞை அலகு			01	350,000.00
15	எரிபொருள் Qty prop			01	700,000.00
16	எரிபொருள் அடைப்பு வால்வு		Bell-206	01	525,000.00
17	கருவிக் கொத்து			01	1,750,000.00
18	எரிபொருள் அழுத்தக் குறிகாட்டி			01	280,000.00

அடஅட்டவணை – 8

(19) AOW – விமானம் மற்றும் விமானப் போக்குவரத்து தொடர்பான நடவடிக்கைகளின் அபிவிருத்தி.

கீழ்வரும் பராமரிப்பு வேலைகள் 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் AOW இனால் மேற்கொள்ளப்பட்டன.

(a) இயந்திரப் பழுதுபார்ப்பு வேலைப் பட்டறை F-7/K-8. இந்த அலகானது K-8/F, 7GS மற்றும் F-7GS இல் 29 பழுதுபார்ப்பு வேலைகளைச் செய்துள்ளது.

(b) சிறிய-பகுதிகள் பழுதுபார்ப்பு வேலைப் பட்டறை. இந்த அலகானது Y-12 விமானத்தில் 02 எரிபொருள் பனெல் பழுதுபார்ப்பு களையும் மேற்பரப்பு சீராக்கங்களையும் செய்துள்ளது.

(c) குழாய் அமைப்பு பழுதுபார்ப்பு வேலைப் பட்டறை F-7/ K-8. இந்த அலகானது F-7BS, F-7GS, Bell 206 ஆகியவற்றில் 03 குழாய் அமைப்பு பழுதுபார்ப்பு வேலைகளைச் செய்துள்ளது.

(d) E&I வேலைப் பட்டறை Y-12/ PT-6. இந்த அலகானது Y-12 மற்றம் PT-6 விமானங்கள் தொடர்பில் 17 பழுதுபார்ப்புகள் மற்றும் தொழிற்பாட்டுச் சோதனைகளை மேற்கொண்டுள்ளது.

(e) கம்பி பழுது நீக்கல் வேலைப் பட்டறை F-7/ K-8. இந்த அலகானது F-7GS மற்றும் K-8 இல் 27 பழுதுபார்ப்புகளை மேற்கொண்டுள்ளது.

(f) கட்டமைப்புப் பழுதுபார்ப்பு வேலைப்பட்டறை. இந்த அலகானது Y-12 விமானம் மீது 14 பழுதுபார்ப்புகளை மேற்கொண்டுள்ளது.

(g) இயந்திரப் பழுதுபார்ப்பு வேலைப்பட்டறை Y-12/ PT-6. இந்த அலகானது Y-12 மற்றும் PT-6 விமானங்களில் 13 பழுதுபார்ப்புகளை மேற்கொண்டுள்ளது.

(h) <u>விசேட உபகரண வேலைப் பட்டறை F-7/ K-8</u>. இந்த அலகானது F-7GS மற்றும் K-8 விமானங்களில் 8 பழுதுபார்ப்புகளை மேற்கொண்டிருந்தது.

i. 2022 ஆம் ஆண்டில் PT-6 விமானத்தில் செய்யப்பட்ட முழுமைத் திருத்த வேலைகள்.



ii. Y-12 விமானத்தின் முழுமைப் பழுதுபார்ப்பு.



iii. F-7 விமானத்தின் முழுமைப் பழுதுபார்ப்பு.




iv. K-8 விமானத்தின் முழுமைப் பழுதுபார்ப்பு.



(20) <u>UAV R&D நிலையம், கட்டுக்குருந்த – விமானம் மற்றும் விமானப் போக்குவரத்து தொடர்பான அபிவிருத்திகள்</u>.

கட்டுக்குருந்த UAV R&D நிலையமானது Searcher MK II Half Scale மற்றும் Lihiniya MK I என்னும் 02 UAV களை மொத்தமாகக் கொண்டிருக்கிறது. இந்த நிலையமானது 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 10 மணித்தியால சுத்திகரிப்புகள் 02 இனை மேற்கொண்டுள்ளது.

(a) விமானப் போக்குவரத்து விபர காட்சிப்படுத்தலும் பதிவு முறைமையும்.




(b) கையால் ஏவக்கூடிய பாதுகாப்பு UAV.




(c) தொலைதூர இயக்க துப்பாக்கி சுடுதல் பொறிமுறை



(d) இடர் நிவாரணப் பொறிமுறை.



(e) 'SOLIDWORKS' மென்பொருள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்.



(21) <u>பயிற்சி மற்றும் விமானப் போக்குவரத்து தொர்பான நடவடிக்கைகளில் TTS அபிவிருத்திகள்</u>.

இ.வி.ப. இன் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காகவும் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காகவும் விமான என்ஜின் தொழில்சார் பயிற்சியாளர்களின் அடிப்படை மற்றும் உயர்தரத் திறன்கள் மற்றும் செய்முறை அறிவை மேம்படுத்தும் பொருட்டு விமான என்ஜின் பணியாளர்களுக்கென தொழிற் பயிற்சிப் பாடசாலைானது புதிய செய்முறைப் பகுதியை மேம்படுத்தி புனரமைத்துள்ளது. புதிய செய்முறைப் பகுதியானது விமான என்ஜின் மற்றும் தொடர்புடைய முறைமையின் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு தொடர்பான செய்முறை அனுபவத்திற்கான வசதிகளை வழங்குவதற்காகத் தாபிக்கப்பட்டுள்ளது. மேலும், செய்முறைச் செயலமர்வுகள் பயிற்சிப் பகுதிச் சூழலிலேயே வழங்கப்படக்கூடியதாக இருப்பதால் விமான என்ஜின் தொழிற்பயிற்சிக்கான காலப்பகுதியை குறைப்பதற்கு முழுமையாக உபகரணமிடப்பட்ட செய்முறைப் பகுதியானது உதவும்.



d. <u>பொதுப் பொறியியல் பணிப்பகம்</u>.

(1) பொதுப் பொறியியல் பணிப்பகமானது பொதுப் பொறியியல் நடவடிக்கைகளுக்காக 2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ரூபா 1,438.23 மில்லியனை அதன் வருடாந்த நடவடிக்கைத் திட்டத்தில் எதிர்வு கூறியிருந்தது. இந்த ஒதுக்கீட்டிலிருந்து, கிடைக்கக்கூடிய திரவத்தன்மைக்கு இணங்க, பணிப்பகமானது 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதன் அத்தியாவசியப் பணிகளை முன்னெடுத்திருந்தது.

(2) <u>2022 ஆம் ஆண்டில் பொதுப் பொறியியல் நடவடிக்கைகளுக்கான செலவுகள்</u>.

2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பொதுப் பொறியியல் நடவடிக்கைகள் மீதான மொத்தச் செலவு ரூபா 756.84 மில்லியன் ஆகும். இது கீழ்வருவனவற்றை உள்ளடக்குகிறது.

(a) வாகனங்களின் பழுதுபார்ப்பு மற்றும் சுத்திகரிப்புக்காக ரூபா 238.45 மில்லியன் செலவு.

(b) வெடிமருந்துகளின் கொள்வனவு மற்றும் ஆயுதங்களுக்கான கொள்வனவு ரூபா 13.70 மில்லியன்

(c) இயந்திரப் போக்குவரத்திற்கான செலவு ரூபா 504.69 மில்லியன்

(3) விமானத்திற்கு தீந்தை பூசுதல்

(a) SMH 589 விமானத்தின் மறுசீரமைப்புடன் பூரணமாக தீந்தை பூசுதல்



(b) SMH-4418 மற்றும் SMH-4417 உலங்குவானூர்திகளில் தீந்தை கழன்ற இடங்களில் தீந்தை பூசப்பட்டதுடன் ஐ.நா. பணிக்காக அனுப்பப்படுவதற்கு முன்னர் உலங்கு வானூர்திகளில் UN குறியீடு இடப்பட்டது.



(c) SHT 556 Bell 206 ஜெற் ரேஞ்சர் உலங்குவானூர்திக்கு முழுமையாக தீந்தை பூசப்பட்டது.



(d) SMR-858/SCL-859 விமானத்திற்கு முதன்மை தீந்தைப் பூச்சும் முழுமையான தீந்தைப் பூச்சும்.



(4) விமான தரை உதவி உபகரணத்தின் பழுதுபார்ப்பு.

(a) PCBs இன் பழுதுபார்ப்பு உட்பட தரை மின்வலு அலகின் (GPU) இன் பாரிய பழுதுபார்ப்பு.



(5) வாகனங்களின் பாரிய பழுதுபார்ப்புகள்.

(a) (6000 LTR)-Tata 1212C தண்ணீர் பவுசர் பழுது பார்ப்பு



(b) Asia Wing மோட்டார் சைக்கிளின் என்ஜின் முழுமையாக பழுது பார்க்கப்பட்டதுடன் சைக்கிளின் ஓட்டை உடைசல்கள் சரிசெய்யப்பட்டு, முழுமையாக தீந்தை பூசப்பட்டது.



(c) G-5621 மற்றும் G-5606 Hero Hunk மோட்டார் சைக்கிள்கள் 02 இனை VIP கடமைகளுக்காக மாற்றஞ் செய்தல்.



(d) APC chassis இனைப் பயன்படுத்தி தண்ணீர் பவுசராக APc ஐ மாற்றுதல்.



(e) G-3657 பேருந்து பழுதுபார்ப்பு.



(f) G-6403 Bolero Turbo S/Cab இன் ஓட்டை உடைசல் சரிப்படுத்தலும் தீந்தை பூசுதலும்.



(g) G-3337 Isuzu D/Cab இன் முழுமைப் பழுதுபார்ப்பு.



(6) பொதுப் பொறியியலுடன் தொடர்புடைய மூலதனச் செயற்றிட்டம்.

(a) பெரிய பையின் தயாரிப்பு (Ea 700).



(b) வாகன விதானத்தின் தயாரிப்பு.



(c) யுத்த காப்புக் கவசத்தின் தயாரிப்பு (Ea 900).



(d) தேங்காய் மட்டை உரிக்கும் இயந்திரத்தின் உருவாக்கம்.




(e) கவசப் படையினரின் வாகனம் தயாரிப்பு.



(f) தும்பு மெத்தை உலர்த்தும் இயந்திரத்தின் தயாரிப்பு.



(g) தூசு சேகரிக்கும் இயந்திரத்தின் தயாரிப்பு



(h) ஒருங்கிணைந்த அறுவடை இயந்திரத்தை கொண்டு செல்லும் ட்ரக்டரின் மாற்றியமைப்பு.



(j) இ.வி.ப. குண்டுகள் வைத்திருக்கும் ஆயுத களஞ்சியத்திற்கு பொருத்தமான பெட்டிகளின் தயாரிப்பு.



(k) காற்றாலை பொறி ஒன்றின் உருவாக்கம்.



(m) பாலிஸ்டிக் தலைக்கவசங்களின் புதுப்பிப்பு.



(n) கழிவு முகாமைத்துவ மெஷின் இழுவைப் பெட்டியின் மாற்றியமைப்பு.



(7) மூலதன உபகரணக் கொள்வனவு

(a) தையல் இயந்திரம் 01 இன் கொள்வனவு.



(b) Over lock இயந்திரம் 01 இன் கொள்வனவு.



(c) காற்றழுத்த முறைமையின் கொள்வனவும் நிறுவலும்.




(8) ஆயுதக் கொள்வனவு

(a) 177 எயார் ரைபிள் 10 கொள்வனவு.



(b) 9mm தோட்டாக்கள் 1800 கொள்வனவு.



(c) Det Cord இன் 2000 மீற்றர் கொள்வனவு.



(d) 160 ஸ்கை டைவிங் கொள்வனவு.



(9) வாகனங்களின் கொள்வனவு.

(a) இ.வி.ப. இற்குத் தேவையான Forklift இன் கொள்வனவு (Mitsubishi FD 15 05 Ton).



(10) R&D செயற்றிட்டங்களின் விபரங்கள்.

(a) எடுத்துச் செல்லக்கூடிய hydraulic test-rig platform இன் தயாரிப்பு.



(b) லிஹினியா UAV களில் பயன்படுத்தப்படும் வான்வழி துப்பாக்கி சுடுதலுக்கான தொலைதூர triggering பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.



(c) இ.வி.ப. இன் கனரக வாகனம் / விசேட வாகனங்களுக்கான வாகன தடங்காட்டி முறைமை.



(d) துப்பாக்கியால் சுடும்போது சிறிய ஆயுதங்களின் பின்னடைவு சக்திகளை அளவிட விசேட துப்பாக்கி ஏற்றத்தை வடிவமைத்தலும் தயாரித்தலும்.



(e) 7.62 mm CH/ T56 துப்பாக்கிக்குப் பொருத்தப்பட்ட வெற்று தீயணைப்பு இணைப்பின் உருவாக்கம்.



(f) புதிய இலத்திரனியல் புல் வெட்டும் இயந்திரத்தின் உருவாக்கம்.



e. இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்புப் பொறியியல் பணிப்பகம்


(1) வருடாந்த நடவடிக்கைத் திட்டத்திற்கு (AAP) எதிரான செயலாற்றுகை மதிப்பீடு. 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில், இலத்திரனியல் மற்றும் தொலைத் தொடர்புப் பொறியியல் உபகரணங்களுக்காக ரூபா 304.67 மில்லியன் செலவிடப்பட்டது.

(2) 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்புகள் தொடர்பான பாரிய அபிவிருத்திச் செயற்றிட்டங்கள்.

(a) ஐ.நா. பணிக்காக கட்டமைப்புத் தொகுதிகளின் (TRC 899 TCAS முறைமை) கொள்வனவு.



(b) இரத்மலானை இ.வி.ப. தளத்திலுள்ள ஹெலிடுவர்ஸ் பிரிவில் உள்ள SCM-3501(4R-HTN) MA 60 விமானத்தின் EFIS-85N முறைமைக்கான உதிரிப்பாகம் கொள்வனவு.



(c) UHF FM Base Station இன் கொள்வனவு.



(d) இ.வி.ப. இல் டிஜிடல் குரல் பதிவு கருவிகளுக்கான SHT-8B/ PCI குரல் பதிவு அட்டைகளின் கொள்வனவு.



(e) DHQC அக்குரெகொடையில் பயன்படுத்துவதற்காக S4 IP Controller (Park Air) இன் கொள்வனவு.



(f) DHQC அக்குரெகொடையில் பயன்படுத்துவதற்காக RF கம்பிவடங்களின் கொள்வனவு.



(g) இ.வி.ப. தாபனங்களில் பயன்படுத்துவதற்காக மின்கல பகுப்பாய்வு கருவிகளின் கொள்வனவு.



(h) காவி வலையமைப்பு பகுப்பாய்வு கருவியின் கொள்வனவு.



(j) கையில் வைத்திருக்கக்கூடிய மின்கலங்களின் கொள்வனவு.



f. ஏற்பாட்டியல் பணிப்பகம்.

2022 ஆம் ஆண்டில் மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு.

தொ.இல.	விபரம்	தொகை (ரூபா மில்.)
01	படையினர் குடியிருப்பு உபகரணங்களின் கொள்வனவு	38.27
02	பரிமாறல் உபகரணங்களின் கொள்வனவு	29.88
03	ஏனைய பொருள்களின் கொள்வனவு	2.38

அட்டவணை – 9

g. நிருவாகப் பணிப்பகம்.

2022 ஆம் ஆண்டில் இ.வி.ப. இன் பொது நிருவாகம் தொடர்பில் உண்மையான செயலாற்றுகைகள் கீழ்வருமாறு. பொது நிருவாகம் தொடர்பான மொத்த ஒதுக்கீடு ரூபா 34,095.31 மில்லியனாக இருந்தது.

தொ. இல.	செயற்பாடு	அர்ப்பணிப்புத் தொகை (ரூபா மில்.)
01	சம்பளங்களும் கூலிகளும்	15,706.73
02	ஏனைய படிகள்	15,139.33
03	உள்நாட்டுப் பயணம்	20.63
04	தபால் கட்டணங்கள்	2.14
05	மின்சாரமும் நீரும்	707.65
06	இலங்கை போக்குவரத்து சபை பேருந்து பயண அனுமதி அட்டைகள்	22.26
07	ஆதனக் கடன் வட்டி	41.44
08	நட்டஈடு/ காப்புறுதி	18.22
09	ரணவிரு பெற்றாருக்கான படிகள்	290.95
10	ஓய்வூதியத் திணைக்களம்	459.21
11	மரணச்சடங்கு/ சட்ட சேவைகள்	1.79
12	அலுவலக உபகரணப் பழுதுபார்ப்பு	0.45
13	பொது அலுவலக உபகரணம்	1.75
14	காகிதாதிகள்	10.76
15	ஏனைய வழங்கல்கள்	0.23
16	வாடகை/ இறைகள்/ ஆதாய உரிமைகள்/ உள்ளூர் அதிகாரசபைகளுக்கான வரிகள்	4.50
மொத்தம்		**32,428.04**

அட்டவணை – 10

h. சிவில் பொறியியல் பணிப்பகம்.

(1) 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த நடவடிக்கைத் திட்டத்துடன் உண்மையான செயலாற்றுகையின் ஒப்பீடு கீழ்வருமாறு: மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினங்களின் ஒதுக்கீடுகளுக்கு எதிரான உண்மையான செலவினம்.

விபரம்	ஒதுக்கீடு (ரூபா மில்.)	செலவு (ரூபா மில்.)
மீண்டுவரும் செலவினம்	201.20	107.95
மூலதனச் செலவினம்	391.56	226.36
மொத்தம்	**592.76**	**334.31**

அட்டவணை – 11

(2) ஆண்டின் காலப்பகுதியில் சிவில் பொறியியல் பணிப்பகத்தால் கீழ்வரும் செயற்றிட்டங்கள் / பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

விபரம்	பூர்த்தியடைந்த செயற்றிட்டங்கள்	நடைபெறு பவை	தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்ட செயற்றிட்டங் கள்	பிற்போடப்பட்ட செயற்றிட்டங் கள்	மொத் தம்
2021 ஆம் ஆண்டிலிருந்து தொடரப்பட்ட செயற்றிட்டங்கள்	10	-	03	01	14
2022 ஆம் ஆண்டின் புதிய செயற்றிட்டங்கள்	-	02	-	25	27

அட்டவணை – 12

(a) இல. 02 கனரக போக்குவரத்துப் படையணிக்காக இரு மாடிகளைக் கொண்ட விமானக் கொட்டகை இணைப்புக் கட்டடத்தின் நிருமாணம் பூர்த்தி - ரூபா 10.50 மில்லியன் செலவில் இ.வி.ப. தளம் கட்டுநாயக்காவில் கட்டம் II (மீதி வேலைகள்).



(b) அதிகாரிகளின் வசிப்பிடக் கட்டட நிருமாணம் பூர்த்தி – ரூபா 15.95 மில்லியன் செலவில் ஏக்கல இலுள்ள இ.வி.ப. தொழிற் பயிற்சிப் பாடசாலையில் கட்டம் II (மீதி வேலைகள்).



(c) ரூபா 5.05 மில்லியன் செலவில் இ.வி.ப. நிலையம் கட்டுகுருந்தவில் அதிகாரிகளின் 02 ஒற்றைத் தள வசிப்பிடக் கட்டட (மீதி வேலைகள்) வேலைகள் பூர்த்தி.



(d) ரூபா 6.92 மில்லியன் செலவில் இ.வி.ப. நிலையம் பீதுருதலாகல இனால் முன்னாள் அதிகாரிகளுக்காக நுவரெலியாவில் அமைக்கப்பட்ட (மீதி வேலைகள்) விடுமுறை இல்லம் பூர்த்தி.



(e) ரூபா 5.78 மில்லியன் செலவில் இ.வி.ப. நிலையம் கொக்கலவில் முன்னாள் அதிகாரிகளுக்காக அமைக்கப்பட்ட (மீதி வேலைகள்) விடுமுறை இல்ல நிருமாணம் பூர்த்தி.



(f) ரூபா 7.85 மில்லியன் செலவில் ஏக்கலவில் உள்ள இ.வி.ப. தொழிற் பயிற்சிப் பாடசாலையில் 02 தளங்களைக் கொண்ட வகுப்பறைக் கட்டடம் (மீதி வேலைகள்) பூர்த்தி.



(3) கிராமிய அபிவிருத்திக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

விபரம்	பூர்த்தி செய்யப்பட்ட செயற்றிட்டங்கள்	நடைபெறுபவை	மொத்தம்
2021 ஆம் ஆண்டிலிருந்து தொடரப்பட்ட செயற்றிட்டங்கள்	08	-	08
2022 ஆம் ஆண்டில் புதிய செயற்றிட்டங்கள்	06	03	09

அட்டவணை – 13

(a) நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஒருங்கிணைப்பின் கீழ், பண்டாரவளை நகரில் வீதி நடைபாதையின் அபிவிருத்தி பூர்த்தி செய்யப்பட்டது.



(b) நீர்பாசனத் திணைக்களத்தின் ஒருங்கிணைப்புடன் 'கம சமக பிலிசந்திரக்' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 'மான வெவ' இன் புனரமைப்பு பூர்த்தி செய்யப்பட்டது.



p. இலங்கை விமானப் படை நிலையம், பீதுருதலாகல.

(1) 2022 சனவரி 04 இல் நுவரெலியாவிலுள்ள கிரகரி வாவியில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.





(2) 2022 மார்ச் 02 இல் Paynter சிறுவர் இல்லத்தில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.





(3) 2022 மார்ச் 02 இல் மரநடுகை நிகழ்வு இடம்பெற்றது.





(4) 36 ஆம் கட்ட 'குவன் மிதுதம்' செயற்றிட்டமானது 2022 யூலை 12 ஆந் திகதி ஹங்குராங்கெத்தையில் உள்ள தெனிக் வித்தியாதிலக ஆரம்பப் பாடசாலையில் நிறைவு செய்யப்பட்டது.





ஏ. இலங்கை விமானப் படை போர்ப் பயிற்சிப் பாடசாலை, தியத்தலாவ.

திகதி	செயற்றிட்ட விபரம்	நன்மை பெறுநர்
23.02.2022 தொடக்கம் 24.02.2022 வரை	கஹகொல்ல இலுள்ள கோப் சிட்டி ரெஸ்ட் இல் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.	கோப் சிட்டி ரெஸ்ட் ஐப் பயன்படுத்துவோர்
18.03.2022 தொடக்கம் 19.03.2022 வரை	ஆதம்ஸ் பீக் இல் துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டது. நிகழ்வு	சிவில் சமூகம்
01.04.2022 தொடக்கம் 30.04.2022 வரை	சாந்த ஈமட் செமினறி (ஹவாடன்) கிறிஸ்தவ ஆலயத்தில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டதுடன் மலசலகூட வசதி மேம்படுத்தப்பட்டு, ஆலய கட்டடமும் பழுதுபார்க்கப்பட்டது.	சிவில் சமூகம்
01.06.2022 தொடக்கம் 03.06.2022 வரை	சேவா வனிதா அலகின் 'குவன் மிதுதம்' செயற்றிட்டத்தின் கீழ் தியத்தலாவ தேசிய பாடசாலையில் இரு தளங்களைக் கொண்ட கட்டடம் புனரமைக்கப்பட்டது.	பாடசாலைச் சிறார்கள்

08.10.2022	ஹககொல்ல விகாரையில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.	சிவில் சமூகம்
08.10.2022	விகரஹல விகாரையில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.	சிவில் சமூகம்
11.10.2022	தியத்தலாவை, இ.வி.ப. யுத்தப் பயிற்சிப் பாடசாலையின் 70 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தியத்தலாவை நகரில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.	சிவில் சமூகம்
12.10.2022	தியத்தலாவை, இ.வி.ப. யுத்தப் பயிற்சிப் பாடசாலையின் 70 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தியத்தலாவை பொது வைத்தியசாலையில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.	சிவில் சமூகம்
13.10.2022	தியத்தலாவை, இ.வி.ப. யுத்தப் பயிற்சிப் பாடசாலையின் 70 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தியத்தலாவை ஆயுர்வேத வைத்தியசாலையில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.	சிவில் சமூகம்
14.10.2022	தியத்தலாவை, இ.வி.ப. யுத்தப் பயிற்சிப் பாடசாலையின் 70 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஸ்ரீ சுதர்ஷிவிசேட தேவையுடைய பிள்ளைகளுக்கான பாடசாலையில் மருத்துவ கிளினிக் உம் பல்மருத்துவ கிளினிக் உம் நடத்தப்பட்டன.	சிவில் சமூகம்
17.10.2022	தியத்தலாவ கத்தோலிக்க தேவாலயத்தில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.	சிவில் சமூகம்
10.12.2022	ஹல்கந்த விகாரையில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.	சிவில் சமூகம்
22.12.2022	கஹகொல்ல முஸ்லிம் பள்ளிவாசலில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.	சிவில் சமூகம்

அட்டவணை - 51

2.2 எதிர்காலக் கண்ணோட்டம்

'2021-2023 காலப்பகுதிக்கான நிறுவனத் திட்டத்தில்' உள்ள இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைவதற்காக இலங்கை விமானப் படை மூலோபாய இலக்குகளையும் மூலோபாய நோக்கங்களையும் ஆரம்பித்துள்ளது.

மூலோபாய இலக்குகள்	மூலோபாய நோக்கங்கள்
இலக்கு 01 **இலங்கை விமானப் படையின் பறப்புச் செயற்பாட்டு இயலுமையை அதிகரித்தலும் வலுப்படுத்தலும்.**	**நோக்கம் 1.1** இலங்கை வான்பரப்பினுள் ஏற்படுகின்ற எந்தவொரு வான் அச்சுறுத்தலையும் கண்டுபிடித்து, இனங்கண்டு, அழிப்பதற்கும் இலங்கையின் ADIZ இற்கு மேலாக எதிரி விமானங்களை நுழையவிடாமல் செய்வதற்குமான வான் பாதுகாப்பு இயலுமைகளை அதிகரித்தல்.
	நோக்கம் 1.2 இடைவெளியைப் பூர்த்தி செய்வதற்காக மூலோபாய அமைவிடங்களில் மேலதிக ராடார் அலகுகளை நிலைப்படுத்துவதன் மூலம் தற்போதுள்ள ராடார் உள்ளடக்கப் பரப்பை அதிகரித்தல்.
	நோக்கம் 1.3 நிகழ் நேர தகவல் / தரவு முகாமைக்கு மேலாக AMSCC மற்றும் ADC & CC இன் இயலுமையை அதிகரித்தல்.
	நோக்கம் 1.4 சிநேகபூர்வ படைகளுக்கும் சிவில் அதிகாரசபை (MACA) செயற்பாடுகளுக்கு இராணுவ உதவி தேவைப்படும் வேளையிலும் எல்லா காலநிலைகளிலும் இரவு பகலாக மூலோபாய, செயற்பாடுசார்ந்த மற்றும் உத்திசார்ந்த விமான இயலுமைகளை அதிகரித்தல்.
	நோக்கம் 1.5 VVIP/VIP பயண இயலுமைகளை அதிகரித்தல்.
	நோக்கம் 1.6 இருக்கக்கூடிய தளங்களின் பாவனைக்காக படைக்கலங்களின் தொடர்ச்சியான கிடைப்பனவை நிச்சயப்படுத்தல்.
	நோக்கம் 1.7 வானிலிருந்தும் தரையிலிருந்தும் தாக்கும் இயலுமையை மீட்டெடுத்தல்.
	நோக்கம் 1.8 இ.வி.ப. இன் பறப்புப் பயிற்சியை மேம்படுத்தல்.
	நோக்கம் 1.9 பணித்தொகுதியினரின் சேவைத் திறனை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நிலையான தரைவழி ஆதரவுச் சேவைகளின் கிடைப்பனவை நிச்சயப்படுத்தல்.
	நோக்கம் 1.10 தரை இயக்கத்தின் நிலையான கிடைப்பனவை உறுதிப்படுத்தல்.
இலக்கு 02 **EEZ உள்ளிட்ட இலங்கையின் ஆட்புல எல்லைக்கு மேலாக மூலோபாய மற்றும் உத்திசார்ந்த வான்வழிக் கண்காணிப்பு மற்றும் உளவு நடவடிக்கைகளை விருத்தி செய்தல்.**	**நோக்கம் 2.1** இடைவெளியைப் பூர்த்தி செய்வதற்காக மூலோபாய அமைவிடங்களில் மேலதிக ராடார் அலகுகளை நிலைப்படுத்துவதன் மூலம் தற்போதுள்ள ராடார் உள்ளடக்கப் பரப்பை அதிகரித்தல்.
	நோக்கம் 2.2 இலங்கையின் ஆட்புல எல்லைக்கு (EEZ உள்ளடங்கலாக) மேலாக சகல காலநிலைகளிலும் இரவு பகலாக கடல்சார் உளவுப் பணியின் இயலுமையை கையகப்படுத்தல்.
	நோக்கம் 2.3 உளவு வேலைகள் மற்றும் கண்காணிப்பு வேலைகளுக்கு மேலதிகமாக UAV களின் கொள்வனவு / சுதேச அபிவிருத்தி.
	நோக்கம் 2.4 நிகழ் நேர தகவல்/ தரவு முகாமைக்கு மேலாக BMC மற்றும் ADC & CC இன் இயலுமையை அதிகரித்தல்.

மூலோபாய இலக்குகள்	மூலோபாய நோக்கங்கள்
இலக்கு 03 **EW கிளையைத் தாபித்தலும் வலையமைப்பு மையப் போர்முறையை அறிமுகப்படுத்தலும்.**	**நோக்கம் 3.1** வான்வழி மற்றும் தரைவழி அடிப்படையிலான EW வசதியை கையகப்படுத்தல்.
	நோக்கம் 3.2 செயற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவதற்காக இ.வி.ப. மற்றும் சகோதர சேவைகளின் தரை அடிப்படையிலான மற்றும் வான்வழி உணரிகளை ஒன்றிணைத்தல்.
	நோக்கம் 3.3 இ.வி.ப. இன் EW நடவடிக்கைகளது ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பு க்காக ஒரு EW முகாமைப் பிரிவைத் தாபித்தல்.
இலக்கு 04 **முக்கிய விமானப் படைச் சொத்துக்கள் மற்றும் நிறுவல்களுக்கு முழுமையான படைப் பாதுகாப்பை வழங்குவதும் Vas மற்றும் VPs களுக்கான பாதுகாப்பை வழங்குவதும்.**	**நோக்கம் 4.1** MOD இனால் அழைப்பு விடுக்கப்படும் போது இ.வி.ப. இன் உட்புறம் மற்றும் வெளிப்புறத்திலுள்ள இ.வி.ப. இன் வான் மற்றும் தரைச் சொத்துக்கள் மற்றும் VAs / VPs இற்கான அடுக்குப் பாதுகாப்பு ஊடாக தரைப் பாதுகாப்பு இயலுமைகளை விருத்தி செய்தல்.
	நோக்கம் 4.2 தரை அடிப்படையிலான வான் பாதுகாப்பு முறைமைகளின் அபிவிருத்தி ஊடாக முக்கிய விமானப் படைச் சொத்துக்கள் மற்றும் நிறுவல்களுக்கு முற்றுமுழுதான தரைப் படைப் பாதுகாப்பை வழங்குதல்.
இலக்கு 05 **சகல காலநிலைகளிலும் இரவு பகலான நடவடிக்கைகளில் மிகையான அடைவுகளைப் பெறுவதற்காக இ.வி.ப. வான்களங்களின் மேம்படுத்தல்.**	**நோக்கம் 5.1** தரை அடிப்படையிலான வான் பாதுகாப்பு முறைமைகளின் அபிவிருத்தி ஊடாக முக்கிய விமானப் படைச் சொத்துக்கள் மற்றும் நிறுவல்களுக்கு முற்றுமுழுதான தரைப் படைப் பாதுகாப்பை வழங்குதல்.
	நோக்கம் 5.2 விமானப் போக்குவரத்து நியமங்களுக்கு இணங்க இ.வி.ப. வான்களங்களின் வழித்தட உதவிகள், தரையிறக்க உதவிகள், தீயணைப்பு, விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாடு மற்றும் தரை ஆதரவு வசதிகள் ஆகியவற்றின் அபிவிருத்தி.
	நோக்கம் 5.3 உரிய இ.வி.ப. விமானக் களங்களில் உள்ளகரீதியான விமானக் களப் பராமரிப்பு வசதிகளை மேம்படுத்தல்.
இலக்கு 06 **இயங்குமுறை வெளிகளை உயர்ந்தபட்சமாக தன்னலப்படுத்துகின்ற அதேவேளை இயங்குமுறை வெளிகளில் சிநேகப் படைகளின் சுதந்திரமான செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதும் எதிரிகள் அவற்றைப் பயன்படுத்துவதை/ துஷ்பிரயோகம் செய்வதைத் தடுத்தலும்.**	**நோக்கம் 6.1** போரியல் இணைய அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் ஆற்றலை விருத்தி செய்தலும் இயங்குமுறை வெளிச் சூழலைத் தன்னலப்படுத்தலும்.
	நோக்கம் 6.2 இ.வி.ப. இணைய வலையமைப்பைப் பாதுகாப்பதற்கான இணையப் பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரித்தலும் தற்போதிருக்கின்ற IT சேவைகளின் நம்பகத் தன்மையை மேம்படுத்தும்போது அதிகாரமளிக்கப் படாத அணுகலைத் தடுத்தலும்.
	நோக்கம் 6.3 இ.வி.ப. இணைய போரிடும் இயலுமையை வலுப்படுத்தும் பொருட்டு போரியல் உட்கட்டமைப்பு மற்றும் கட்டளைக் கட்டமைப்புகளை விரிவாக்கம் செய்தல்.
இலக்கு 07 **மேலதிக சேமநல நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக இ.வி.ப. இல் உயர் ஒழுக்கத்தையும்**	**நோக்கம் 7.1** இ.வி.ப. உறுப்பினர்களுக்கும் அவர்களது நேரடி குடும்ப உறுப்பினர்களுக்கும் மற்றும் ஓய்வுபெற்ற ஆளணியினருக்கும் நிதி மற்றும் சமூகப் பாதுகாப்பை வழங்குவதற்குப் பொறிமுறை ஒன்றைத் தாபித்தல்.
	நோக்கம் 7.2 புதிய எண்ணக்கருக்கள், நடைமுறைகள் மற்றும் முறைகளை அறிமுகப்படுத்தி, இ.வி.ப. இன் நிருவாக, சட்ட, ஏற்பாட்டியல்

மூலோபாய இலக்குகள்	மூலோபாய நோக்கங்கள்
குறைந்தளவான வரவின்மையையும் பேணுதல்.	முறைமைகளை மேம்படுத்தல்.
	நோக்கம் 7.3 மருத்துவ வசதிகள் மற்றும் சேவைகளைத் தொடர்ச்சியாக மேம்படுத்துவதன் ஊடாக இ.வி.ப. ஆளணியினருக்கும் அவர்களது நேரடி குடும்ப உறுப்பினர்களுக்கும் வழங்கப்படும் மருத்துவ சேவைகளை மேம்படுத்தல்.
	நோக்கம் 7.4 உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமங்களுடன் ஒத்திசைவான வகையில் விமானப் படையின் தொழில்சார் திறன்களை விருத்தி செய்தல்.
இலக்கு 08 **தேசிய அக்கறைக்கு உதவும் வகையில் இ.வி.ப. வளங்களை உத்தமமாக்கல்.**	**நோக்கம் 8.1** அரசாங்கத்தால் கோரப்படும் போதெல்லாம் தேசத்தைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்களில் துடிப்புடன் பங்குபற்றல்.
	நோக்கம் 8.2 இ.வி.ப., ஐ.நா. அமைதிகாக்கும் பணியில் ஈடுபடுவதை அதிகரித்தல்.
	நோக்கம் 8.3 தனியார் செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்கான ஒரு வழிமுறையாக வர்த்தகரீதியான பயணிகள் போக்குவரத்துச் செயற்பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபடல்.
	நோக்கம் 8.4 இயற்கை அனர்த்தங்களைத் தணிப்பதற்கான தரை நகர்வை அதிகரித்தலும் சிவில் சக்திக்கான உதவிக்கு ஆதரவளித்தலும்.
	நோக்கம் 8.5 அரசாங்கத்தால் கோரப்படும் போதெல்லாம் CBRNE அச்சுறுத்தல்களுக்கு எதிராக துடிப்புடன் பங்கேற்றல்.
	நோக்கம் 8.6 அரசாங்கத்தால் கோரப்படும் போதெல்லாம் வழமைக்கு மாறான பாதுகாப்பு அச்சுறுத்தல்களின்போது அரசாங்கத்திற்கு உதவுவதில் துடிப்புடன் பங்கேற்றல்.
இலக்கு 09 **வினைத்திறனை அதிகரிப்பதற்காகவும் தொழில்முறையை மேம்படுத்துவதற்காகவும் தற்போதுள்ள இ.வி.ப. இன் பயிற்சி முறைமைகள் மற்றும் நடைமுறைகளை மீளாய்வு செய்தல்.**	**நோக்கம் 9.1** மீளாய்வு செய்யப்பட வேண்டிய பகுதிகளை இனங்காணலும் தேவையான மாற்றங்களை நடைமுறைப்படுத்தலும்.
	நோக்கம் 9.2 தேசியரீதியிலும் உலகளாவிய ரீதியிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியங்களுக்கு இணங்க இ.வி.ப. பயிற்சிகளை நியமப்படுத்தல்.
இலக்கு 10 **இ.வி.ப. இன் படைக் கட்டமைப்பை சரியான அளவில் பேணுதலும், ஆட்சேர்ப்புத் திட்டத்தைத் திருத்துதலும் புதிய தொழினுட்பவியல்களை அறிமுகப்படுத்தலும்**	**நோக்கம் 10.1** நிறுவன இலக்குகளையும் நோக்கங்களையும் பயனுறுதிமிக்க வகையில் நிறைவேற்றுவதற்கு இ.வி.ப. மனித வளங்களை சரியான அளவில் பேணுதல்.
	நோக்கம் 10.2 எதிர்காலத்தில் சரியான அளவிலான நிறுவனத்தை நடத்திச் செல்வதற்காக ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளைத் திட்டமிடுதல்.
இலக்கு 11 **அதிநவீன ICT**	**நோக்கம் 11.1** நிகழ் நேர இலக்கு வகைப்படுத்தல் மற்றும் அடையாளங் காணலுடன்கூடிய கண்காணிப்பு மற்றும் உளவுபார்த்தல் இயலுமைகளை மேம்படுத்தல்.
	நோக்கம் 11.2 தொழிற்பாட்டுத் தீர்மானமெடுத்தல்

மூலோபாய இலக்குகள்	மூலோபாய நோக்கங்கள்
தொழில்நுட்பவியல் ஊடாக இ.வி.ப. இன் நிலைமை பற்றிய விழிப்பூட்டல் மற்றும் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்தல்	களுக்கும் (C2 மற்றும் முகாமைத்துவ சேவைகள், புலனாய்வு மற்றும் உளவு பார்த்தல், சூழ்ச்சி சேவைகள், ஏற்பாட்டியல் சேவைகள், ஆளணி சேவைகள், நிருமாண சேவைகள்) தகவல் இணைச் சேவைகளுக்கும் (பாதுகாப்பும் தளங்கள், GIS சேவைகள், தகவல் முகாமைத்துவம், தகவல் பாதுகாப்பு, தகவல் பரிமாற்றம், இணைப்புச் சேவைகள் மற்றும் சேவை முகாமைத்துவம்) இடையிலான இடைமுகத்தை விருத்தி செய்தல்.
	நோக்கம் 11.3 இராணுவ நடவடிக்கைகள் மற்றும் தொடர்பாடல் நோக்கங்களுக்காக ஒரு மூலோபாய தகவல் முகாமைத்துவத் தளத்தை விருத்தி செய்தல்.

Table - 52

3. 2022 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ஏசீஏ- எப்

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

பாதீட்டு 2022 ரூபா		குறிப்பு	உண்மை நிலை 2022 ரூபா	திருத்தப்பட்ட 2021 ரூபா	
	வருமானப் பெறுகைகள்				
-	வருமான வரி	1	-	-	ஏசீஏ-1
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
100,000,000	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	14,591,537	10,574,308	
100,000,000	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		14,591,537	10,574,308	
	வருமானமற்ற பெறுகைகள்				
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		36,887,567,000	39,161,497,000	ஏசீஏ-3
-	வைப்புகள்		33,984,559	49,491,164	ஏசீஏ-4
320,000,000	முற்பணக் கணக்குகள்		313,978,254	316,009,728	ஏசீஏ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
320,000,000	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		**37,235,529,813**	**39,526,997,892**	
420,000,000	**மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)**		**37,250,121,350**	**39,537,572,200**	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		31	2,810,324,026	
420,000,000	**தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)**		**37,250,121,319**	**36,727,248,174**	
	கழி : செலவினம்				
-	**மீண்டுவரும் செலவினம்**		-	-	
32,216,160,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	30,926,058,286	29,322,342,568	
10,513,200,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	6,439,889,649	6,195,787,813	ஏசீஏ-2(ii)
118,000,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	68,557,245	112,452,856	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	-	
42,847,360,000	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)**		**37,434,505,180**	**35,630,583,238**	
	மூலதனம் செலவினம்				
6,752,290,000	முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	3,433,365,915	4,154,965,013	
4,307,000,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	785,281,868	1,265,628,114	
-	மூலதன மாற்றல்கள்	12	-	-	ஏசீஏ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
500,000,000	திறன் விருத்தி	14	275,425,355	279,410,449	
713,000,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	87,874,045	406,884,548	
12,272,290,000	**மொத்த மூலதனம் செலவினம் (எ)**		**4,581,947,183**	**6,106,888,124**	
	வைப்புக் கொடுப்பனவுகள்		44,988,818	62,313,545	ஏசீஏ-4
400,000,000	**முற்பணக் கொடுப்பனவுகள்**		229,442,050	349,775,530	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
400,000,000	**மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)**		**274,430,868**	**412,089,075**	
55,519,650,000	**மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)**		42,290,883,231	42,149,560,437	
(55,099,650,000)	**டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)**		(5,040,761,913)	(5,422,312,263)	
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		(5,040,761,913)	(5,422,312,263)	ஏசீஏ-7
	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		-	-	ஏசீஏ-3
			(5,040,761,913)	(5,422,312,263)	

1

3.2 நிதி நிலைக் கூற்று

ஏசீஏ -பீ

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2022 ரூபா	2021 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	116,796,997,161	116,426,145,442
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	217,066,523	301,602,727
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**117,014,063,684**	**116,727,748,169**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		132,975,439	206,507,384
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		116,796,997,161	116,426,145,442
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ	-	
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	84,091,084	95,095,343
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**117,014,063,684**	**116,727,748,169**

பக்க இலக்கம் 01 முதல் 50 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 51 முதல் 91 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
செயலாளர்
பாதுகாப்பு அமைச்சு
திகதி : 28/11/2023

General Kamal Gunaratne (Retd)
WWV RWP RSP USP ndc psc MPhill
Secretary
Ministry of Defence
Defence Headquarters Complex
Sri jayawardenapura
Kotte

கணக்கீட்டு உத்தியோகத்தர்
தளபதி
இலங்கை விமானப்படை
திகதி : 21-02-2023

SK PATHIRANA
Air Marshal
COMMANDER OF THE AIR FORCE

பிரதான கணக்காளர்
பணிப்பாளர்(நிதி)
இலங்கை விமானப்படை
திகதி : 21/02/2023

H. A. U. Jayalath
Director (Finance)
Sri Lanka Accountants Service
Sri Lanka Air Force

3.3 காசுப் பாய்வுக் கூற்று

ஏசீஏ- சீ

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	
	2022 ரூபா	2021 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	14,591,537	10,574,308
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	3,270,441,883	4,683,480,928
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	36,887,567,000	39,161,497,000
முற்பணங்களை அறவிடல்	312,132,406	313,460,593
வைப்புக்களின் பெறுகை	33,984,559	49,491,164
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**40,518,717,384**	**44,218,503,993**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	38,872,402,171	38,892,101,321
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	-	-
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	809,537,609	909,508,455
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	31	2,810,324,026
முற்பணக் கொடுப்பனவு	227,988,366	347,877,131
வைப்புக் கொடுப்பனவு	44,988,818	62,313,545
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**39,954,916,996**	**43,022,124,477**
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**563,800,388**	**1,196,379,516**
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	11,001,344	13,363,145
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பொளதீக சொத்துக்களின் விற்பனை	989,698	8,065,092
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	**11,991,041**	**21,428,237**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	575,791,429	1,217,811,753
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**575,791,429**	**1,217,811,753**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(563,800,388)**	**(1,196,383,516)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	**(0)**	**(4,000)**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடுடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)	-	(4,000)
ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	4,000
டிசம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

3

3.4 நிதி நிலைப் பகுப்பாய்வுச் சுருக்கம்


a. நிதிசார் மீளாய்வு

இ.வி.ப. ஆனது 2022 ஆம் ஆண்டிற்கான மொத்த பாதுகாப்புச் செலவின பாதீட்டு ஏற்பாடாக ரூபா 55,119.65 மில்லியனை ஆரம்பத்தில் பெற்றிருந்தது. மேலதிக செயற்பாட்டுக் கிரயத்திற்காக ஆண்டின் காலப் பகுதியில் கூடுதல் ஏற்பாடாக ரூபா 116.06 மில்லியன் வழங்கப்பட்டது. எனவே, 2022 ஆம் ஆண்டில் மொத்த நிகர ஏற்பாடாக ரூபா 55,235.71 மில்லியன் காணப்பட்டது. ஆண்டிற்கான உண்மையான மொத்தப் பாதுகாப்புச் செலவினம் ரூபா 42,016.45 மில்லியன் ஆகும். இதில் ரூபா 37,434.51 மில்லியன் ஆனது மீண்டுவரும் செலவினங்களையும் ரூபா 4,581.95 மில்லியன் ஆனது மூலதனச் செலவினங்களையும் குறிக்கின்றன. எவ்வாறாயினும், 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த நிகர ஏற்பாடு 3.33% இனால் குறைவடைந்திருந்த அதே வேளை உண்மையான செலவினம் 0.67% இனால் உயர்வடைந்திருந்தது. ஆயினும், 2022 ஆம் ஆண்டின் ஒட்டுமொத்த பாதுகாப்புச் செலவினம் பாராளுமன்றத்தால் வாக்கு அளிக்கப்பட்ட மொத்த ஏற்பாடுகளினுள் தொடர்ந்தும் காணப்பட்டதுடன் கட்டுப்பாடுகள் மொத்தமும் இலங்கை நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டன.

மொத்த பாதுகாப்புச் செலவினத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுதல்

மொத்த பாதுகாப்புச் செலவினம்	2022 ஆம் ஆண்டு	2021 ஆம் ஆண்டு	வேறுபாடு
மொத்த நிகர ஏற்பாடு	55,235.71	57,140.85	(1,905.14)
மொத்தச் செலவினம்	42,016.45	41,737.47	278.98

அட்டவணை - 1



உரு - 1


b. நிதிச் செயலாற்றுகை

2022 ஆம் ஆண்டிற்கான இ.வி.ப. இன் கூட்டு மொத்த வருமானம் ரூபா 37,250.12 மில்லியனாக இருந்தது. இது ரூபா 14.60 மில்லியன் என்ற வருமானப் பெறுவனவுகளையும் ரூபா 37,235.52 மில்லியன் என்ற வருமானமற்ற பெறுவனவுகளையும் உள்ளடக்கியதாகும். 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கூட்டு மொத்த வருமானம் 5.79% இனால் குறைவடைந்திருந்தது.

முன்னைய ஆண்டிற்கு எதிரான கூட்டு மொத்த வருமானம்

வருமானம்	2022 ஆம் ஆண்டு	2021 ஆம் ஆண்டு	வேறுபாடு
கூட்டு மொத்த வருமானம்	37,250.12	39,537.57	(2,287.45)

அட்டவணை - 2



உரு – 2


(1) வருமானப் பெறுவனவுகள்

2022 ஆம் ஆண்டிற்கான இ.வி.ப. இன் வெறும் வருமானப் பெறுவனவுகளாக வரியற்ற வருமானமும் பிறவும் காணப்பட்டன. வரியற்ற வருமானமானது 2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ரூபா 100.00 மில்லியனாக தொடக்கத்தில் மதிப்பிடப்பட்ட விமான வாடகைகளை மாத்திரம் உள்ளடக்கியுள்ளது. எவ்வாறாயினும், ஆண்டின் காலப்பகுதியில் மதிப்பிடப்பட்ட பெறுமதியானது 2022 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 15.00 மில்லியனாகத் திருத்தப்பட்டிருந்தது. சேகரிக்கப்பட்ட மொத்த விமான வாடகை வருமானம் ரூபா 14.59 மில்லியனாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

எதிர்வுகூறப்பட்டதற்கு எதிரான உண்மை வருமானம்

வருமானக் குறியீடு	2022 ஆம் ஆண்டிற்காக திருத்தப்பட்ட பாதிட்ட வருமானம் (மில்.ரூபா)	2022 ஆம் ஆண்டிற்கான உண்மை வருமானம் (மில்.ரூபா)	வித்தியாசம் (மில். ரூபா)
20-03-02-16	15.00	14.59	0.41

அட்டவணை – 3



உரு - 3

(2) வருமானமற்ற பெறுவனவுகள்

2022 ஆம் ஆண்டிற்கான இ.வி.ப. இன் பிரதான பெறுவனவுகளாக இருப்பது ரூபா 37,235.53 மில்லியன் என்ற வருமானமற்ற பெறுவனவாகும். இது 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 2,291.47 மில்லியன் குறைவான தொகையாகும். வருமானமற்ற பெறுவனவுகளானவை திறைசேரி கட்டுநிதிகள், வைப்புகள், முற்பணக் கணக்கு என்பவற்றுக்கான தொகைகளான முறையே 36,887.57 மில்லியன், ரூபா 33.98 மில்லியன், ரூபா 313.98 மில்லியன் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.


(3) இ.வி.ப. இன் செலவுகள்

2022 ஆம் ஆண்டிற்கான இ.வி.ப. இன் மொத்தச் செலவினம் (பிரதான பேரேட்டுச் செலவினம் உள்ளடங்கலாக) ரூபா 42,290.88 மில்லியன் ஆகும். இது ரூபா 37,434.51 மில்லியன் மீண்டுவரும் செலவினங்களையும் ரூபா 4,581.95 மில்லியன் மூலதனச் செலவினங்களையும் ரூபா 274.43 மில்லியன் பிரதான பேரேட்டுச் செலவினங்களையும் உள்ளடக்கியுள்ளது. அதற்கிணங்க, 2022 ஆம் ஆண்டிற்கான இ.வி.ப. இன் மொத்தச் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 0.34% இனால் அதிகரித்துள்ளது.

நடப்பு ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டின் மொத்தச் செலவினம் (பிரதான பேரேட்டுச் செலவினம் உள்ளடங்கலாக)

செலவினம்	2022 ஆம் ஆண்டு	2021 ஆம் ஆண்டு	வித்தியாசம்
உண்மையான செலவினம்	42,290.88	42,149.56	141.32

அட்டவணை - 4



உரு – 4

(4) மீண்டுவரும் செலவினம்


2022 ஆம் ஆண்டிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இ.வி.ப. இன் மீண்டுவரும் செலவினம் ரூபா 42,847.36 மில்லியனானது ரூபா 32,216.16 மில்லியன் என்ற தனிப்பட்ட ஊதியங்களையும் ரூபா 10,631.20 என்ற ஏனைய மீண்டுவரும் கட்டணங்களையும் உள்ளடக்கியிருந்தது. 2022 ஆம் ஆண்டின் காலப்பகுதியில், ரூபா 116.06 என்ற கூடுதல் ஏற்பாடு வழங்கப்பட்டது. எனவே, மொத்த நிகர ஏற்பாடு ரூபா 42,963.42 மில்லியனாகக் காணப்பட்ட அதே வேளை உண்மையான செலவினமாக ரூபா 37,434.51 மில்லியன் காணப்பட்டிருந்தது. மொத்த மதிப்பீட்டிற்கும் அரசாங்க ஒதுக்கீடு ஊடாக நிதியளிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. திறைசேரிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட மொத்த மதிப்பிடப்பட்ட செலவானது பின்வரும் செலவின உருப்படிகள் தொடர்பானவை ஆகும்.

	ரூபா (மில்.)
தனிப்பட்ட ஊதியங்கள்	32,216.16
ஏனைய மீண்டுவரும் செலவினங்கள்	10,631.20
கூடுதல் ஏற்பாடு	116.06
திருத்தப்பட்ட மீண்டுவரும் ஏற்பாடுகள்	**42,963.42**

நடப்பு ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினம்

மீண்டுவரும் செலவினம்	2022 ஆம் ஆண்டு	2021 ஆம் ஆண்டு	வித்தியாசம்
மொத்த நிகர ஏற்பாடு	42,963.42	39,618.10	3,345.32
மொத்தச் செலவினம்	37,434.51	35,630.58	1,803.93

அட்டவணை – 5



உரு – 5


(5) மூலதனச் செலவினம்

(a) தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல், மூலதனச் சொத்துக்களைக் கொள்வனவு செய்தல், படையினர் மற்றும் சிவில் ஊழியர்களின் இயலுமையைக் கட்டியெழுப்பல் ஆகியவற்றை நோக்காகக் கொண்டு இலங்கை விமானப் படை மொத்த மூலதனச் செலவினத்திற்காக இல.ரூபா 12,272.29 மில்லியன் ஏற்பாட்டை பெற்றிருந்தது. 2022 ஆம் ஆண்டிற்கான மொத்த நிகர ஏற்பாடு 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 29.96% இனால் குறைவடைந்திருந்தது.

நடப்பு ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டின் மூலதனச் செலவினம்

மூலதனச் செலவினம்	ஆண்டு 2022	ஆண்டு 2021	வித்தியாசம்
மொத்த நிகர ஏற்பாடு	12,272.29	17,522.75	(5,250.46)
மொத்தச் செலவினம்	4,581.95	6,106.89	(1,524.94)

அட்டவணை – 6



உரு - 6

(b) மேலும், 2022 ஆம் ஆண்டிற்கான உண்மையான செலவினம் இல.ரூபா 4,581.95 மில்லியனாக இருந்தது. இது 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 24.97% குறைவைக் காட்டுகிறது.

(c) மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும்

சாத்தியமானளவு சொத்துத் தளத்தினைப் பராமரித்தல் மற்றும் அதன் தடையற்ற செயற்பாடு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு, ஆண்டின் காலப்பகுதியில் மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக இலங்கை விமானப் படை ஆரம்பத்தில் இல.ரூபா 6,752.29 மில்லியனை எதிர்வுகூறியிருந்தது. 2022 ஆம் ஆண்டிற்கான உண்மையான செலவினம் இல.ரூபா 3,433.37 மில்லியனாக இருந்தது.

(d) மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு

வாகனங்கள், தளபாடமும் அலுவலக உபகரணமும், பொறி, இயந்திரம் மற்றும் உபகரணம், கட்டடமும் கட்டமைப்புகளும் ஆகியவற்றை வழங்குவதைப் பிரதானமாகக் கொண்டு இல.ரூபா 4,307.00 மில்லியன் தொகையை நிலையான சொத்துக்களின் கொள்வனவுக்காக இலங்கை விமானப் படை ஆரம்ப ஏற்பாடாக செய்திருந்தது. 2022 ஆம் ஆண்டிற்கான உண்மையான செலவினம் இல.ரூபா 785.28 மில்லியனாக இருந்தது.

(e) இயலுமையைக் கட்டியெழுப்பல்

மூலதனச் செலவுகளின் கீழ், இலங்கை விமானப் படை இயலுமையைக் கட்டியெழுப்புவதற்கு இல.ரூபா 500.00 மில்லியனை ஆரம்பத்தில் எதிர்வுகூறியிருந்தது. 2022 ஆம் ஆண்டிற்கான உண்மையான செலவினம் இல.ரூபா 275.43 மில்லியனாக இருந்தது.


(f) ஏனைய மூலதனச் செலவினங்கள்

மூலதனச் செலவினங்களின் கீழ், இலங்கை விமானப் படை மொத்த நிகர ஏற்பாடான இல.ரூபா 713.00 மில்லியனுக்கு எதிராக ஏனைய மூலதனச் செலவினமாக இல.ரூபா 87.87 மில்லியன் தொகையைச் செலவழித்திருந்தது.

(g) மீண்டுவரும் செலவின வகைகளின் கீழ் ஏற்பாடுகளுக்கு எதிரான செலவினம்.

உருப்படி விபரம்	நிகர ஏற்பாடு (இல.ரூபா மில்.)	செலவினம் (இல.ரூபா மில்.)	வேறுபாடு
தனிப்பட்ட ஊதியங்கள்	32,230.16	30,926.06	1,304.10
ஏனைய மீண்டுவருதல்கள்	10,733.26	6,508.45	4,224.81
மொத்தம்	**42,963.42**	**37,434.51**	**5,528.91**

அட்டவணை - 7




உரு – 7

(h) வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்குகள் தொடர்பில் மூலதனச் செலவின வகைகளின் கீழ் ஏற்பாடுகளுக்கு (ஒவ்வொரு நோக்கக் குறியீடு) எதிரான செலவினம்.

நோக்கக் குறியீடு	உருப்படி விபரம்	நிகர ஏற்பாடு (இல.ரூபா மில்.)	செலவினம் (இல.ரூபா மில்.)	வேறுபாடு (இல.ரூபா மில்.)
	மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும்			
2001	கட்டடங்களும் கட்டமைப்புகளும்	130.00	62.72	67.28
2002	பொறி, இயந்திரம் மற்றும் உபகரணம்	6,462.29	3,286.27	3,176.02
2003	வாகனம்	160.00	84.37	75.63

	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு			
2101	வாகனம்	2,206.00	145.14	2,060.86
2102	தளபாடமும் அலுவலக உபகரணமும்	61.00	36.30	24.70
2103	பொறி, இயந்திரம் மற்றும் உபகரணம்	1,854.00	491.57	1,362.43
2104	கட்டடங்களும் கட்டமைப்புகளும்	186.00	112.27	73.73
	இயலுமையைக் கட்டியெழுப்பல்			
2401	ஊழியர் பயிற்சி	500.00	275.43	224.57
	ஏனைய மூலதனச் செலவினம்			
2509	ஏனையவை	713.00	87.88	625.12
மொத்தம்		**12,272.29**	**4,581.95**	**7,690.34**

அட்டவணை – 8




உரு – 8

(j) முற்பண "B" கணக்குகள் தொடர்பில் குறித்துரைக்கப்பட்ட எல்லைகளுக்கு எதிரான உண்மையான தொகைகள்.

இலங்கை விமானப் படை அரச உத்தியோகத்தர்களுக்கு கடன்களை வழங்குவதற்காக முற்பணக் கணக்கு ஒன்றைக் கொண்டுள்ளது. 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில், இ.வி.ப. முற்பணக் கணக்கின் குறித்துரைக்கப்பட்ட எல்லைகளுடன் இணக்கமாகச் செயற்பட்டிருந்தது. இதன் செயற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

விபரம்	நடப்பு ஆண்டில் குறித்துரைக்கப்பட்ட எல்லை (ரூபா மில்.)	நடப்பு ஆண்டின் உண்மையான பெறுமானம் (ரூபா மில்.)	வித்தியாசம் (ரூபா மில்.)
இல: 22401 முற்பணக் கணக்கு "B"			
உயர்ந்தபட்ச செலவின எல்லை	400.00	227.99	172.01
குறைந்தபட்ச பெறுவனவு எல்லை	310.00	312.13	(2.13)
உயர்ந்தபட்ச பற்று எல்லை	400.00	217.07	182.93

அட்டவணை – 9



உரு – 9

(k) 2022 ஆம் ஆண்டிற்கான இ.வி.ப. நிதிக் கூற்றுக்கள்

2022 ஆம் ஆண்டிற்கான இ.வி.ப. இன் நிதிக் கூற்றுக்கள் கணக்கீட்டு உத்தியோகத்தராலும் (AO) பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராலும் (CAO) முறையே 2023 பெப்ரவரி 21, 27 ஆந் திகதிகளில் அதிகாரமளிக்கப்பட்டன.

3.5 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

அறிக்கையிடலின் அடிப்படை

1) **அறிக்கையிடல் காலப்பகுதி**

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2022 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

2) **அளவீட்டுக்கான அடிப்படை**

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

3) **வருமானத்தை அடையாளங்காணுதல்**

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

4) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு**

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.


5) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்**

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

6) **காசு மற்றும் காசுக்கு சமமானவை**

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2022 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

3.6 வருமானச் சேகரிப்பின் செயலாற்றுகை.



ஏசீஏ - 1

2022 டிசம்பர் 31 இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான வருமானக் கூற்று

அரசிறை கணக்கீட்டு உத்தியோத்தர்: விமாப்படை தளபதி
செலவின தலைப்பு இல:224

ரூபா

அரசிறை குறியீடு	வருமானத் தலைப்பு	குறிப்பு	வருமான மதிப்பீடு (1)		வருமானத்தைத் திரட்டுதல் (2)			நிலுவை வருமானங்களை திரட்டுதல் (3)	வருமானத்திலிருந்து மீளச்செலுத்துதல் (4)			(5)
			மூல மதிப்பீடு	திருத்திய மதிப்பீடு	தொடர்புடைய அமைச்சினால்/ திணைக்களத்தினால்திரட்டப்பட்டது	ஏனைய அமைச்சினால்/ திணைக்களத்தினால்திரட்டப்பட்டது (Table 66/SA-21)	மொத்தம்		காசாக	தவறுகளைத் திருத்துதல்	மொத்தம்	2022 இற்குரிய தேறிய வருமானம்
			1(i)	1(ii)	2(i)	2(ii)	2(iii)=2(i)+2(ii)	(3)	4(i)	4(ii)	4(iii)=4(i)+4(ii)	5=2(iii)+(3)-4(iii)
2003.02.16	விமான வாடகை வருமானம்	4	100,000,000	15,000,000	14,604,398	-	14,604,398	-	-	12,862	12,862	14,591,537

பிரதான கணக்காளர்
பணிப்பாளர்(நிதி)
இலங்கை விமானப்படை
திகதி: 21/02/2023
H. A. U. Jayalath
Director (Finance)
Sri Lanka Accountants Service
Sri Lanka Air Force

வருவாய்க் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கையொப்பம்
தளபதி
இலங்கை விமானப்படை
திகதி: 21-02-2023
SK PATHIRANA
Air Marshal
COMMANDER OF THE AIR FORCE

7

அட்டவணை – 10

3.7 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை.

(ரூபா மில்.)

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் ஒரு வீதாசாரமாக ஒதுக்கீட்டின் பயன்பாடு
	ஆரம்ப	இறுதி		
மீண்டுவரும	42,847.36	42,963.42	37,434.51	87.13%
மூலதனச	12,272.29	12,272.29	4,581.95	37.34%

அட்டவணை - 11

3.8 நி.ஒ.விதி 208 இன் பிரகாரம், ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் ஒரு முகவராக செலவுகளுக்கான ஒதுக்கீடுகளின் வழங்கல்

தொ. இல.	அமைச்சு / திணைக்களத்திடமிருந்து பெற்ற ஒதுக்கீடு	ஒதுக்கீட்டின் நோக்கம்	ஒதுக்கீடு (ரூபா)	உண்மையான செலவினம் (ரூபா)	இறுதி ஒதுக்கீட்டின் ஒரு வீதாசாரமாக ஒதுக்கீட்டின் பாவனை
01	பாராளுமன்றம்	02 - M 300 RTK ட்ரோன்கள் கொள்வனவு	9,724,000.00	7,000,000.00	71.99%
02	புத்தசாசனம், சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு	தீகவாப்பிய ரஜமகா விகாரை – அம்பாறை, அட்டாளைச்சேனை	5,000,000.00	4,999,402.00	99.99%
03	பாதுகாப்பு அமைச்சு	தீயணைப்பு செயற்றிட்டம் - இடர் முகாமைத்துவப் பிரிவு (தலைப்பு இல. 442 இலிருந்து மாற்றப்பட்டது)	161,280.00	161,280.00	100%
		இடமாற்றங்கள் - சேமநல நிகழ்ச்சித் திட்டங்கள் - ரணவிருமாபிய	293,118,000.00	290,953,424.00	99.26%
04	அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு	அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பட்டதாரிப் பயிலுநர்களின் சம்பளம்	596,310.00	550,025.00	92.24%
		அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பட்டதாரிப் பயிலுநர்களின் சம்பளம்	289,700.00	267,240.00	92.25%
05	இலங்கை கடற்படைத் திணைக்களம்	கடற்படை வாகனங்களுக்கு எரிபொருள் வழங்குதல்	44,500.00	44,500.00	100%
		கடற்படை வாகனங்களுக்கு எரிபொருள் வழங்குதல்	44,500.00	44,500.00	100%
06	பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, இராஜாங்க அமைச்சு	பாதுகாப்புப் பாடசாலை – கொழும்பு	1,580,000.00	-	-
07	பேரிடர் மேலாண்மை பிரிவு - பாதுகாப்பு அமைச்சகம்	தீயணைப்பு செயற்றிட்டம் - இடர் முகாமைத்துவப் பிரிவு (தலைப்பு	182,275.00	-	-

தொ. இல.	அமைச்சு / திணைக்களத்திடமிருந்து பெற்ற ஒதுக்கீடு	ஒதுக்கீட்டின் நோக்கம்	ஒதுக்கீடு (ரூபா)	உண்மையான செலவினம் (ரூபா)	இறுதி ஒதுக்கீட்டின் ஒரு வீதாசாரமாக ஒதுக்கீட்டின் பாவனை
		இல. 103 இலிருந்து மாற்றப்பட்டது)			
08	மாநில வாகன ஒழுங்குமுறை அமைச்சகம், பேருந்து போக்குவரத்து சேவைகள் மற்றும் ரயில் பெட்டிகள் மற்றும மோட்டார் கார் தொழில்துறை	மீண்டுவரும் மாற்றல்கள் - பயண ஆணைச்சீட்டு (தலைப்பு இல. 117 இற்கு மாற்றப்பட்டது)	33,000,000.00	-	-
09	போக்குவரத்து மற்றும் அதிவேக நெடுஞ்சாலைகள் அமைச்சு	மீண்டுவரும் மாற்றல்கள் - பயண ஆணைச்சீட்டு (தலைப்பு இல. 117 இலிருந்து மாற்றப்பட்டது)	33,000,000.00	22,262,943.00	67.46%
10	ஓய்வூதியத் திணைக்களம்	மாற்றல்கள் - சேமநல நிகழ்ச்சித் திட்டங்கள் (இறப்பு, அங்கவீனப் படி)	473,650,000.00	459,207,846.00	96.95%
		மாற்றல்கள் - சேமநல நிகழ்ச்சித் திட்டங்கள் (பணிக்கொடை)	24,046,449.50	24,046,450.00	100%

அட்டவணை - 12

3.9 நிதிசாரா சொத்துக்கள் அறிக்கையிடல் பற்றிய செயற்பாடுகள்

(ரூபா மில்.)

சொத்து குறியீடு	குறியீட்டு விபரம்	2022.12.31 இல் உள்ளபடியான கணக்கெடுப்பு சபை அறிக்கையின் படி மீதி	2021.12.31 இல் உள்ளபடியான நிதிநிலை அறிக்கையின்படி மீதி	இன்னும் கணக்கிற் கொள்ளப் படாதவை	அறிக்கையிடல் முன்னேற்றம் (வீதாசாரமாக)
9151	கட்டடமும் கட்டமைப்புகளும்	கணக்கெடுப்பு நடைபெறுகிறது	14,829.93	Nil	100%
9152	இயந்திரமும் உபகரணமும்		63,977.81	Nil	100%
9153	காணி		37,360.46	Nil	100%
9154	அருவச் சொத்துக்கள்		-	-	-
9155	உயிரியல் சொத்துக்கள்		-	-	-
9160	புத்துருவாகும் வேலைகள்		628.79	Nil	100%
9180	குத்தகைச் சொத்துக்கள்		-	-	-

அட்டவணை - 13

3.10 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

எனது இல: DEF/D/SLAF/22/25 **26 மே 2023**

விமானப்படைத் தளபதி
இலங்கை விமானப் படை

தலை 224 - 2022 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதிக்கான இலங்கை விமானப் படையின் நிதி அறிக்கைகள் தொடர்பான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 11 (1) இன்படியான கணக்காய்வாளர் அதிபதியின் சுருக்க அறிக்கை.

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 தகைமைபெற்ற அபிப்பிராயம்

தலை 224 - 2022 டிசெம்பர் 31 இலான நிதி நிலைக் கூற்று, அதனுடன் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப் பாய்வுகள் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2022 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான இலங்கை விமானப் படையின் நிதிக் கூற்றுக்களினது கணக்காய்வானது 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பினது உறுப்புரை 154(1) இலுள்ள ஏற்பாடுகளை அடியொற்றி எனது வழிகாட்டல்களின் கீழ் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்த அறிக்கையானது 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 11(1) பிரிவுக்கு இணக்கமான வகையில் இலங்கை விமானப் படைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட இந்த நிதிக் கூற்றுக்களுடன் தொடர்புடைய எனது கருத்துரைகளையும் அவதானிப்புகளையும் உள்ளடக்கியுள்ளது. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 10 உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பினது உறுப்புரை 154(6) இன் பிரகாரம், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையானது உரிய நேரத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

எனது அபிப்பிராயத்தில், நிதிக் கூற்றுக்கள், இந்த அறிக்கையின் பந்தி 1.6 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர, பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுடன் இணக்கமான வகையில் 2022 டிசெம்பர் 31 இலான இலங்கை விமானப் படையின் நிதி நிலை மற்றும் அதன் நிதிசார் செயலாற்றுகை மற்றும் முடிவடைந்த காலப்பகுதிக்கான அதன் காசுப் பாய்வுகளில் உண்மையான மற்றும் நியாயமான பார்வையைத் தருகிறது.

1.2 தகைமைபெற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

நான் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (SLAuS) இணங்க கணக்காய்வை முன்னெடுத்துள்ளேன். நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்புப் பற்றி இந்த அறிக்கையிலுள்ள கணக்காய்வாளரின் பொறுப்புகள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்குப் போதுமானதும் பொருத்தானதும் என நம்புகின்றேன்.

1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் ஆகியோரின் பொறுப்புகள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணக்கமாகவும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 38 இன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படியும் உண்மையையும் நியாயமான பார்வையையும் பிரதிபலிக்கின்ற நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதையும் மோசடி மற்றும் வழுக்கள் காரணமாக ஏற்படும் பொருண்மைப் பிறழ்கூற்றுக்களின்றி நிதிக்

கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதையும் இயலச் செய்வதற்குத் தேவையான பயனுறுதிமிக்க உள்ளகக் கட்டுப்பாட்டை உறுதிசெய்வது கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 16(1) இன்படி, வருடாந்த மற்றும் காலவரன்முறையான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை இயலச் செய்வதற்காக இலங்கை விமானப் படையானது அதன் சகல வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் ஏடுகள் மற்றும் பதிவுகளைப் பேணுதல் வேண்டும்.

உபபிரிவு 38 (1) (c) இன்படி, இலங்கை விமானப் படையின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயனுறுதிமிக்க உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை செயற்படுத்தப்படுவதையும் முறைமையின் பயனுறுதித்தன்மையை கண்காணிப்பதற்காக காலாந்தர மீளாய்வுகள் முன்னெடுக்கப்படுவதையும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க முறைமை பயனுறுதிமிக்க வகையில் முன்னெடுக்கப்படுவதற்குத் தேவையான திருத்தங்களையும் செய்தல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது நோக்கமானது மோசடி மற்றும் வழுக்கள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மை பிறழ்கூற்றுக்கள் ஏதுமற்ற நிதிக் கூற்றுக்கள் பற்றிய நியாயமான உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தையும் உள்ளடக்கிய கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதுமாகும். நியாயமான உறுதிப்பாடு என்பது உயர் மட்ட உறுதிப்பாடு ஒன்றாக இருக்கின்றதாயினும் பொருண்மை பிறழ்கூற்றொன்று காணப்படும்போது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நடத்தப்பட்ட கணக்காய்வொன்று அதனை எப்போதும் கண்டறியும் என்பதை உத்தரவாதப்படுத்தாது. மோசடி மற்றும் வழுக்களிலிருந்து பிறழ்கூற்றுக்கள் எழக்கூடும் என்பதுடன் அவை தனித்தனியாகவோ அல்லது மொத்தமாகவோ இருந்தால், இந்த நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் எடுக்கப்பட்ட பயனர்களின் பொருளாதார முடிவுகளை அவை பாதிக்குமென்று நியாயமானளவு எதிர்பார்க்கலாம்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க, நான் தொழில்முறையான தீர்மானத்தை எடுத்திருப்பதுடன் கணக்காய்வு நெடுகிலும் தொழில்முறையான சந்தேகங்களையும் பேணியுள்ளேன். அத்துடன் நான் :

- மோசடி அல்லது வழு காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மை பிறழ்கூற்று இடர்களை இனங்கண்டு மதிப்பிட்டு, அத்தகைய இடர்களுக்கு பதிலளிக்கக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்து செயற்படுத்தியுள்ளதுடன் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றை வழங்குவதற்கான போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளையும் பெற்றுக்கொண்டுள்ளேன். மோசடியில் கூட்டு, ஏமாற்றுதல், வேண்டுமென்றே விடுபாடுகளைச் செய்தல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளை மீறுதல் போன்றவை அடங்குவதால் மோசடியின் விளைவாக ஏற்படும் ஒரு விளைவையும்விட பொருண்மை பிறழ்கூற்றினைக் கண்டறியாத இடரானது அதிகமானதாக இருக்கிறது.
- சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய புரிதல் பெற்றுக் கொள்ளப்பட்டது எனினும் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித்தன்மை மீதான எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்தும் நோக்கம் இல்லை.
- வெளிப்பாடுகளை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களின் உள்ளடக்கம் மற்றும் கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்ட பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகளின் நியாயமானதும் பொருத்தமானதுமான முன்வைப்பை மதிப்பீடு செய்துள்ளேன்.
- ஒட்டுமொத்தமான நிதிக் கூற்றுக்களின் முன்வைப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகளின் நியாயமான மற்றும் பொருத்தமான முன்வைப்பை மதிப்பீடு செய்துள்ளேன்.

எனது கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட கணிசமானளவு கண்டறிதல்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் மற்றும் பிற கண்டறிதல்கள் என்பன தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6(1)(d) இனால் தேவைப்படுத்தப்பட்டதன்படி, நான் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றேன்.

(a) நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் ஒத்துப்போகிறது,

(b) முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

தொடர்புப் பந்தி	கணக்காய்வு அவதானிப்பு	பரிந்துரை
2021 ஆம் ஆண்டு அறிக்கையின் 154.6 இன் 1.5(b)	2011 நவெம்பர் 30 ஆந் திகதிய இலங்கை விமானப் படை கட்டளை இல. 852 இன் பந்தி இல. 5 தொடர்பில்: விமானப்படைத் தலைமையகம், தளங்கள்/ நிலையங்கள் மற்றும் அலகுகளில் உள்ளக நிதியம் தொடங்கப்பட்டிருந்தது. இந்த நிதியங்களின் செயற்பாட்டிற்காகவும் இந்த நிதியங்கள் ஊடாக செயற்படுத்தப்பட்ட வருமானம் ஈட்டும் செயற்றிட்டங்களுக்காகவும் இலங்கை விமானப் படையின் பௌதிக மற்றும் மனித வளங்கள் பயன்படுத்தப் பட்டிருந்தன. இந்த உள்ளக நிதியங்கள் நிதி ஒழுங்குவிதி இல. 154 இன் பிரகாரம் சட்டநியதி நிதியங்களாக ஆரம்பிக்கப்படாததால், இந்த நிதியங்களின் தொழிற்பாடுகள் திறைசேரி மற்றும் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டின் கீழ்க் காணப்படாமை அவதானிக்கப்பட்டது.	2016 யூன் 24 ஆம் திகதி நடைபெற்ற பொதுக் கணக்குகள் குழுவின் கூட்டத்தில் வழங்கப்பட்ட கட்டளைகளின்படியும், இலங்கை சனநாயகச் சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படியும், வருமானம் ஈட்டும் செயற்றிட்டங்களின் நடவடிக்கைகள் தொடர்பில் பாராளுமன்ற மேற்பார்வையை ஒழுங்குபடுத்துவதற்கான பொறிமுறை ஒன்றை உருவாக்குவது கட்டாயமானதாகும்.

1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 மூலதனச் செலவினம்

பாகிஸ்தான் கடன் வரிசையிலிருந்து நி.ஒ.விதி 66/69 மாற்றல்களின் கீழ் ஆயுதம் ஏந்திய கார்களை (APC-15) கொள்வனவு செய்தற்காகப் பெறப்பட்ட ஒதுக்கீட்டில் ரூபா 15,795,903 இந்திய கடன் வரிசையின் கீழ் ரேடார் முறைமைக்கான உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

1.6.2 முற்பணக் கொடுப்பனவு

தாபன விதிக் கோவையின் அத்தியாயம் xxiv இன் பிரிவு 4 இன் படி முழுத் தொகையையும் திரும்பப் பெறுவதற்கு முன்னர் ஓய்வு பெற்ற/ இறந்த/ பதவியை விட்டு வெளியேறிய அதிகாரிகளின் முற்பண மீதிகள் உத்தரவாதிகள் அல்லது பின்னுரித்தாளிகளிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும் என்ற போதிலும் 207 அதிகாரிகளின் 05 வருடங்களுக்கான கடன்களின் நிலுவைத் தொகை ரூபா 8,267,831 ஆக இருந்தது.

1.6.3 நடைமுறையல்லாச் சொத்துக்கள்

நி.ஒ.விதி 109 இன்படி, 03 விமானங்களின் இழப்புகள் மற்றும் சேதங்களை பதிவழிப்புச் செய்வதற்கான அங்கீகரிக்கப்பட்ட தொகை ரூபா 453,434,468 ஆகும். பதிவழிப்புச் செய்யப்பட்டிருந்த தொகை ரூபா 368,179,200. எனவே வித்தியாசம் ரூபா 85,255,268 ஆக உள்ளது. இதற்கு மேலதிகமாக, பதிவழிப்புச் செய்ய அங்கீகரிக்கப்பட்ட தொகை ரூபா 132,614,647 ஆக இருந்த போதிலும் பதிவழிக்கப்பட்டிருந்த தொகை ரூபா 147,387,349 ஆகக் காணப்பட்டது. இதனால் மேலதிக தொகை ரூபா 14,772,702 பதிவழிக்கப்பட்டிருந்தது.

2. நிதிசார் மீளாய்வு

2.1 வருமான முகாமை

(a) நிதி ஒழுங்குவிதிகள் 85 (1) (c) இன் பிரகாரம், வருமான மதிப்பீடுகளைத் தயாரிக்கும்போது, முறையான மற்றும் துல்லியமான வகையில் வருமான மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்ற போதிலும், மதிப்பீட்டு ஆண்டிலும் அதேபோன்று கடந்த 6 வருட காலப்பகுதியிலும் விமானங்களின் வாடகைக் கட்டண வருமானத்திற்கான 20-03-02-16 என்ற வருமானக் குறியீட்டு இலக்கத்தின் கீழான வருமான மதிப்பீடுகள் வீழ்ச்சியடைந்திருந்ததுடன் வருமான மதிப்பீடுகளைத் தயாரிக்கும்போது 33 சதவீதம் முதல் 91 சதவீதம் வரை குறைக்கப்பட்டு, திருத்தப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக, 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வருமான ஈட்டங்கள் 24 சதவீதத்திலிருந்து 94 சதவீதம் வரை பாதகமான வகையிலான வீழ்ச்சியுடன் மாறுபட்டிருந்தது.

(b) நி.ஒ.விதி 128 (2) (e) இன்படி, விமானங்களுக்குரிய வருமான நிலுவைகளை வசூலிப்பதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் விசேட நடவடிக்கைகளை விரைவாக எடுக்க வேண்டும் என்ற போதிலும் ரூபா 12,674,073 தொகையானது வசூலிக்கப்படவில்லை என்பதுடன் இந்த நிலுவைகள் 4 தொடக்கம் 19 வருடங்கள் வரை காணப்படுகிறது. அதைத் தவிர, ரூபா 3,612,665 இனை வசூலிப்பதற்காக 02 தனியார் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதும் எவ்வித சான்றுகளும் இல்லாத காரணத்தால் தடைப்பட்டிருக்கிறது.

(c) இரத்மலானை இலங்கை விமானப் படைத் தளத்திலுள்ள விமானப்படை அருங்காட்சியகத்தினால் 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சம்பாதிக்கப்பட்ட ரூபா 21,303,078 மொத்த வருமானத்தில் அரசாங்கம் நட்டமடைந்த தொகை ரூபா 18,912,131 ஆகக் காணப்பட்டது.

2.2 செலவின முகாமைத்துவம்

2022 ஏப்ரல் 26 ஆந் திகதியிடப்பட்ட 3/2022 ஆம் இலக்க பொதுத் திறைசேரிச் செயலாளரின் தேசிய பாதீட்டு சுற்றுநிருபத்தின் பந்தி இல. 02 இன்படி, சகல அரசாங்க நிறுவனங்களிலும் பொதுச் செலவினங்களை கடுமையாகக் கட்டுப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும், வெளிநாட்டுப் பயிற்சி பயணங்களுக்காக நோக்கக்

குறியீடு 224-1-1-1102 இன் கீழ் ரூபா 8,342,043 செலவு செய்யப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக, மீளாய்வு ஆண்டில் மே தொடக்கம் ஆகஸ்ட் மாதம் வரையிலான காலப்பகுதியில் வெளிநாட்டுப் பயிற்சிப் பயணங்களுக்காக 224-1-1-2401 என்ற வாக்கின் கீழ் ரூபா 31,246,205 செலவு செய்யப்பட்டிருந்தது.

2.3 விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்காமை

சட்டத் தொடர்பு		அவதானிப்பு
(a)	2021 அக்டோபர் 26 ஆந் திகதிய 2021/02 ஆம் இலக்க அரச கணக்குகளுக்கான வழிகாட்டியின் பிரிவு 4.5	அறிக்கையிடப்படாத எந்தவொரு அர்ப்பணிப்பும் அல்லது பொறுப்பும் 2022 ஆம் ஆண்டில் தீர்க்கப்படக்கூடாது என்ற போதிலும் முன்னைய ஆண்டில் அர்ப்பணிப்புப் பதிவேட்டில் உள்ளடக்கப்படாதிருந்த 04 சம்பவங்கள் தொடர்பில் மொத்தமாக ரூபா 1,703,403 பொறுப்புக்கள் 2022 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டுள்ளன.
